
# ஜலசமாதி



ஏ. எஸ். உபைத்துல்லா

# ஜலசமாதி

(சிறுகதைத் தொகுப்பு)

ஏ.எஸ்.உபைத்துல்லா

வெளியீடு:

வானவில் வெளியீட்டகம்

## நூல் விபரப் பட்டியல்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | ஜலசமாதி |
| இலக்கிய வகை | : | சிறுகதைத் தொகுப்பு |
| பிரதிகள் | : | 1000 |
| முதற் பதிப்பு | : | 2008 |
| பக்கங்கள் | : | 108 |
| ஆசிரியர் | : | ஏ.எஸ்.உபைத்துல்லா |
| முகவரி | : | 672, நொக்ஸ் வீதி, மூதூர் - 04 |
| அட்டைப்படம் | : | எம். முகம்மது நபீஸ் |
| வெளியீடு | : | வானவில் வெளியீட்டகம் |
| அச்சகம் | : | அஸ்ரா பிரின்டர்ஸ் பிரைவேட் லிமிடட்<br>43, திருஞானசம்பந்தர் வீதி,<br>திருக்கோணமலை.<br>026-2227498, 0714200251 |
| விலை | : | ரூபா. 200.00 |
| ISBN | : | 978-955-1098-13-1 |

# மண்ணைத் தொட்டுத் தீட்டிய உயிரோவியங்கள்

அழகிய புதுக்கவிதைகளில் இடம்பெறுவது போன்றதொரு சொற்பிரயோகம் ஜலசமாதி. நீரிலே ஒரு சமாதியா? அது எப்படி சாத்தியமாகும்? என்ற கேள்விகளோடுதான் இச்சிறுகதையை எவரும் வாசிக்கத் தொடங்குவர்.

திருகோணமலைக்கும் மூதூருக்குமிடையே பயணிகளை ஏற்றி வந்த லோஞ் பாதாள மலையருகே கவிழ்ந்து நூற்றுக்கும் மேற்பட்டோரைப் பலி கொண்ட சோகச் சம்பவத்தை கருவாகக் கொண்டே மகுடக் கதை எழுதப்பட்டுள்ளது.

விடயத்தைக் கேள்வியுற்ற அயற்கிராமங்களைச் சேர்ந்த தமிழ், சிங்கள இனங்களெல்லாம் மூதூர் ஜெட்டியை நோக்கி வந்து குவிகின்றனர். இரவிரவாக அழுது புலம்புகின்றனர். அதற்குள் முரண்பாடுகள் தொலைந்து சகோதர உணர்வு மேலோங்குகின்றது.

றெசீன் மாஸ்டரை முக்கிய பாத்திரமாகக் கொண்டு ஜனாப்.ஏ.எஸ்.உபைத்துல்லா அவர்கள் கதையை நகர்த்தியிருக்கும் பாங்கு சொல்ல முடியாத வேதனையை மனதில் அப்பிச் செல்கிறது.

நிர்மாண பொறியியற்றுறை உலகளாவிய ரீதியில் வெகுவாக விருத்தியடைந்துள்ள நிலையில், திருமலைக்கும் மூதூருக்கும் இடையே பாலம் அமையவேண்டுமென மூதூர் பகுதிவாழ் மக்கள் எதிர்பார்க்கிறார்களென்றால், அது ஒன்றும் நடைமுறைச் சாத்தியமற்ற விடயமல்ல. இருந்தும் தலைமுறை தலைமுறையாக அது ஒரு அழகிய கனவாகவே இருந்து வருகின்றது.

கதாசிரியரின் தேடல், பார்வை, பதிவு அனைத்துமே பிறந்த மண்ணோடு ஒன்றிப் போயிருப்பது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலான கதைகள் கடல் வாழ்வையும், சூழலையும் பகைப்புலமாகக் கொண்டுள்ளன. கடலின்குழந்தைகள், வாழத் துடிப்பவர்கள், சம்பிரதாயங்கள், ஜலசமாதி, நிழலைத் தேடி, மரணத்தீவு. எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும், இன்னுமொரு சுனாமி வந்தால்... போன்ற கதைகளைக் குறிப்பிடலாம்.

பாரம்பரியமாகக் கடற்றொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டு வாழ்ந்த மக்களின் இன்றைய அவல நிலை மிகவும் யதார்த்தமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது. கடல் மீது சுதந்திரமாகச் சென்று மீன் பிடிக்கும் நிலை இன்றில்லை. கடல், எல்லை, நேரம், நாள் கட்டுப்பாடு அந்தமக்களின் பொருளாதாரத்தை படுமோசமாகப் பாதித்தது, அன்றாட வாழ்க்கைக்கே அல்லாடவேண்டிய நிலைக்குத் தள்ளியது.

தமிழ்த்தேசியப் போராட்டமும், யுத்த சூழ்நிலையும் எப்படியெப்படியெல்லாம் ஊடுருவி, இந்த மக்களின் வாழ்வை சின்னாபின்னப்படுத்தி, எதிர்காலத்தை கேள்விக் குறியாக்கியுள்ளதென்பதை பல்வேறு கதைகள் கலை நயத்தோடு வெளிப்டுத்துகின்றன.

கடற்றொழிலின் நுட்பமான பல்வேறு அம்சங்களை தொட்டுச் செல்கிறார் கதாசிரியர். சுல்லாக்கட்டு பற்றிய விபரிப்பும் நம்பிக்கையோடும் தைரியத்தோடும் அதனைப் பயன்படுத்த முனைந்து ஏற்படும் துன்பமும் நெஞ்சை உசுப்புகிறது.

கிழக்குக் கரையில் பாரை, சூரை,கொடுவா பிடிபடும், வெண்டையன் கல்லில் - கருங்கன்னிப் பாரையும், சோமுந்திரியப்பாரில் துள்வண்டும் ... இப்படி எங்கெங்கு என்னென்ன

மீன் வகைகள் பிடிபடும் விபரித்திருப்பது, எவ்வளவு ஈடுபாட்டுடன் இக்கதைகளை எழுதியுள்ளார் என்பதை தெளிவாக்குகின்றது.

'வாழத்துடிப்பவர்கள்' என்ற சிறுகதை இன்னொரு வகையில் சிறப்புற்று நிற்கிறது. தேசிய ஒற்றுமை, சமாதானம் பற்றி அளவுக்கதிகம் பேசப்படும் காலமிது. இன்று எந்தக் கோணத்தில் பார்த்தாலும் தேசிய ஒற்றுமைக்கு குந்தகமான செயற்பாடுகளே காணப்படுகின்றன.

இக்கதையிலே நாவலடிக்கிராமம் பேசப்படுகிறது. கடற் பிராந்தியத்திற்குள் அமைந்துள்ள இந்தக் கிராமம் அண்மைக் காலத்தில் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. மாற்று மதக் கலாசாரங்களை மதித்து எப்படி அன்னியோன்யமாக வாழமுடியும் என்பதற்கு இக்கிராமம் முன்னுதாரணமாகிறது.

இப்படியான கிராமங்கள் மூதூரில் மட்டுமென்ன எல்லா இடங்களிலும் உருவாகி, நாம் யாசிக்கும் ஒருமைப்பாடு நிறைய வேண்டுமென்ற உணர்வு மனதில் எழும் வேளையில், யுத்தமயச் சூழல் நாவலடிக் கிராமத்தை எப்படித் துவம்சம் செய்கிறதென்பதை படித்துக் கண்கலங்க நேர்கிறது.

'வாயில்லாப் பூச்சிகள்' குறிப்படத்தக்க இன்னொரு சிறுகதை. கிராம சபையின் கீழ் தோட்டி வேலை பார்ப்போரின் வீட்டுப் பிரச்சினை இங்கு பேசப்படுகிறது.

அதே தொழிலைச் செய்யும் தோட்டியின் மகன் முறைப்படி விண்ணப்பித்தும் அவனுக்கு வீடு கிட்டவில்லை. கொஞ்சம் படிப்பு வாசைன உள்ளவர்களைக் கண்டாலே அவர்களையும் எதிரிகளாகவே பாரக்கும் கிராமியச் சூழல் எங்கிருந்தோ அழைத்து வந்து

குடியமர்தத்தப்பட்டவர்கள் மூலம் சுய முயற்சியால் அமைத்துக் கொண்ட அவனது வீடு 'அசிங்கம்' என்ற பெயரில் அடித்து நொருக்கப்படுகிறது.

இதற்காக நடவடிக்கை எடுத்தும் பிரயோசனம் இல்லை. நேரடியாகவே போராட்டத்தில் இறங்கவேண்டும் என்று இளரத்தம் துடிக்கின்றது.

"அவனது சிந்தனை என்றைக்கொருநாள் அந்த வாயில்லாப் பூச்சிகளை மனிதராக்கத்தான் போகிறது" என்று கதாசிரியர் முடிப்பதன் மூலம் போராட்ட உணர்வை வெளிப்படுத்துகின்றார்.

முதலாளிமாரால் ஏமாற்றப்படும் பிரச்சினைகள் பேசப்பட்டு சுயமான உழைப்பால் அவர்கள் உயர்வதையும் ஏமாற்றுப் பேர்வழிகள் வீழ்ச்சியடைவதையும் 'மண்ணின் மகன்' என்ற கதை சொல்கிறது.

அண்மையில் ஏற்பட்ட கடற்பேரலை அனர்த்தம் மூதூர் மக்களையும் விட்டு வைக்கவில்லை. அடிமேல் அடியாய் அந்த மக்கள் அனுபவிக்கும் துன்பங்கள் தொடர்கதைதான். நிவாரண முத்திரை பெறுவதற்காக ஓடித் திரியும் அகதிகளில் அவனும் ஒருவன். அவனுக்கோ கிட்டுவதாயில்லை. 'கடற்றொழிலாளியில்லை' என்ற காரணம் சொல்லி மறுக்கப்படுகிறது.

அவன் என்ன செய்வான். நான்கு உருப்படிகளுக்கு சோறு போடவேண்டிய நிலையில் திக்கு முக்காடுகிறான்.

கிரமசேவகரிடம் முன்னும் பின்னும் அலைந்து எடுத்த முயற்சிகளெல்லாம் தோல்வியே தழுவின. கிராமசேவகர் தில்லுமுல்லுச் செய்து எப்படியாவது பணம் சேர்ப்பதில் கண்ணாயிருக்கின்றார்.

இறுதியாக, "இன்னொரு சுனாமி வந்தால் நிச்சயம் உனக்கு நிவாரண முத்திரை தருவே ன்." என்று சொல்லி விட்டு சைக்கிளில் பறந்து விடுகிறார்.

எவ்வளவு இலேசாகச் சொல்லிவிட்டுப் போகிறார் பாருங்கள்.

'இன்னொரு சுனாமி வந்தா அது நிச்சயமா எங்களைத் தாக்காது' என்று மனதுக்குள் கறுவிக் கொள்கிறான் அவன்.

ஒரு படைப்பாளி தனது மண் மீது கொள்கின்ற பற்று இருக்கிறதே, இதைத்தவிர அவனது படைப்புக்கு ஊட்டமளிக்கக் கூடிய சக்தி வேறெதுவுமில்லை. மண்ணின் வரலாறு, பண்பாடு, பாரம்பரியங்ககள், நம்பிக்கைகள், சடங்குகளில் தோய்ந்தனவாக, தான் பிறந்த மண்ணுக்குப் பங்களிப்புச் செய்யும் வேட்கை கொண்டவனாக எழுத்தாளன் அமைகின்றபோதுதான் ஒவ்வொரு மூச்சுக் காற்றும் அங்கே இலக்கியமாக முடியும்.

ஏ.எஸ்.உபைத்துல்லா, தன் மண்ணின் மீது கொண்டுள்ள பற்றும் பாசமும் அசைக்கமுடியாதென்பதை அவரது சிறுகதைகள் யாவுமே பறைசாற்றுகின்றன. ஆன்றாட வாழ்வும் அவலங்களும் பிரச்சினைகளும் மிகத் துல்லியமாகப் பேசப்படுகின்றன. ஓவ்வொரு வார்த்தையையும் கூட மிக நிதானமாகக் கையாண்டுள்ளார்.

கதைக் கருக்களும் தொனிப் பொருளும் கதா மாந்தர்கள் எழுப்பும் உணர்வலைகளும் ஒரு பக்கமிருக்க, கதை நிகழ்வுகளோடு வெளிப்படுகின்ற கலாசாரக் கூறுகள் வாசகனுக்கு மேலதிக அடைவாக அமைகின்றது.

உபைத்துல்லாவின் யதார்த்தமான பாத்திரப்படைப்புக்களான மீராசாய்பு, அப்புஹாமி, தங்கராசா, இபுராகிம், சேகுவன் முதலானவர்கள் வாசகர்களோடு நீண்ட காலம் உறவாடக் கூடியவர்களென்பது சர்வ நிச்சயம்.

ஏ.எஸ்.உபைத்துலால மூதூர் மண்ணிலே அதுவும் கடற்றொழிலாளர்களுக்கு நெருக்கமாகப் பிறந்து வளர்ந்தவர். இளவயதிலிருந்தே இலக்கிய வாசகனாகத் தன்னை நிலை நாட்டிக் கொண்டவர். ஆசிரியராக, அதிபராக கால் நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கடமையாற்றுபவர். அனர்த்தங்களையும் யுத்தச் சூழலையும் நேரடியாக அனுபவித்தவர். இந்திய வெளியீடான தீபம், கலைமகள் முதல் இலங்கைப் பதிதிரிகை, சஞ்சிகைகளில் தொடர்ந்து எழுதி வருபவர். சிறுகதை, நாவல், கவிதை தொடர்பாக ஆய்வுகளும், கல்விக் கட்டுரைகளும் நிறையவே எழுதியவர். ஆக்க இலக்கியத்திற்காக பல்வேறு பரிசுகளைத் தட்டிக் கொண்டவர். இத்தகைய பரந்த அனுபவப் பின்னணியைக் கொண்டிருந்தமை யால்தான் சிறப்பான சிறுகதைகளை எழுதி அவற்றைத் தொகுக்க முடிந்துள்ளது.

இலங்கைத் தமிழ்ச் சிறகதைகளைப் பற்றி பேசும்போது கிழக்கிலங்கையிலிருந்து முன்னெழுகின்ற படைப்பாளின் வரிசையில் மூதூரைச் சேர்ந்த வ.அ.இராசரத்தினம் முக்கியமானவர். சாகித்ய மண்டலப் பரிசு பெற்ற அவரது 'தோணி'யும் கடல் வாழ்வையே காட்டுகின்றது.

ஏ.எஸ்.உபைத்துல்லா ஆரவாரமோ, ஆர்ப்பாட்டமோ செய்யாமல், மேதாவித்தனம் பேசாமல், அமைதியாக, அடக்கமாக, ஏதோ எழுதினேன் எப்படியோ வெளியிட்டேன் என்றில்லாமல் இப்பணியைச் செய்து முடித்துள்ளார். மூதூர் மக்களின் சமகால வாழ்வையும்

வரலாற்றையும் ஆவணமாக்கி எதிர்காலச் சந்ததியின் கையிலே கொடுத்துள்ளார்.

புதுமை புதுமையென்று பிலாக்கணம் வைக்கவில்லை. உருவம், உள்ளடக்கம் என்று அலட்டிக் கொள்ளவில்லை. புதிய சித்தாந்தங்கள், நவீனத்துவங்கள் என்று விளங்கியும் விளங்காமலும் பீற்றிக் கொள்ளவில்லை. திடீர் திடீர் என்று வால் முளைப்பதாக, கொம்பு முளைப்பதாக கதைகளில் மாயா ஜாலம் காட்டவில்லை.

இயல்பான ... யதார்த்தமான... உண்மையான கதைகளை ஏ.எஸ்.உபைத்துல்லா எழுதியுள்ளார். மண்ணில் மண(ன)ம் வைத்துத் தீட்டிய சித்திரங்களாக இவை அமைந்துள்ளன. வெறும் கை தட்டலையும் பாராட்டுக்களையும் எதிர்பார்ப்பது அவரது நோக்கமல்ல. ஒரு தார்மீகக் கடப்பாட்டை எழுத்தாற்றல் மூலம் அவர் சாதித்துள்ளார்.

பேச்சு வழக்குடன் கூடிய வளமான வசன நடை இவருக்குக் கைவரப் பெற்றுள்ளதால் எதிர்காலத்தில் சிறுகதைகள் மாத்திரமல்ல நாவல்கள் கூட எழுதி, மூதூர் மண்ணுக்கும் இலங்கை ஆக்க இலக்கியத் துறைக்கும் பங்களிப்புச் செய்வாரென நிச்சயமாக எதிர்பார்க்கலாம்.

வாழ்த்துக்கள்

**திக்குவல்லை கமால்**

104, அட்டுளுகம

பண்டாரகம

2008.05.30

# என்னுரை

இலக்கியம் என்பது மனிதனின் ஆத்மா என்று நம்புபவன் நான். சாதாரண பாமர மக்களின் வாழ்வினது பார்வையாளனாக இல்லாமல்– பங்காளியாக இருந்த எனக்கு கண்ணெதிரே கதைகள் வாழ்வாகத் தெரிந்தன. இவற்றை நான் கதைகளாக எழுதியுள்ளேன்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் மூதூருக்கு ஓர் அழியாத இடமுண்டு. அம்மண்ணின் பகைப்புலத்தில் கருக்கொண்ட இக்கதைகளில் அவர்களது வாழ்வு, சம்பிரதாயங்கள், அவலங்கள், மனிதநேயம் ஆகியவற்றை பிரதேசமொழி துலங்க அவர்களின் குரலில் பதிவு செய்துள்ளேன். ஓரளவிற்கு இத்தொகுதியிலுள்ள கதைகளின் செல்நெறிகள் அவற்றைப் புலப்படுத்துவதாக அமையும் என்பது எனது நம்பிக்கை ! ஏனெனில் மக்களுக்கான இலக்கியம் என்றும் தோற்பதுமில்லை, காலாவதி யாவதுமில்லை.

சமீப காலங்களில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் எத்தனையோ அவலங்களுக்கு மத்தியிலும், நம்பிக்கையோடு வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களைப் பற்றி மிக அதிகமான படைப்புக்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. இப்படைப்புக்கள் தேடிப்படிக்கப்படுவனவாகவும், பேசப்படுவனவாகவும் காணப் படுகின்றன. அம்மக்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கும் நான் அவர்களைப் பற்றி எழுதுவதுதான் எனக்கு மன நிறைவைத் தருகிறது.

அண்மைக் காலத்திலிருந்து தமிழ்ச் சிறுகதைகளின் முனைப்பு பெரிதும் மாறிவிட்டது. உலகளாவிய நிலையில் அதன் களம் விசாலித்துள்ளதோடு, கதைப் பொருளிலும், கதை கூறும் பாணியிலும் பல மாறுதல்கள் ஏற்பட்டு வருகின்றமை அவதானிக்கத்தக்கது.

படைப்பாளியைப் பொறுத்தவரையில் அவன் சமூகத்தின் சகல பாகங்களையும் பார்க்கின்றவிதம், பிரச்சினைகளை அவதானித்து அவற்றை உள்வாங்கி அதனை இலக்கியமாக்கி மறுபடியும் மக்களுக்குத் தருகின்ற விதம் என்பவற்றால்தான் ஒரு படைப்பாளி தன்னையும் சேர்த்தே படைப்பாக்குகின்றான்.

எனது இடையறாத வாசிப்புப் பயிற்சியும், எழுத்தாளர்களுக்கிடையிலான தொடர்பும் எனக்கு ஆக்க இலக்கியத்தின் மீதான ஆர்வம் உண்டாகி, எழுதிக் கொண்டிருந்த வேளையில் எனது தந்தையார், “உனக்கு நல்லா எழுத வருகிறது எழுது” என்று கூறி என்னை உற்சாகப்படுத்தினார்.

என் படைப்புக்கள் சிலவற்றையாவது ஆவணப்படுத்த வேண்டும். அதைச் செய்யாவிட்டால் நான் என் இருப்பை இழந்து விடுவேன். கலை இலக்கிய உலகிலிருந்து என் சுவடு மறைந்து விடும் என்ற எண்ணம் என்னுள் கனத்தது. அதன் விளைவே இச்சிறுகதைத்தொகுதி.

எனது உணர்வுகளுக்கு வடிகாலாய் அமைந்த இச்சிறுகதைகளைப் பிரசுரித்து வெளியிட அனுமதி வழங்கிய பத்திரிகைகளுக்கும் சஞ்சிகைகளுக்கும் நன்றி. சில கதைகள் கைநழுவிப் போனதனால் அவற்றை நினைவிலிருந்து மீட்டி எழுதியுள்ளேன். இத்தொகுதியினை நல்ல முறையில் வெளிக்கொணர பல வழிகளிலும் முன்னின்று உழைத்த கவிஞர் மூதூர் முகைதீன், எம்.எஸ். அமானுல்லா, ஏ.எஸ்.அலிசப்ரி, எம்.எஸ்.அகமது றாஜீ ஆகிய நண்பர்களுக்கும் மதிப்புரை வழங்கிய திக்குவல்லை கமால் அவர்களுக்கும், அறிமுக உரை எழுதிய கேணிப்பித்தன். ச. அருளானந்தம் அவர்களுக்கும் கதைகளுக்குரிய படங்களை வரைந்துதவிய ஏ.பி.மத்தியுசுக்கும், இதனை அழகுற அச்சிட்டுத் தந்த அஸ்ரா பதிப்பகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அன்புடன்,

**ஏ.எஸ்.உபைத்துல்லா**

672, நொக்ஸ் வீதி,
மூதூர் – 04
30 – 06 – 2008

## சமர்ப்பணம்



தனது எழுத்தாற்றல் மூலம்

மூதூர் மண்ணுக்குப்

பெருமை சேர்த்தவரும்,

இலக்கியத் துறைக்கு என்னை

அறிமுகப்படுத்தியவருமான

அமரர். வ.அ. இராசரத்தினம்

அவர்களுக்கு

இந்நூல் ....

# உள்ளே.....


- கடலின் குழந்தைகள் 15
- மண்ணின் மகன் 26
- வாழத் துடிப்பவர்கள் 29
- சம்பிரதாயங்கள் 40
- ஜலசமாதி 50
- மரணத் தீவு 58
- வாயில்லாப் பூச்சிகள் 70
- எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும் 76
- மீண்டும் வந்தாள் 83
- இன்னுமொரு சுனாமி வந்தால்..? 90
- நிழலைத் தேடி...... 100

# கடலின் குழந்தைகள்

சோழகம் சுழற்றி அடித்துக் கொண்டிருந்தது. மலை நாட்டில் மழையைப் பொழிந்துவிட்டு அதறக்பபால் வரண்டு அனலைக்கக்கி கிழக்குநோக்கி வீசும் அந்தப் பேய்க் காற்றில் கடற்கரையோரத்து அடம்பன் கொடிகள்கூட பசுமை குன்றி வரண்டு கிடந்தன. கடலோரத்துப் புங்கை மரங்களைத் தவிர வேறு பசுமை காணப்படவில்லை.



கடற்கரை மணலை அள்ளி எறிந்துகொண்டு வீசும் அந்த அனற் காற்றைச் சட்டை செய்யாதவனாகக் கரீம் கடலையே வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான்.

தரையிலிருந்து கடலைநோக்கி வீசும் அந்தச் சோளகக் காற்று கரையில் அலைகளை உருட்டி விடவில்லைதான். எதிரே தெரிந்த கொட்டியாபுரக் குடாக்கடல் பென்னம்பெரிய குளம்போல் அமைதியா கத்தான் காணப்பட்டது. எனினும் கரையிலிருந்து இரண்டு மைல் தூரத்தில் கடலுக்குக் குத்திட்டு நிற்கும் 'பாதாள மலை' என்கிற கற்பாருக்கப்பால் வெளியாகிக் கிடக்கும் தம்பலகாமக் குடாவிலிருந்து தட்டுத் தடங்கலின்றி வீசும் சோழகக் காற்றால் கடல் கொந்தளித்துக் கொண்டிருக்கும் என்பது மீனவனான கரீமுக்குத் தெரிந்துதானிருக்கும்.

பாவம்! கடந்த நாலு நாட்களாக கரீம் வெளிக் கடலுக்குச் செல்லவேயில்லை. அவனது தந்தை அவனுக்குக் கொடுத்துவிட்டுச் சென்ற சின்னஞ்சிறு குல்லாக் கட்டினால் கடலின் கொந்தளிப்புக்குத் தாக்குப் பிடிக்கமுடியாது, மாகாவலிகங்கையின் சங்கமத்துக்கு அண்மையில் கரையிலிருந்து சில யார் தூரத்துக்குச் சென்று, ஆடிமாதத்தில் வழமையாகப் பிடிக்கும் துள்வண்டுக் குஞ்சுகளைக்கூட அவனால் பிடிக்க முடியவில்லை.

அதற்குக் காரணமும் இருக்கத்தான் செய்தது. கரீம் பரம்பரை மீன்பிடிகாரன்தான். தன் தந்தையார் காலத்திலிருந்து-இல்லை தன் முற்பாட்டன் காலத்திலிருந்து தூண்டிலைப்போட்டு மீன் பிடிப்பதுதான் அவன் பரம்பரைக்குத் தெரிந்திருந்தது. ஆனால் சமீபகாலத்தில் கரையோரங்களில் நைலோன் வலைகள் கட்டும் ஒரு புதிய கூட்டம் கிளம்பிவிட்டது. கங்கையின் கழிமுகத்திலே அவர்கள் வலையைக்கட்டி ஆற்றுக்குள் இனப்பெருக்கம் செய்ய ஏறும் கொடுவா மீன்களை மட்டுமல்ல; சின்னஞ்சிறு நெத்தலிக் குஞ்சுகளைக்கூடப் பிடித்து விடுகிறார்கள். புறங்கடலுக்குப் போனாலொழிய வீட்டில் அடுப்பு புகையாது என்ற நிலைமையேற்பட்டுவிட்டது கரீமுக்கு.

கரீம் அடிவயிற்றிலிருந்து வந்த வெறுமையின் தாக்கத்தை ஏக்கப்பெருமூச்சுக்களாக வெளியிட்டுக்கொண்டு கடலையே பார்த்துக் கொண்டிருந்தான்.

கரீமுக்கு புறங்கடலொன்றும் பழக்கப்படாததல்ல; வடக்கே கொக்கிளாய் தொடக்கம் தெற்கே வெருகல்வரையுமுள்ள கடற் பிராந்தியம் அவனுக்குப் புதுமையானதல்ல.

பத்து ஆண்டுகளுக்கு முன்பே அன்று... அவன் பதினெட்டு

வயது இளைஞன். அவன் தந்தையார்கூட கடலுக்கு வரவில்லை. கச்சான் ஒடுங்கி வாடைக்கு வரவேற்பு அளிப்பதற்காகப் பம்'ரிக்கிடந்த புரட்டாதி மாதத்திலே அவன் தன்னந்தனியனாக குல்லாக்கட்டைத் தள்ளிக்கொண்டு கடலுக்குச் சென்றான். ''ஆத்துவாய் பாரிலே அறுக்குளா மீன் பிடிக்கலாம்'' என்ற அவன் தந்தையார் சொல்வது அவனுக்குத் தெரிந்திருந்ததால் கிண்ணியாவை நோக்கி அவன் குல்லாக்கட்டைத் திருப்பினான். 'சின்னங்கம்மலை' கல்லடியிலே எண்பதுபாக ஆழத்தில் நங்கூரக்கல்லை எறிந்துவிட்டு தூண்டிலைப் போட்டான். சில மணித்தியாலங்களாக அவன் தூண்டிலை எதுவுமே சீண்டவில்லை. அவனுக்கு அலுப்பு ஏற்பட்டபோது கடைசியாய் அவன் தூண்டிலை வெடுக்கென்று கொத்திற்று. சடுதியாய் உசாராகிக்கொண்ட கரீம் தூண்டிலில் மாட்டிக்கொண்டதை இழுக்கத் தொடங்கினான்.

ஆனால்... மாட்டிக்கொண்ட மீன் கரீமை இழுத்துக்கொண்டு ஓடத்தொடங்கிற்று. அது ஓடிய வேகத்தில் தூண்டில் கயிற்றைப் பிடித்துக் கொண்டிருந்த அவனின் உள்ளங்கை கத்தியால் வெட்டப்பட்டதுபோல காயப்பட்டுவிட்டது. தூண்டிலில் மாட்டிக்கொண்ட மீனுக்கும் கரீமுக்கும் அரைமணித்தியாலமாக நடந்த போராட்டத்துக்குப் பின்னால் மீன் களைத்துப் போயிற்று. கடைசியாய் அந்த மீனை குல்லாக்கட்டுக்குள் இழுத்துப் போட்டபோது இந்தப் பென்னம்பெரிய அறுக்குளாவை நானா பிடித்தேன்? என்று கரீமிற்குச் சந்தேகம் ஏற்பட்டுவிட்டது. அறுபட்ட கைகளைச் சீலைத்துண்டினால் சுற்றிக் கொண்டு வீட்டைநோக்கிக் குல்லாக்கட்டைத் திருப்பினான் கரீம்.

கடலுக்குச் சென்ற தன் மகனைக் கரையிலே நின்று காத்துக்கொண்டிருந்த அவன் தகப்பன் அறுக்குளாவைக் கண்டதும் அசந்தே போனான். தன்னந்தனியாய்க் கடலுக்குப் போனதற்காக மகனைக் கண்டிக்க எண்ணியிருந்த அந்தத் தகப்பன் மகிழ்ச்சியால் பூரித்துப்போனான். கரீமின் சாதனையைக்கண்டு அந்தக் கடற்கரையே பூரித்துவிட்டது. 'ஐஸ்' முதலாளிக்கு நூற்றி ஐம்பது ரூபாவிற்கு அந்த மீனை விற்ற அவன் தந்தையார் அன்றிரவே பாத்திமாவைக் கரீமுக்கு 'நிக்காஹ்' செய்து வைத்தார்.

கரீம் மீண்டும் பெருமூச்சு விட்டான். மனைவியின் காதுப்பூவை அடகுவைத்த பணத்தில்தான் கடந்த நான்கு நாட்களாக அடுப்புப் புகைந்துகொண்டிருந்தது. ஆனால் நாளைக்கு என்ன செய்வது? என்ற எண்ணத்தின் கோலத்தைத் தாங்கிக்கொள்ளவே முடியவில்லை.

ஒன்பது வயது மூத்த மகன் சிறாஜ் பெரிய குவாட்டி ஓடைப் பள்ளங்களிலே 'இறால் கூனி' பிடித்து விற்றபணம் ஒரு ரூபாதான் நாளையச் செலவுக்கு இருப்பதாகப் பாத்திமா காலையிலேயே சொல்லியிருந்தாள். அந்த இறால்கூனி பிடிப்பதுகூட சிறுவர்களுக்குள் போட்டி. மேலும் தன் உடலிலே வலுவிருக்கையில் தனக்கும் தன் ஐந்து பிள்ளைகளுக்குமாக ஒன்பது வயதுப் பாலகன் கஸ்டப்படுவதை அவனால் சகித்துக் கொள்ள முடியவில்லை. ஏறுவெய்யிலின் அகோரத்தில் அவனது உடல் புழுங்கிக் கொண்டிருந்ததைப் போலவே உள்ளமும் புழுங்கிக் கொண்டிருந்தது. அந்தப் புழுக்கத்திலே மனதில் எதையோ தீர்மானித்தவனாகக் கரையில் இழுத்து வைக்கப்பட்டிருந்த தன் சின்னஞ்சிறு குல்லாக்கட்டிற்குச் சென்று அக்குல்லாக்கட்டின் பிள்ளைக்குல்லாவை அவிழ்த்து மீண்டும் அதைச் சிக்காறாகக் கட்டினான்.

2

மதியமாகிவிட்டது. கரீம் சிந்தனையோடு வீட்டை நோக்கி நடந்துகொண்டிருந்தான். தூரத்தே கேணிக்காட்டுப் பாடசாலையிலிருந்து ஒலித்த மணிச்சத்தம் அவனது தீர்மானத்தை வரவேற்பது போலிருந்தது. பாதம் புதையும் வெண்மணல் ஒழுங்கையினூடே நடந்து வேலியற்றிருந்த வளவுகளூடே ஒற்றையடிப் பாதையில் சென்று, தன் குடிசையை அடைந்த கரீம் குடிசைக்கு முன்னால் இரண்டு தென்னை மரங்களை இணைத்துக் கட்டப்பட்டிருந்த கம்பிலே வளையமாடிக்கிடந்த தூண்டில் கயிறுகளையும், குல்லா செலுத்தும் சவளையும் குழந்தைகளைத் தழுவுவதுபோலத் தழுவிப் பார்த்தான்.

கணவன் வந்ததை அறிந்த பாத்திமா ''என்ன யோசிக்கிறீங்க?'' என்றாள். ''யோசிக்கல்ல, முடிவே செஞ்சிற்றன். நாளைக்கு வெள்ளாப்பில கொக்கட்டிக்குப் போறதாக முடிவு பண்ணிட்டேன்.''

''ஆரோட சேந்துகிட்டு போறீங்க?''

''ஒத்தரோடையுமில்ல. நம்ம மாடா ஒழைச்சி வள்ளக்காரனுக்கு அரைப்பங்கு கொடுக்க ஏலுமா?''

''நம்மட்டப் பெரிய வள்ளம் இல்லாட்டா என்ன செய்யிறது? பங்கு கொடுக்கத்தான் வேணும்''

‘‘பெரிய வள்ளம் இல்லாட்டி என்ன... நம்மட சின்னக் குல்லாக் கட்டிலே போறன்’’

‘‘எண்ட அல்லாவே! நம்மட குல்லாக்கட்டிலேயா கொக் கட்டிக்குப் போகப்போறீங்க? பொறங்கடலுக்கு அதில போகலாமா?’’

‘‘போகாம என்ன செய்யிறது? ஹஜ்ஜுப் பெருநாள் வரப் போகுது. இப்ப சாமான்கள் விக்கிற வெலைக்கு நூத்தம்பது ரூபா இருந்தாத்தான் ஐஞ்சு பிள்ளைகளுக்கும் சீலயச் சட்டய எடுக்கலாம்.’’

‘‘கையில மடியில இருந்தால் பெருநாளைக் கொண்டாடுவம். இல்லாட்டி கஞ்சியைக் குடிச்சிட்டு பேசாமப் படுப்பம். அதுக்காகவேண்டி இந்தக் காத்துக் கடல் காலத்தில நம்ம குல்லாக்கட்டை நம்பி வெலங்க போகாதீங்க....’’

‘‘பாத்துமா! இந்த ஆடி மாசத்திலே கொக்கட்டிக்கோ இல்லாட்டி கும்புறுபிட்டிக்கோ போவாம இந்த ஊரில இருந்து பட்டினியா கிடக்கச் சொல்லுறா? நீ பயப்படாத. நான் சம்பூர் கரையோரமாக கெவுளியாவுக்குப்போய் அங்க இருந்து கரையால குல்லாக்கட்டை இழுத்துக்கிட்டு போயிடுவன். கச்சான் காத்துக் காலத்திலே கடல் ஈராட்டிகரையில் அடிக்காது. நான் வாடியில் இருந்து ஒரு கொஞ்சத் தூரத்துக்குப் போவன். ஆண்டவன் நமக்கும் நம்மட குஞ்சுகளுக்கும் ‘எறணம்’ அளக்காமலா போயிடுவான்.’’

‘‘வாடிக்கு கிடுகுமட்ட வேணும், உப்பு வேணும், இதுக் கெல்லாம் காசு வெச்சிரிக்கீங்களா?’’

‘‘நா என்ன கருவாடா போடப்போறன்? அண்டண்டு புடிக்கிறதை அங்கினவாற சைக்கிள்காரனுக்குக் கொடுத்துவிட்டு அவனுக்கிட்ட ஒனக்குச் சல்லி அனுப்பி வைப்பன். எனக்கு வாடி தேவையில்லை. இந்த ஆடிமாசத்தில மழையா பேயப் போவுது? குல்லாக்கட்ட கரையில் இழுத்து வைச்சுப்போட்டு அங்கின ஒரு மரத்துக்குக் கீழ எதையாவது காய்ச்சித் தின்னுட்டு அதிலேயே சுருண்டிடுவன்.’’

‘‘என்னமோ நீங்க சொல்லுறதைப் பாத்தா தடைசெய்ய ஏலாது போலதான் இருக்கு. கொக்கட்டிக்குப் போறதா இருந்தா எங்கட காக்காவும் போவ இருக்கார். அவரோட போங்களேன்.’’

''எலிப்பாளியெண்டாலும் தனிப்பாளியா இருக்கணும். பங்கும் பொணையும் நம்ம குடும்பத்துக்குக் கட்டிவராது. நான் வெள்ளாப்பில தனியப் போப்பறன்.'' என்று தீர்மானமாகச் சொல்லிக்கொண்டு கரீம் குடிசைக்குள் நுழைகையில் அவனது மூத்த சிறுவர்கள் மூவரும் பாடசாலைவிட்டு வந்து விட்டார்கள்.

மூத்த மகன் சிறாஜ் தன் சாரனுக்குள் ஒழித்து வைத்திருந்த பாடசாலை விசுக்கோத்தை தென்னைமர நிழலில் மணல் குளித்துக் கொண்டிருந்த நாலாங்கால் தங்கைக்குக் கொடுத்துவிட்டு குடிசைக்குள் சென்று சீலைத்தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்த இளைய தங்கையை ஆர்வத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

3

ஊர்ச் சேவல்களெல்லாம் தலைதெறிக்க கூவிக் கொண்டிருக்கையில் கரீம் விழித்துக்கொண்டான். ஆனால் ஏற்கனவே விழித்துக் கொண்ட பாத்திமா குடிசையோடு ஒட்டிக்கொண்டிருந்த சாய்ப்பில் சமைத்துக் கொண்டிருந்தாள். நேற்றுப் பின்னேரம் சிறாஜ் ஊரி ஓடைப் பாலத்தின் சுவரில் கல்லோடு கல்லாக ஒட்டிக் கொண்டிருந்த குவாட்டிகளை உடைத்துக்கொண்டு வந்திருந்தான். அக்குவாட்டிச் சதைக் குழம்பின் நறுமணம் கரீமின் மூக்கைத் துளைத்துக் கொண்டிருந்தது.

கொக்கட்டிக்கு சைக்கிள்காரர்களை அனுப்பி மீன் கொள்வனவு செய்யும் மீன் முதலாளிகளிடமிருந்து கரீம் கடனாகப் பெற்றுக்கொண்ட இருபது ரூபா, ஐந்துகொத்து அரிசி, தேங்காய் ஏனைய சாமான்களாக உருவெடுத்திருந்தது.

கரீம் விழித்துக்கொண்டதை உணர்ந்த பாத்திமா அவனுக்குத் தேநீரையும் கருப்பட்டியையும் கொண்டுவந்து கொடுத்தாள். சுடச்சுட அத் தேநீர்ச் சாயத்தைக் குடித்த கரீம் புத்துணர்வு பெற்றவனாக எழுந்து சவளைத் தோளில் வைத்து அதன் நுனியிலே தூண்டில் கயிற்று வளையங்களைக் கொழுவிக்கொள்கையில் பாத்திமா அவனிடம் பையொன்றைக் கொண்டுவந்து கொடுத்தாள். அதனுள்ளே ஒன்றரைக்கொத்து அரிசி, தேங்காய், பச்சை மிளகாய், உப்பு....

சோத்து முடிச்சும் அந்தப் பையினுள்ளேதான் இருந்தது.

அதையும் வாங்கிக்கொண்டு தன் கைக்குழந்தையின் முகத்தைத் தடவிக்கொண்டு நடந்த கரீமுக்கு முன்னால் வானச் சரிவிலே தேய்பிறை நடுங்கிக் கொண்டிருந்தது. வைகறையில் சில்லென்ற கச்சான் காற்று அவனது திறந்த மேனியில் ஊசிச் சரமாய்க் குத்த விடியற்காலை பெரிய பள்ளிவாசலின் மினராவின் வெளிப்பால் ஒளித்துக்கொண்டிருந்த வெண்மணல் ஒழுங்கையில் கரீமின் பாதங்கள் சரக் சரக் என்று ஒலி எழுப்ப கடலை நோக்கி நடந்து கொண்டிருந்தான். முஅத்தினுடைய பாங்கு ஒலி அவனை வழியனுப்பிக் கொண்டிருந்தது.

கடற்கரையை அடைந்த கரீம் தான் கொண்டுவந்த பையையும், தூண்டிற் கயிறுகளையும் குல்லாக்கட்டின் அணியத்தில் வைத்துவிட்டு குல்லாக்கட்டின் பொறதலையை இரு கைகளாலும் தடவிக் கண்களில் ஒற்றிக்கொண்டு ''எல்லாம் வல்ல நாயகனே'' என்று பிரார்த்தித்தபடி குல்லாக்கட்டைக் கடலில் தள்ளினான்.

குல்லாக்கட்டு நீரில் இறங்கிவிட்டது. கரீம் தன் சாரனையும் உரிந்து சுருட்டி அணியத்திற்குள் வைத்துவிட்டு அரையில் சுருங்கி இரண்டு பெரும் துடைகளையும் இறுக்கிப் பிடித்திருக்கும் ''சிறுவால்''லோடு மட்டும் நின்றுகொண்டு முன் அணியத்தில் கம்பான் கயிறைக் கட்டிக் கொண்டிருந்தான்.

குனிந்த குனியில் அவன் கயிற்றை கட்டிக் கொண்டிருக்கையில் ''வாப்பா'' என்ற சத்தம் அவனை நிமிரச் செய்தது. எதிரே இரண்டு கைகளிலும் பானையும், சட்டியுமாகிய மூன்று உருப்படிகளுடன் நின்றுகொண்டிருந்தான் சிறாஜ். வாப்பா இதைவிட்டு வந்துத்தீங்களே. உம்மா கொடுக்கச் சொன்னாங்க என்றான்.''

''ஓண்டா தம்பி. நானும் மறந்திட்டன்'' என்று அவைகளை வாங்கி குல்லாக்கட்டில் வைத்துக்கொண்ட கரீமிடம் ''வாப்பா உங்களோட நானும் கடலுக்கு வரட்டா'' என்று குழைந்தான்.

''வேணாண்டா. நீ போய் முதலில் படி. பொறகு கடலுக்குப் போலாம்'' என்று அவனை அணைத்துத் தழுவி உச்சந்தலையை முகர்ந்துகொண்டு ''நீ ஊட்ட போ வாப்பா'' என்று அனுப்பி வைத்தான். சிறாஜ் வேண்டாவெறுப்புடன் வீட்டை நோக்கிப் போய்க் கொண்டிருக்கையில், கரீமின் சிந்தனைகள் எங்கேயோ சென்றுகொண்டிருந்தன.

4

நான் பிறந்த மூதூரின் அக்கரைச்சேனை வட்டாரத்தினுள் மக்கள் எல்லோரினதும் தொழில் மீன்பிடிதான். தந்தை செய்த அதே தொழிலை அதேமாதிரிச் செய்வது வழக்கமாகி விட்டது. எனது பிள்ளைகள் படிக்கல்ல... எங்கட வட்டாரத்துக்குள்ள ரெண்டே ரெண்டுபேர்தான் மாஸ்ரராக வந்திருக்காங்க. இந்த அரசாங்கத்தில கண்டவன் நிண்டவன் எல்லாம் மாஸ்ரர்தான். ஆனால் எங்கட பகுதியிலே ஒருவனும் படிக்கல்ல. என்ட மகனெண்டாலும் படிச்சி மாஸ்ரராக வந்திட்டானென்றால் எவ்வளவு நல்லாயிருக்கும் என்று நான் கனவு காணக்குள்ள அவன் கடலுக்கு வரப்போறானாம்.

மகனின் தலை மறைந்துவிட்டது. கரீம் கம்பான் கயிற்றின் நுனியைப் பிடித்துக்கொண்டு குல்லாக்கட்டைத் தெற்கு நோக்கிச் சம்பூர் கரையோரமாக இழுக்கத் தொடங்கினான். கடற்கரை ஈரமணலில் அவன் கால்கள் அமிழ்ந்தன. கம்பான் கயிற்றைத் தோளிற் போட்டபடி இடதுகாறை எலும்புக்கு மேலுள்ள சதைத்திரட்சியில் அந்தக் கம்பான் கயிறு அழுத்த.... முக்கி முனகி குல்லாக்கட்டை இழுத்துக்கொண்டு வந்தான்.

தாழையடி, சம்பூர், காரைத்தீவு, சூடக்குடா என்று இழுத்துக் கொண்டு நடக்கையில் ஏறு வெயிலின் அகோரத்தை அவனால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. கெவுளிமுனை நெருங்கிவிட்டது.

இனிமேலும் கரைவழியே குல்லாக்கட்டை இழுக்கமுடியாது. கெவுளிமுனையை அடுத்த கடற்பரப்பெல்லாம் கற்பார்கள் கடற்பரப்புக்கு மேலாகத் தலையை நிமிர்த்திக்கொண்டிருக்கிற அந்தக் கற்பார்களைத் தாண்டி நூறுபாகமாகுதல் வெளியே சென்று குல்லாக்கட்டை வளைக்காவிட்டால் குல்லா கற்பாரில் மோதி சுக்குநூறாகிவிடும். இந்த நிலையை உணர்ந்துகொண்ட கரீம் குல்லாக்கட்டிலேறி 'பாய்மரத்தைப் பொருத்தி அதனோடு கோமுட்டிக் கம்பையும் இணைத்து கோமுட்டிக் கம்போடு இணைக்கப்பட்டிருந்த முக்கோணப்பாயை விரித்து அதனுள்ளே காற்றாகவரும் சோளகத்தை தன் பின் அணியத்தோடு இணைக்கப் பட்டிருந்த 'தாமான்' கயிற்றால் கட்டுப்படுத்தி சவளில் நின்றுகொண்டு குல்லாக்கட்டை செலுத்தத் தொடங்கினான். மணிப்பொழுதின் பின்னங்களில் குல்லாக்கட்டு இருநூறு பாகத்தைத் தாண்டிவிட்டது. தாமான் கயிற்றை இளக்கி குல்லாக்கட்டைத் தெற்கு நோக்கிச் சாய்த்தான். அதன்பின்னர் பின்புறமாகத் தள்ளும் வசதியான சோளகம்

தான் எனினும் அந்தச் சோளகத்தோடு புறங்கடலின் அலைகளோடு மோதாமல் மீண்டும் தாமான் கயிற்றை இழுத்து அணைத்து கரையோரமாகக் குல்லாவைச் செலுத்தி அதனைக் கரையிலே இழுத்துக்கொண்டு போவதுதான் தன் மனைவிக்கும், பிள்ளைகளுக்கும் தான் மானசீகமாகக்கொடுத்த வாக்குறுதிக்கு நலமாக இருக்கும் என்ற எண்ணத்தோடு குல்லாக்கட்டை கரையை நோக்கிச் செலுத்தினான்.

கரீமுக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது. கெவுளிமுனையின் தீபக்கம்பத்தின் அருகிலே குடியிருக்கும் காவல்காரனிடம் குடிதண்ணீர் பெறலாம் என்ற நம்பிக்கை அவனுடைய அசுரப்பசியை மேலும் கிளறியது. குல்லாக்கட்டை கரையில் இழுத்து வைத்துவிட்டு தன் பையிலிருந்த சோற்றை எடுத்துக்கொண்டு காவல்காரனின் இல்லத்தை நோக்கி நடந்தான் கரீம்.

கரீம் தன் கட்டுச்சோற்றைச் சாப்பிட்டு முடித்தபோது பொழுது சாய்ந்துவிட்டது. ஆயினும் ஆடிமாத உக்கிரண சூரியனின் ஒளி இன்னமும் சாயவில்லை. இன்னும் சில மணித்தியாலங்களில் தன் குல்லாக்கட்டை இழுத்துக்கொண்டு கொக்கட்டிக்குப் போய்விடலா மென்ற நினைப்பில் கரீம் கெவுளியாக் கோபுரத்தின் தென்பாகமாகச் சடைத்துச் செழித்திருக்கும் புங்கைமரத்தின்கீழ் ஸ்வானுபூதியாக நீட்டி நிமிர்ந்துபடுத்திருந்தான்.

கொக்குத் தூக்கம் தூங்கிய கரீம் மீண்டும் கரைவழியே தெற்கு நோக்கி குல்லாக்கட்டை இழுத்துக்கொண்டு கொக்கட்டியை அடைந்தபோது சாய்பொழுதின் கிரணங்கள் தம் சுபாவத்தை இழக்கா விட்டாலும் எதையும் எவரையும் தீர்ப்பதற்குத் திராணியற்றிருந்தன.

5

கெவுளிமுனைக்குத் தெற்கே இரண்டுமைல் தூரத்தில் அமைந்துள்ள கொக்கட்டியின் மணல்திட்டிலே குல்லாக்கட்டை இழுத்து வைத்துவிட்டு கரையை ஏறிட்டு நோக்கினான் கரீம். கிழக்கு எல்லையற்று விரிந்து கிடந்த வங்காளக் கடலின் மேற்பரப்பில் அந்திச் செவ்வானத்தின் கிரணங்கள் படிந்து சமுத்திரம் முழுவதையும் தகதகவென்று ஜொலித்துக்கொண்டிருந்தது. கரையிலிருந்து பார்த்தால் கடல் முழுமையுமே அமைதியாகக் கிடப்பதைப்போலத் தோன்றிற்று. ஆனாலும் கரையிலிருந்து நெடுந்தூரம் சென்றான். அங்கே நுரையும் திரையுமற்ற ஊமைக்கடல் 'மாரிசா மாரிசாவாக' ஒரு பனை

உயரத்துக்கு எழுந்து இறங்கிக்கொண்டிருக்கும் என்று அவன் மனம் சொல்லிற்று. பெரிய வள்ளமாக இருந்தால் அந்த மாரிசாக்களில் ஏறி இறங்கி அத்தாலாட்டை ரசித்துக்கொண்டே தொழில் செய்யலாம். ஆனால் தன்னந்தனியனாகத் தான் செல்லும் குல்லாக்கட்டை அந்த ஊமை மாரிசாவுக்கே மாத்திரம் என்ற நினைவுத் தொடரின் பின்னால் கரையிலிருந்து ஐநூறு பாகமாகுதல் சென்று அறுபதுபாக ஆழத்தில் தான் மீன்பிடிக்கலாம் என்று சுதாகரித்துக்கொண்டு தன் அரிசிப் பையையும், சவளையும், தூண்டில் கயிற்றையும் தூக்கிக்கொண்டு கடற் கரையோரத்து அடம்பன் கொடியைத் தாண்டிக்கொண்டு மணற் திட்டில் ஏறி எதிரே அங்குமிங்குமாய்த் தோன்றும் பரட்டைப் பாலைமரங்களை நோக்குகிறான். அங்கே....

ஒவ்வொரு பாலைமரத்தின் கீழும் ஒவ்வோர் வாடி. மூதூரிலும் ஏன் கிண்ணியாவிலிருந்துங்கூட பலர் வந்திருக்கின்றார்கள். அந்த வாடிகளில் உப்பு மூட்டைக்கும், கருவாட்டுக்கும் காவலாக இருக்கும் பையன்களைத் தவிர வேறு ஆட்களே காணோம். கடலுக்குப் போனவர்கள் 'மைமல்'லுக்கு முன் திரும்பி விடுவார்கள். அதன்பின் அங்கே நாட்டுக் கனிகளுக்கும் கேளிக்கைகளுக்கும் குறைவிராது என்று எண்ணியவன் மீண்டும் தன் குல்லாக்கட்டுக்குச் சென்று தான் கொண்டுவந்த சட்டி பானைகளை எடுத்துக்கொண்டு கடலை நோக்கு கையில் தொழிலுக்குச் சென்ற வள்ளங்களெல்லாம் அண்மித்துக் கொண்டிருந்தன.

அவைகள் செம்மீன், அறுக்குளா, இரத்தப்பாரை, கருங்கேணி என்று உச்சமான மீன்களைப் பிடித்துக்கொண்டு வந்திருந்தன. அவைகளைப் பார்த்து கரீமுக்கு நம்பிக்கை ஏற்படினும் தன் குல்லாக்கட்டைப் பற்றிய எண்ணம் சோர்வைத்தான் கொடுத்தது.

6

விடிந்தது....

மூதூரிலிருந்து வந்த தன் உறவினர்களும் நண்பர்களும் கேலிசெய்தாலும்கூட கரீம் தன் குல்லாக்கட்டைத் தள்ளிக்கொண்டு மீன்வியாபாரியிடம் கடனாகப் பெற்ற கணவாய்களைத் தூண்டிலுக்கு இரையாகக் கொண்டு கடலுக்குச் சென்றான். திட்டமிட்டபடி இருநூறுபாகம் சென்று மதியம் பாலைமரத்துக்கு திரும்பியபோது அவன் மீன் வியாபாரியிடம் இருபத்தேழு ரூபாவுக்கு மீன் கொடுத்திருந்தான்.

''இருபது ரூபா பாத்துமாக்கிட்டக் கொடுங்க. எனக்குக் கொஞ்சம் அரிசியும் உப்பும் வாங்கிற்று வாங்க'' என்று கரீம் வியாபாரியிடம் கூறியபோது கரீமின் தொழில் முயற்சியைக்கண்டு வியாபாரிகூட அசந்து போனான்.

பாலைமரத்தடியில் காய்ச்சிப் பசியாறிவிட்டு மதியம் திரும்பியதும் மீண்டும் தன் குல்லாக்கட்டைத் தள்ளிக்கொண்டு கடலுக்குச் சென்றான் கரீம்.

ஒரு பாரை பிடித்து விட்டான். திடீரென்று வானத்தில் ஒரு இறுக்கம்.... உக்கிரமாக வீசிய கச்சான் எப்படி நின்றதோ? கடற்பரப்பில் சுடலை அமைதி.

கரீம் தூண்டிற் கயிற்றை கையில் பிடித்தவாறே நிமிர்ந்து வானத்தைப் பார்த்தான்.... வாடை மூலையிலே அடிவானத்திலே ஒரு இருள்கற்றை... திடீரென கொடிபோல ஒரு மின்வெட்டு. புரட்டாதியில் வரவிருக்கும் 'குன்னா' வாடைக்கு இத்தனை அவசரமேன்?

கரீம் தூண்டில் கயிற்றை வளைத்தான். அவனை அறியாமலே கைகள் சவளை எடுத்தன. அதற்குள் நீலக்கடல் முழுவதுமே ஆயிரம் படங்களையும் விரித்து சீறியடிக்கும் கருநாக சர்ப்பமாய்க் கொந்தளித்து விட்டது. தூரத்தே சென்ற பெருவள்ளங்களெல்லாம் திரும்பிக் கரைக்கு விரைகின்றன. வாடைமூலையில் கவிந்த இருள் எப்படி அகிலம் முழுவதையும் மூடிற்றோ? மின்னல்... இடி... மழை....

நுரைகக்கி மடிந்த கடல் குல்லாக்கட்டினுள் நீரைச் சலார் என்று சரிக்கிறது. ஒற்றைக் கையால் தண்ணீரை ஊற்றுகிறான் கரீம். மறுகையில் சவள்.... மின்னல் கண்ணைப் பறிக்கிறது.... இடி எக்காளமிட்டுச் சிரிக்கிறது.... மழை உறுங்காவத்தோடு சீறியடித்துப் பொழிகிறது...

கரை தெரியவில்லை.... திசை தெரியவில்லை... கரீமின் மனக்கண்ணில் பாத்திமாவும் குழந்தைகளும்.... எனக்குப் பின் சிறாஜ் இருக்கிறான் என்ற தெம்பு.... ஆயினும் துணிந்து போராட்டம்....

7

அக்கரைச்சேனைக் கிராமமே அடுத்த சில நாட்களுக்குக் கரீமைத் தேடிக்கொண்டிருந்தது. பாத்திமா இன்னமும் அவனைத் தேடிக் கொண்டுதான் இருக்கிறாள்.

(காலநதி 1986)

# மண்ணின் மகன்

நொக்ஸ் வீதியிலிருந்து வலது பக்கமாகத் திரும்பியவுடன் வரும் குளத்தடி ஓரத்தில் குடியிருப்பவர்கள் பெரும்பாலும் விவசாயிகள் தான். பிரதான வீதியிலிருந்து மணல் ஒழுங்கையொன்று மூதூர் வெளி வயலை அடைகின்றது. இம் மணல் ஒழுங்கை பிரியும் சந்தியில்தான் வயல் முதலாளி கமீதுவின் வீடு உள்ளது.



முதலாளி கமீதுவின் கையாள்தான் முகம்மது. முகம்மதுவைப் போல் பலர் கமீது முதலாளிக்குக் கீழே வேலை செய்தனர். அவர்களெல்லாம் கமீது முதலாளி கீறிய கோட்டுக்குள் நிற்கும்

கைப்பொம்மைகள்தான். கமீது முதலாளி தனது வயல்களை அவர்களுக்குப் பங்கு போட்டுக் கொடுத்திருந்தார். சொந்தமாகவல்ல கூலிகொடுத்து அவர்களை வெயிலிலே வேகவைத்து விளைச்சலை யெல்லாம் தானே பெற்றுவிடுவார். பதர், கந்துமுறி, கட்டிமண் எல்லாமே கமீது முதலாளிக்குத்தான்.

வயலிலிருந்து களைத்து விழுந்து சோர்வோடு வந்த முகம்மது, முதலாளியின் வாசற்படியோடு வண்டிலை நிறுத்தினான். வழக்கத்தைவிட விளைச்சல் குறைந்திருந்தது. ''என்ன முகம்மது நெல்லு.... பசளை, எண்ணெய் எல்லாத்துக்கும் செலவைக் கணக்குப் பார்த்தா... ம்... இவ்வளவுதானா நெல்லு.... அல்லது இடையிலை யாருக்கும் வித்துப் போட்டியா?'' ஒரு அதட்டலோடு எதிர்ப்பட்டது கமீது முதலாளியின் கேள்வி.

''விளைஞ்சதே இவ்வளவுதான் நானா'' என்றான் முகம்மது.

''சரி சரி நெல்லைக் கொண்டுபோய் பெரிய மில்லுக்குள்ள அடுக்கிப்போட்டு வா.... கணக்கப் பாத்து வெக்கிறன்.''

முகம்மது நெல்லை அடுக்கிவிட்டு வந்தான்.

''இந்தா முகம்மது கணக்கப் பாத்தேன் மிச்சம் இவ்வளவு தான்....'' என்றபடி இரண்டு நூறு ரூபாய்த் தாள்களை நீட்டினார் முதலாளி கமீது.

இந்த இரண்டு தாளும் எதுக்குக்காணும். இருக்கிற கடனை யெல்லாம் எப்படி அடைப்பது? சீட்டுக்காசு, மனைவி பிள்ளைப் பேற்றுக் காக ஆஸ்பத்திரியில் இருக்கிறாள். எல்லாமே அவன் மனதை அழுத்த முகம்மது தன் கையைப் பிசைந்து கொண்டிருந்தான்.

''என்ன முகம்மது உனக்குச் சந்தேகமெண்டால் இந்தா கணக்கப்பார்?'' என்றார் முதலாளி.

''என்ன நான் கணக்கா கேட்டன்.?''

''பிறகென்ன?''

''நானா! எனக்கிது காணாது. இன்னும் ஒரு இருநூறு ரூபா தாங்க, கோடைச் செய்கையிலை கழிச்சுக்கலாம்.''

''என்ன முகம்மது குடுத்ததை வாங்கிக்கொண்டு போகாமல் உன்ர கதையெல்லாம் புதுசா இருக்குது.''

''எங்களை நெடுகயும் ஏமாத்த இயலாது.''

''பொத்தடா வாயை.... நீ என்ட வேலைக்காரன். குடுக்கிற கூலியை வாங்கிக்கணும்.''

முதலாளியின் அதட்டலுக்கு அடிபணியாத முகம்மது ஒரு முடிவோடு திரும்பி நடந்தான்.

மண்ணிலே பிறந்து, வளர்ந்து மண்ணிலே போராடியவன் முகம்மது. அவன் மண்ணின் மகன். அவனுக்கு மண்ணிலே பாசம், பற்று... உயிர். அவனைத்தான் வேலைக்காரன் என்றுகூறி துச்சமாக விரட்டிவிட்டார். கமீது முதலாளி.

அவன் ஒரு தீர்க்கமான முடிவோடு நடந்தான்.

நினைத்தபடி முகம்மதுவால் தனக்கென்று ஒரு தொழிலைத் தேடிக்கொள்வது சிரமமாகத்தான் இருந்தது. பகல் முழுதும் எரிக்கேஷனில் வேலை செய்தான். இரவானதும் கடலுக்குப் போவதுமாகத் தன் உடலை இயந்திரமாக்கினான்.

நாட்கள் அவன் உடலை கசங்க வைத்து ஓடி மறைந்தன. அதுவரை சேர்த்த பணத்தில் இப்போது முகம்மது தனக்கென்று மூன்று ஏக்கர் நீர்ப்பாய்ச்சல் காணி ஒன்றை வாங்கி விட்டான்.

''டேய் முகம்மது வயல் வாங்கிக்கியாமே.... விசயம் தெரியுமா? கமீது முதலாளிட வயலெல்லாம் வெள்ளத்துல தாண்டு.... எல்லாமே அழிஞ்சு போச்சு'' என்றான் நகீப் அவனும் கமீது முதலாளியின் வேலைக்காரன். முகம்மது எதுவும் பேசவில்லை.

''டேய் முகம்மது நானும் உன்ட வயலுக்கு வரட்டா.''

''அதுக்கென்ன வாவண்டா. ஆனா ஒண்ணு. நீ எனக்கு வேலைக்காரனல்ல.... தோழன்.''

முகம்மதுவின் காலடிகளில் நடந்தான் நகீப். அவர்களின் உழைப்புக்காக நிலமகள் காத்துக் கிடந்தாள்.

(காலநதி 1986)

# வாழத் துடிப்பவர்கள்

'சுபஹு' தொழுது முடிந்தகையோடு சீனிமுகம்மது அப்பா மூதூர்த் துறையடிக்கு நடந்தார். துறையைக் கடந்து அக்கரை செல்லும் முதற் தோணியிலேயே ஏறிக்கொண்டார்.

பல்லைக் கிட்டவைக்கும் தை மாதத்துப் பின்பனியோ? தூசையும் தும்பையும் வாரியடிக்கும் கோடைகாலத்துச் சோழகமோ? வானம் இருண்டு கறுத்து மழைகொட்டிக் கொண்டிருக்கும் மாரிகாலமோ? எந்தக் காலத்தைப் பற்றியும் சீனிமுகம்மது அப்பா கவலைப்படுவதில்லை! எப்படியும் துறையடிக்கு வந்தேவிடுவார்.



துறையைத் தாண்டியதும் மேலும் ஒரு மைல் நடந்தாற்தான் நாவலடிக் கிராமம். அந்தக் கிராமத்துக் கடற்கரையோரமாகப் பனை வடலிகளின் நடுவே உயர்ந்து நிற்கும் நாவல் மரத்தடிதான் சீனிமுகம்மது அப்பாவின் இலக்கு. அந்த நாவல் மரத்தடியிலே 'சேகப்பா' என்ற சேகுமுகம்மது அடங்கியிருக்கிறாராம்.

சேகுமுகம்மது அவர்கள் இந்தியக் கரையிலிருந்து இங்கு வந்தவராம். மூதூரிற் சிலகாலம் வாழ்ந்தவர். அங்கிருந்து கிண்ணியா போகும் வழியில் அவரது 'ரூஹ்' இந்த நாவலடிக் கிராமத்திலே அடங்கிற்றாம். இந்த நாவலடியிற்தான் அவர் 'கபுறு' உள்ளது என்று திட்டவட்டமாகச் சொல்கிறார்கள்.

இத்தனைக்கும் சேகுமுகம்மது அவர்களை சீனிமுகம்மது அப்பா கண்ணாற் கண்டவரல்ல. அவரது கபுறுக்குழியின் கால்மாட்டிலும் தலைமாட்டிலும் நாட்டப்பட்ட 'மீஷான்' கட்டைகளைக்கூட மண் தின்றிருக்கும். ஆனாலும் இங்கேதான் அந்தக் 'கபுறு' இருக்கின்றது என்று திட்டவட்டமாகச் சொல்லிக்கொண்டு, அந்த நாவல் மரத்தின்கீழ் கடற்கரை மணலைக் குவித்து புட்டியாக்கி அந்த மணற் கும்பியில் சந்தனக் குச்சிகளைக் கொழுத்தி வைத்து கடந்த ஐந்தாண்டுகளாகப் பராமரித்து வருகிறார் சீனிமுகம்மது அப்பா.

அந்த 'கபுறடி'யைப் பாதுகாப்பதற்காக ஒவ்வொரு நாட் காலை யிலும் இரண்டு மைல்கள் நடந்து நாவலடிக் கிராமத்துக்கு சீனிமுகம்மது அப்பா வருகிறார்.

சீனிமுகம்மதுக் கிழவருக்கு வயது எழுபதுக்கு மேலாகிவிட்டது. தாடி ஆற்றங்கரை நாணற் பூக்களைப் போல வெண்ணிறமாகி முதுகும் சற்றே கூன் விழுந்து விட்டது. அந்த நிலையிலும் ஆற்றைத்தாண்டி இரண்டு மைல்கள் நடந்துவரும் சீனி முகம்மதுக் கிழவர் தன் தள்ளாமை காரணமாகக் குந்தியிருந்துகொண்டே நத்தையாய் நகர்ந்து நகர்ந்து காய்ந்த தென்னம் பாளையால் அந்தக் 'கபுறடி' வட்டாரம் முழுவதையுமே கூட்டிப் பெருக்கிறார். மண் புட்டியிற் சந்தனக் குச்சிகளைக் கொழுத்தி வைக்கிறார். பின்னர் அந்த வெண்மணலிற் பின்னங் கால்களை மடக்கி குதிகால்களிற் பிட்டத்தைச் சரித்து உடம்பின் பாரம் முழுவதையும் அதில் நிறுத்திக் 'கிப்லா'வைப் பார்த்துக் கைகளை நீட்டித் 'துஆ'ச் செய்கிறார்.

மதியமானதும் கபுறடிக்கருகில் நாவல் மர நிழலில் வலது கையை மடக்கித் தலைக்குக் கீழ் வைத்துச் சரிந்து சயனித்து மதியந் திரும்பியதும் 'ளுஹர்' தொழுதுவிட்டு மீண்டும் ஊருக்குப் போகிறார்.

சீனிமுகம்மதுக் கிழவர் 'கண்டுபிடித்த' இந்த 'சேகப்பா கபுறடி' கொட்டியாரக் குடாவின் கரையோரமாக மகாவலிகங்கைத் துறையி

லிருந்து கிழக்கு நோக்கிச் செல்லும் திருகோணமலை மட்டக்களப்பு வீதியில் அமைந்திருக்கிறது. அந்தக் கபுறடியில் நின்றுபார்த்தால் எதிரே வடக்குப் பக்கமாகத் திருகோணமலைத் துறைமுகமும், வடகிழக்காகச் சற்றுத் தொலைவிற் கெவுளிமுனை வெளிச்சவீடும், கடலுட் குத்திட்டு நிற்கும் நெய்மலைத் தீவு என்ற கற்பாரும் தெரியும். கபுறடிக்குக் கிழக்காக ஒரு கல்லெறி தூரத்தில் மூதூர் ஆற்றிலிருந்து வீதிக்குச் சமாந்தரமாக நகர்ந்து வரும் உப்பு நீரோடை தார்ரோட்டை முட்டியும் முட்டாமலும் நின்றுகொண்டிருக்கும்.

கார்த்திகை மார்கழி மாதங்களில் அடைமழை சோனா வாரியாகக் கொட்டுகையில் அந்த ஆறு அணையாகத் தோன்றும் தெருவை உடைத்துக்கொண்டு கடலுற் பாயும். வெள்ளத்தில் ஊரே மூழ்கிவிடும் என்ற பயத்தில் ஊரவர்களே ஆற்றை வெட்டி கடலுக்குட் செல்ல விடுவதும் உண்டு.

முறித்துக்கொண்டு ஓடுவதால் 'முறிஞ்சாறு' என்று அழைக்கப் படும் ஆற்றுக்கும் கடலுக்கும் இடையே ஒரே வெளி. புதிதாக முளைத்த அடம்பங் கொடிகளைத் தவிர, வேறு கடலோரத் தாவரங்களே அங்கு கிடையாது.

முறிஞ்சாற்றின் மேற்காகக் கபுறடியைப் பார்த்தாற் போல மீராசாய்புவின் தென்னந்தோட்டம். தோட்டத்தில் இருக்கும் தென்னை களின் வயதைக் கொண்டு பார்த்தால் மீராசாய்பு அவ்வூருக்கு வந்து இருபது வருடங்கள்தான் இருக்கும். ஓட்டமாவடியிலிருந்து மகாவலி கங்கைக் கரையிலே புகையிலைத் தோட்டஞ் செய்ய வந்தவர் அவர். புகையிலைகளிலேயே கஞ்சாவையும் பயிரிட்டு அரசாங்கத்தாற் பிடிபட்டு கோடேறிச் சீரழிந்த பின்னர், பிறந்த ஊருக்குப் போகமுடியாத வெட்கத்தினாலும் வெஞ்சத்தினாலும் அவர் இந்த ஊரிற் குடியேறினார். இந்த ஊரிலேயே இன்னொரு கலியாணம் பண்ணிக்கொண்டு வாழும் அவர் இப்போது இருநூறு தென்னைகளைக் கொண்ட தோட்டத்தின் சொந்தக்காரர். சொந்தமாக ஒரு ஆட்டுப்பட்டியும் உண்டு. மட்டக்களப்பு 'மாந்திரீகம்' மீராசாய்புவிற்குத் தெரியும். ஆற்றுக்கு அப்பாலிருக்கும் இறால்குழி கிராமத்தவரிடையே அவருக்கு 'மந்திரவாதி' என்ற மதிப்பு இருந்தது. அக்கிராமத்தவர்கள் கங்கைத்துறைக்கு அக்கரையிலுள்ள உப்பாற்று வெள்ளைக்காரனின் தென்னந் தோட்டத்தில் வேலைக்கு வந்த மட்டக்களப்புக் கஞுதாவளைக் கிராமத்தின் சந்ததியினர்.

ஆனால் மீராசாய்புவிற்குச் சீனிமுகம்மது கிழவர் கபுறடியைக் கூட்டிப் பெருக்குவதும், மையத்துப்புட்டியில் சந்தனக்குச்சிகள் கொழுத்தி வைப்பதும், ஆரம்பத்திற் பைத்தியக்காரத்தனமாகவே பட்டன. காலஞ் சென்ற சேகப்பாவைப் பற்றி அவர் கேள்விப்பட்டதேயில்லை. அவர் மட்டுமென்ன? கபுறடிக்கு மேற்காகப் பாடசாலையை அண்மித்திருந்த மையங்காக்கா குடும்பத்தினரும் அவரது கிளைவழியில் உள்ளவர் களும் சேகப்பாவைப் பற்றி கேள்விப்பட்டதேயில்லை. அவர்களும்கூடச் சீனிமுகம்மது கிழவனின் தொண்டைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

ஆனால் கபுறடிக்குப் பக்கமாக அமைந்திருக்கும் தென்னங் காணிச் சொந்தக்காரரான அப்புஹாமிக்கு கபுறடியைக் கூட்டிப் பெருக்கிப் பராமரித்து வரும் சீனிமுகம்மது கிழவர் மீது ஒரு மதிப்பும் மரியாதையும் இருந்தன. கிழவருக்கு மதிய வேளைகளிற் தேநீரோ, இளநீரோ கொடுத்து உபசரிப்பார் அப்புஹாமி. அந்தக் கபுறடியிற்கூட அவருக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டது.

அப்புஹாமியும் உப்பாற்றுத் துரைத்தோட்டத்தில் வேலைக்கு வந்தவர்தானாம். தென்னங்கன்றுகள் வளர்ந்து கணக்கோலை தள்ளிக் குத்தி தெரிந்து இனியும் நாளாந்தம் நீர் வார்க்கத் தேவையற்றதான பருவத்தையடைந்தபோது வெள்ளைக்காரத்துரை அப்புஹாமியையும் வேலையிலிருந்து நீக்கிவிட்டார். அங்கிருந்து கங்கையைத்தாண்டி வந்த அப்புஹாமி இங்கேயே நிரந்தரமாகத் தங்கிவிட்டார். மீராசாய்பு வைப் போலவே, அப்புஹாமியிடமும் தென்னந்தோட்டமும், ஆட்டுப்பட்டி யும் இருந்தன. இறால்குழியிலிருந்து தமிழ்ப் பெண்ணை மணமுடித்துக் கொண்டு இங்கு குடியும் குடித்தனமுமாக வாழ்கின்றார்.

அவருக்கு அருகாமையிலுள்ள தோட்டத்தில் வசிப்பவர் கிருஷ்ணபிள்ளையும் அவரது மக்களும் மருமக்களும்.

கிருஷ்ணபிள்ளை இந்த ஊரிற்தான் பிறந்தவர். ஆனால் அவரது தந்தையாகிய கோவிந்தர் இந்தியக் கரையிலிருந்து எப்படி இங்கே வந்து சேர்ந்தார் என்பது எவருக்குமே தெரியாது. வெள்ளைக்கார அரசாங்கம் கிண்ணியாவிற்கும் மூதூருக்குமிடையிலிருந்து நான்கு துறைகளுக்கும் வாகனங்களை ஏற்றியிறக்கும் மிதப்பு பாதைகளை போட்டபோது கிருஷ்ணபிள்ளை மூதூர்த்துறைப் 'பாதைக்காரன்' ஆகிவிட்டார். அரசாங்க சேவகம்! இப்போது அதே சேவகத்தை அவரின் சந்ததியினர் செய்து வருகிறார்கள்.

கிருஷ்ணபிள்ளையின் தோட்டத்துக்கு அப்பால் மையங் காக்காவும் அவருடைய வாரிசுகளும் எல்லாமாக ஏழு குடும்பங்கள்.

அக்குடும்பங்களுக்கப்பால் நாவலடிப் பாடசாலை றோமன் கத்தோலிக்க மிசனரிகள் அப்பாடசாலையை நடத்தினார்கள். மட்டக் களப்பு வாத்தியார் ஒருவர் மூதூரிலிருந்து பாடசாலைக்கு ஒவ்வொரு நாளும் வருவார்.

பாடசாலைக்கப்பால் கரையோரமாக நீர்கொழும்பு மீனவர்கள் கரைவலை வாடிகள். அம்மீனவர்கள் கட்டிய தென்னோலைக் கொட்டி லிற் புனித பேதுரு தேவாலயம். அத் தேவாலயத்தைப் பாதுகாக்கவும், பங்குனி மாதம் தொழிலுக்கு வந்த மீனவர்கள், புரட்டாதி மாத முடிவில் புனித பேதுரு திருநாளைக் கொண்டாடிவிட்டுத் தம் வலைகளை வள்ளத்தின் வயிற்றிற் புதைத்து வள்ளத்தின் உள்ளும் புறமும் எண்ணெய் பூசி பூச்சிகள் தீண்டாது பாதுகாப்பளித்து, வள்ளத்தைச் சுற்றிவளைத்துத் தென்னோலையால் கூடுகட்டி வைத்துவிட்டுப் போகையில், அவ்வள்ளங்களை காவல் செய்ய அந்திரேயா தன் குடும்பத்தோடு இங்கேயே தங்கிவிட்டார்.

அந்திரேயா தொடக்கம் மீராசாய்பு வரையுள்ள குடும்பங்கள் வாழும் பிரதேசம்தான் நாவலடிக் கிராமம். அக்கிராமத்தில் சீனி முகம்மதுக் கிழவர் கண்டுபிடித்துப் பராமரித்து வரும் சேகப்பா கபுறடி ஐந்தாண்டுகளில் கிழவரின் இடையறாத முயற்சியால் வளர்ச்சியடைந்துவிட்டது.

கபுறடியில் நிற்கும் நாவல் மரத்தில் இப்போது பிறை பதிக்கப்பட்ட பச்சைக் கொடிகள் பறந்தன. நாவல் மரத்திலே உண்டிய லொன்று பொருத்தப்பட்டு விட்டது. கங்கை வலைவாடிக்கு வரும் மீன் வியாபாரிகளுக்கும் கிண்ணியாவிற்கும் மூதூருக்குமிடையில் பிரயாணிக்கும் வழிப்போக்கர்களும் கபுறடி உண்டியலிற் சில்லறை களைப் போட்டுவிட்டுச் சென்றார்கள். நாளடைவில் அது திருகோண மலை 'முற்றவெளியப்பா' கபுறடியைப் போலவோ சீனக்குடா 'ஆலிம் அப்பா' கபுறடியைப் போலவோ, பிரசித்தி பெற்றுவிடும் போலத்தோன்றிய போதுதான் நாவலடி முஸ்லிம்களின் கவனமும் அக்கபுறடியில் விழுந்தது. மீராசாய்பு தாமாகவே முன்வந்து கபுறடியிற் சேவைசெய்யத் தொடங்கினார். 'பாத்திஹா' ஓதினார்.

இந்த நிலையிற்தான் சீனிமுகம்மது கிழவர் காலமானார். திடீரென்று ஒருநாள் அவர் கபுறடிக்கு வரலில்லை. அதறகடுத்தநாளும் வரவில்லை. மூன்றாம்நாள் அவர் காலமான செய்தியை நாவலடிக் கிராமம் அறிந்து கொண்டது. அன்று தொடக்கம் மீராசாய்பு சேகப்பா கபுறடியின் நியமிக்கப்படாத அறங்காவலர் ஆனார்.

இப்போதெல்லாம் சேகப்பா கபுறடியில் 'சூறத்துல் யாசீன்' ஓதினாாகள். உரொட்டி பகிர்ந்தார்கள். கபுறடி மணற்கும்பியில் சந்தனக் குச்சிகள், கமகமத்துப் புகைந்தன. கபுறடியின், அடுத்த வீட்டுக்காரரான அப்புஹாமி மையத்துப்புட்டியில் நாள் தவறாது சந்தனக் குச்சிகளைக் கொழுத்தி வைத்தார்.

தெருப்புழுதியை வாரியடித்துக் கச்சான் காற்று சுழற்றியடித்த ஆடி மாதத்தில் ஒருநாள்!

கொழும்பிலும் ஏனைய சிங்கள நகரங்களிலும் கலவரங்கள் நடப்பதாக மீராசாய்பு வீட்டு வானொலி சொல்லியது. வெலிக்கடைச் சிறையிலிருந்த தமிழ்க் கைதிகள் கொல்லப்பட்டதாகவும், வேறு பல பயங்கரச் செய்திகளும் பல வாய்வழியாக வந்தன.

ஆனால் அந்தச் செய்திகள் எவையுமே நாவலடிக் கிராமத்தில் எந்தத் தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை.

எனினும் அந்தச் செய்திகள் வந்த மூன்று வாரங்களில் நீர்கொழும்பு மீனவர்களெல்லாம் ஊருக்குச் சென்றுவிட்டார்கள். வழமையாக அவர்கள் புரட்டாதி மாத முடிவில்தான் ஊருக்குச் செல்வது வழக்கம். அதற்குமுன் பேதுரு கோயிலிற் திருநாளையும் மிகச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். அத்திருநாளுக்காகத் திவுளுப்பிட்டியாவிலிருந்தே பட்டாசுகளும் வானவெடிகளும் வருவிப்பார்கள்.

ஆனால் இந்த ஆண்டு எந்தவித ஆர்ப்பாட்டமுமின்றி அவசர அவசரமாகத் திருநாளைக் கொண்டாடினார்கள். தோணிகளை மேட்டில் இழுத்துக் கூடுகட்டி வைக்காமல், தோணிகளையும், வலைகளையும் லொறிகளில் ஏற்றிக்கொண்டு ஆவணி மாதத்திலேயே நாவலடிக் கிராமத்தை விட்டுப் போய்விட்டார்கள்.

ஆயினும் அந்தக் கூட்டத்தோடு அந்திரேயாவும் அவர்

குடும்பமும் போகவில்லை. அவன் மீராசாய்புவிடம் சொன்னார்.

''நாங்க போறதில்லை நானா. எனக்கு ஊரிள ஒன்னுமில்லை. ஒரு ஆளையும் தெரியா. நம்ம புள்ளைகளுக்கும் அந்த நீர்கொழும்பைத் தெரியா.''

அப்புஹாமியும் சொன்னார்.

''இந்த நாட்டில எங்க பிறந்தனோ எனக்கு தெரியா. சிங்களம் பேசத்தான் தெரியும். ஆனா எழுதத் தெரியா. எண்ட ஆறு புள்ளங்களுக்கும் சிங்களம் எழுதத் தெரியா. அவர்கள் படிச்சதெல்லாம் தமிழ்தான். அவங்கட அம்மாவும் தமிழ். நாங்க எங்க போறது?''

நாட்டை இரத்த ஆறாக்கிய கறுப்பு ஜுலை முடிந்து ஓராண்டு கழிந்து விட்டது.

ஒருநாள் கங்கைக்கரை பன்வெட்டுவான் பட்டிக்குப் பால் வாங்கப் போன அப்புஹாமியின் மூன்றாவது மகன் வீட்டுக்கு வரவில்லை.

சாயந்தரம் அப்புஹாமி இறால்குழி ஊருக்குச் சென்று விசாரித்த போது அங்கும் சில இளைஞர்கள் வீட்டை விட்டுப் போய்விட்டார்கள் எனத் தெரிந்தது. அப்படிப் போனவர்கள் எல்லாரும் இறால்குழிப் பாடசாலையில் படித்தவர்கள்.

அப்புஹாமிக்கு விளங்கிவிட்டது!

இறால்குழிப் பையன்களோடு சேர்ந்து போய்விட்டான். பதினெட்டு வயதான தன்மகன் என்றுமே அமுசடக்காக எதுமே பேசாதிருப்பான். அவனது அம்மாவின் தமிழ் இரத்தம் அவன் மனதிலே குழப்பத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டுமென்று அப்புஹாமி எண்ணிக் கொண்டான்.

காலம் ஓடிக்கொண்டிருந்தது.

இறால்குழி கிராமவாசிகள் தாம் வழமையாகச் செய்யும் தொழிலான மிளகாய்ப் பயிர்ச் செய்கைக்கு கங்கைக் கரையோரம்

இந்த ஆண்டும் போவதா? இல்லையா? என்பதைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தனர்.

சித்திரைப் புத்தாண்டும் பிறந்துவிட்டது!

வைகாசிப் பூரணைக்குத் தலைக்காற்று மழைபெய்வதற்கு முன்னர் கங்கைக் கரைக்கு சென்று தோட்டத்தை உழவேண்டும். நாற்று மேடை போட வேண்டும். ஆனால், கங்கைக் கரையோரத்தில் வாடியடிப்பதற்குத் தோட்டக்காரர்கள் பயந்தார்கள். ஆனாலும் வயிறு என்ற ஒன்று இருக்கின்றதே. அவர்களது உள்ளத்தே கௌவியிருக்கின்ற இனந்தெரியாத பயத்தினால் நடுத்தர வயதானவர்களும் கிழவர்களும் போகத்தான் செய்தார்கள்.

சித்திரை மாதத்தின் இறுதிப் பகுதியில் மூதூர்ப் பிராந்தியத்தில் வன்செயல்கள் முளைவிடத் தொடங்கின. அமைதியாகவிருந்த மூதூர் வட்டகையிலும் உள்நாட்டு போர் ஆரம்பமாயிற்று. இதனையடுத்து, இப்பகுதியிலுள்ள தமிழ் முஸ்லிம் மக்கள் குடிபெயர்ந்து மூதூரிலும் தோப்பூரிலும் அகதிகளாயினர்.

இறால்குழி நாவலடி கிராமவாசிகளும் புலம்பெயர்ந்தார்கள். அப்புஹாமியும் அந்திரேயாவும் கூட புலம்பெயர்ந்தனர்.

அந்திரேயா புலம்பெயர்ந்து தன் குடும்பத்தோடு மூதூர் அந்தோனியார் கோயில் அகதிகளோடு சேர்ந்து கொண்டார். அப்புஹாமியின் மனைவியும் பிள்ளைகளும்கூட அங்கேதான் அகதிகளானார்கள். அப்புஹாமி மூதூர் பௌத்த யாத்திரீகர் விடுதியில் அகதிகளாகவிருந்த சிங்கள மக்களோடு சேர்ந்து கொண்டார். நாவலடிக் கிராமத்தில் வாழ்ந்த முஸ்லிம்கள் மூதூருக்கும் கிண்ணியாவுக்கும் புலம்பெயர்ந்தனர்.

மீராசாய்பு குடும்பத்தோடு மூதூரில் அகதியானார்! இந்த கலோபரத்துக்கிடையில் மூதூர்ப் பிராந்தியத்தின் இரு முக்கிய இனங்களான முஸ்லிம், தமிழர்களிடையே மிகவும் அன்னியோன்யமான உறவிருந்தது.

ஆனால் கொடூரமான உள்நாட்டுப் போரின் உத்திகளும், தந்திரோபாயங்களும் நகமும் சதையுமாக வாழ்ந்த தமிழ் முஸ்லிம்

மக்களிடையே பிளவை ஏற்படுத்தின.

ஒற்றுமையாகவிருந்த இரு இனங்களும் நாயும் பூனையுமாகி விட்டன. முஸ்லிம் மக்கள் சிலர் மூதூர்ப் பகுதியை விட்டுத் தென்பகுதிக் குப் புலம்பெயர்ந்தனர். மனித வாழ்வு நித்ய நரகமாகிவிட்டது!

ஐந்தாண்டுகள் ஓடிவிட்டன. தொண்ணூறாம் ஆண்டு தை மாதம் எல்லா மக்களுமே நிம்மதிப் பெருமூச்சு விட்டனர். ஆனால் மூன்று மாதங்களுக்குள் அமைதிப் பேச்சுவார்த்தை முறிந்துவிட மீண்டும் போர்!

அகதிகளாக வந்தவர்கள் மீண்டும் அவரவர் கிராமங்களுக்குக் குடியேற்றப்பட்டனர். ஆனால் இறால்குழி, நாவலடி ஆகிய கிராமங்களே மீண்டும் குடியேற அனுமதிக்கப்படவில்லை. அவர்களுடைய கிராமங்கள் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

அப்புஹாமி இன்னமும் பன்சல வளவிற்தான் இருக்கிறார்.

அந்திரேயா பிரதான வீதியில் நொறுக்கப்பட்ட வீட்டின் சுவர்களுக்கிடையே ஏதோ நலன்புரித் தாபனம் கொடுத்த கம்புகளாலும் ஓலைகளாலும் குடிசையை அமைத்துக் கொண்டு வாழ்ந்தார்.

மீராசாய்புவும் தன் மனைவி வழி உறவினர்களின் வீட்டில் இன்னமும் அகதியாகவே வாழ்கிறார்.

கிண்ணியாவிற்கு அகதிகளாகச் சென்ற நாவலடி முஸ்லிம்கள் இன்னமும் கிண்ணியாவிலேதான்.

உறவினர் வீட்டில் இடநெருக்கடியில் குடும்பத்தினருடன் அல்லாடும் மீராசாய்பு முறிஞ்சாற்று மேட்டில் தன் தென்னந் தோட்டத்தை நினைத்துப் பார்க்கிறார். 'ஆ' எத்தனை குளுமையான தென்னஞ் சோலை. அருமையான கடற்காற்று. வருசம் ஆறேழு கிடாய் விற்கக் கூடியதான ஆட்டுப்பட்டி. இரண்டு தென்னைகளுக்கிடையிலே தொங்கும் கோழிக்கூடு. எல்லாவற்றிற்கும் மேலாக நாவல் மரத்தின்கீழ் அமைந்த சேகப்பா கபுறடி! அந்தக் கபுறடியை யார் கூட்டிப் பெருக்குவார்களோ? அந்தக் கபுறுஸ்தானத்தைக் கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு அங்கு கூளமும் குப்பையும் நிறைந்திருக்கும் அந்தப் புண்ணியாத்துமாவின்

கபுறுதானத்தைக் கூட்டிப் பெருக்கி துப்பரவாக வைத்திருந்த சீனிமுகம்மதப்பாவைப் பறுவாய் பண்ணாத பாவத்திற்குத்தான் இறைவன் எனக்கிந்த உத்தரிப்பைத் தந்திருக்கிறான். நாவலடிக்கு குடியேறியதும் விக்காததை வித்து அந்தக் கபுறடியைக் கல்லால் சியாரமாகக் கட்டி மௌலூது ஓத வேண்டும்! என்று மீராசாயிபு கலங்கினார்.

அப்புஹாமிக்கும் அந்திரேயாவிற்கும் பன்சாலைக்குப் பக்கத்திலிருந்த அரசாங்க காணியில் கொஞ்ச நிலம் கொடுக்கப்பட்டது. அந்நிலத்தில் புதிதாகக் குடிசைகள் கட்டிக்கொண்ட ஏனைய சிங்கள மக்களோடுகூடி வாழ்ந்தாலும் அவர்களுக்கு நிம்மதியில்லை.

அப்புஹாமி தன் தென்னந்தோட்டத்தை நினைத்தார். அம்மணல் வெளியிலே அரசமரத்தடியில் தான் கூடுகட்டி வைத்திருந்த புத்த பெருமானை நினைத்தார். தன் தென்னந் தோட்டத்தின் அயலிலேதான் சந்தனக் குச்சிகள் கொழுத்தி மரியாதை பண்ணும் சேகப்பா கபுறடியை நினைத்தார். அங்கேயுள்ள நிம்மதியும் மகிழ்ச்சியும் இந்தக் கையகலக் காணியில் இல்லையே என்று ஏங்கினார்.

அந்திரேயாவும் நாவலடிக் கடற்கரையிற் கங்கைக் கழிமுகத்தினருகே அமைந்திருந்த புனித பேதுரு தேவாலயத்திற்குச் சென்று அதன் அருகாமையிற் குடியிருக்கவே விரும்பினர்.

'இந்த ஊரிலிருந்து என்ன தொழிலை நான் செய்வது? மாரிக் கடலடிக்கும் இந்தக் காலத்தில் கடற்கரை மணலில் முட்டையிட வரும் ஒரு கடலாமையைப் பிடித்தால் கூட கைநிறையக் காசுவரும்.' என்று அந்திரேயா நினைத்தார்.

கிருஷ்ணபிள்ளையும் குடும்பத்தினரும்கூட நாவலடிக்குப் போவதையே சிந்தித்தனர். 'தங்கள் பிள்ளைகளும் பெண்டிரும் நாவற் பழக்காலத்தில் நாவற்பழம் பொறுக்கி ஊருக்குள் கொண்டு விற்றும், தன்பருவனாகப் பழுத்துவிடும் பனம் பழங்களின் கொட்டைகளை மேடையிட்டு தைமாதத்தில் தோண்டி விற்றுமே நூற்றுக்கணக்கில் சம்பாதித்து விடுவார்கள்.' என்று ஏங்கினார்.

வேப்ப மரத்தின் கீழே தமது வீட்டுக்குப் பக்கத்தில் சூலம் நட்டு வழிபடும் வைரவர்தான் தங்களை மீண்டும் அங்கு கொண்டு போய்ச் சேர்க்க வேண்டும் என்று பிரார்த்தித்தார்.

அப்புஹாமியின் வளவுக்குள்ளே இருக்கும் அரசமரத்தடிப் புத்த பகவானும், கடற்கரையோரத்துப் பேதுரு முனீந்திரனும், சேகப்பா கபுறடியும்........!

நாவலடிக் கிராம மக்கள் எந்த சமயத்தவராக இருந்தாலும் மற்றவர்கள் சமயத்தை மதித்தனர். முஸ்லிம்களும், தமிழர்களும், சிங்களவர்களும் என்றைக்குமே ஒற்றுமையாகத்தான் வாழ்ந்தனர்.

இந்த நாடு எக்கேடாவது கெட்டுச் சீரழியட்டும். இந்த நாட்டின் ஒரு மூலையில் உள்ள நாவலடியில் மீராசாய்புவும், கிருஷ்ணபிள்ளையும், அப்புஹாமியும், அந்திரேயாவும் தத்தம் தொழிலை அமைதியாகச் செய்துகொண்டு அன்னியோன்யமாக வாழ்ந்தனர். அவர்கள் அவ்வாறே வாழத் துடித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த நாடும் நாவலடியைப் பின்பற்றுமா.....?


(யாவும் கற்பனை)

(தினக்குரல் 26.12.99)

# சம்பிரதாயங்கள்

இந்த ஸபர் மாசத்தில வாற கடைசிப் புதன் கிழமை ஒடுக்கத்துப் புதன். அந்தக் காலத்தில ஒடுக்கத்துப் புதன் எண்டால் பெரிய முஸ்பாத்தி.

முஸ்லிம்களுக்கு வருசத்தில் ரெண்டே ரெண்டு பெருநாள்தான். முதலில் நோம்புப் பெருநாள். மற்றது ஹஜ்ஜுப் பெருநாள். ரம்ஷான் மாதம் முழுவதும் நோன்பு புடிச்சி, ஷவ்வால் பொறையைக் கண்டதும் பெருநாள்!



நான் சின்ன பையனாக இருக்கக்குள்ள நிய்யத்து வெச்சி நோம்பு பிடிச்சிருக்கேன். நோம்பு எண்டால் கஷ்டந்தான். ஷஹர் நேரத்தில சாப்பிட்டு, பகல் முத்தலா நோம்பு பிடிக்கனுமாம். உமிழியைக்

கூட சேர்த்து முழுங்கேலாது. பகலில் நித்திர கொள்ளலாகாது. மஹரிபுக்குத் தான் நோம்பு திறக்கணும்! அந்தக் காலத்தில பள்ளிவாசலில் நோம்புக் கஞ்சி கொடுப்பாங்க. அதக் குடிச்சி நோம்பு தொறந்திட்டு, இஷாத் தொழுகையும், தறாவியாத் தொழுகையும் தொழுது முடிஞ்சதும் சாப்பாடு. பொறகு சஹருக்குத்தான் சாப்பாடு! ஊட்டு வெளிய ரேடியோ இல்ல. ரேடியோவில சொல்றதையும் நம்ம ஊரவன் நம்புறதில்லை. பொறக் கண்டாப் பெருநாள். 'கண்டுபிடி கண்டுவிடு' என்பதுதான் ஊரவண்ட தத்துவம். சில வேள மூதூரில் காண்கிற ஷவ்வால் பொறையை கிண்ணியாக்காரர்கள் காணமாட்டார்கள். அதனால் மூதூரில் பெருநாள் நடக்கின்ற அண்டைக்கு கிண்ணியாவில பெருநாள் இல்லை. அடுத்த நாள்தான் கிண்ணியாவில் பெருநாள். 'கண்டுபிடி, கண்டுவிடு' என்பது தான் எங்கட தத்துவம்.

நான் நினவறிஞ்ச காலத்திலிருந்து நோம்பு புடிக்காம விட்டதில. இருபத்தேழாம் நோம்புக்கு என்னால முடிஞ்ச சகாத்தையும் செஞ்சிருக் கன். பெருநாள் அண்டைக்கு வீட்டுக்கு இந்திரராசா மாஸ்டரைக் கட்டாயம் கூப்பிடுவேன். அவனும் நானும் ஒண்டாகப் படிச்ச நாங்க.

நோம்புப் பெருநாளைப்போல ஹஜ்ஜுப் பெருநாள் விசேஷம் இல்ல. காசுள்ளவன் ஹஜ்ஜுக்குப் போவான்.

எண்ட ஐம்பது வருஷ வாழ்க்கையில ஒரு தரமாவது ஹஜ்ஜுக்குப் போக என்னால முடியல்ல. எண்ட ஊட்டில ஒரு ஆட்டையோ, மாட்டையோ 'தக்பீர்' பண்ணி அயல் அண்டையில் உள்ள வங்களுக்கு 'குர்பான்' கொடுக்க முடியல்ல. என்னால ஏண்டதெல்லாம் ஹஜ்ஜுக்குப் போற ஹாஜாஜிகளை கூட்டத்தோடு கூட்டமாய்ச் சேர்ந்து 'ஸலவாத்' சொல்லி மூதூர் ஜெற்றி வரையும் கூட்டிப் போறதான்.

இப்ப ஊரில அந்த வழக்கமும் அருகிப் போய்க் கொண்டிருக் கிறது. காசுள்ளவன் ரவல் ஏஜென்சிக் காரனைப் புடிச்சி ஒருத்தருக்கும் தெரியாமலே ஹஜ்ஜுக்குப் போறான். வரக்குள்ள சிலர் எதை எதையெல்லாம் கொண்டு வாறதாகச் சொல்றாங்க.

நோன்புப் பெருநாளையும், ஹஜ்ஜுப்பெருநாளையும் விட்டா அடுத்ததாக 'மீலாது நபி' என்ற நபி பொறந்த தினக் கொண்டாட்டம். ஐம்பது அறுபது ஆண்டுகளுக்கு முன்னால மூதூர்ப் பகுதியில அது

பெரிய விழாவாம். தெருவுக்குத் தெரு பந்தல் போட்டு, பந்தல அழகாகச் சோடிப்பாங்களாம்.

ஊரில ஏழெட்டு பந்தல் பள்ளியாத் தெரு, வண்ணாந்துற, நொக்ஸ் றோட், குளத்தடித்தெரு போன்ற இடங்களில் இருக்குமாம். ஜிகினாக் கடதாசியாலயும், இடைக்கிடை ரஷக் குண்டு கட்டியும் பந்தலச் சோடிப்பாங்களாம். ராவையில ஊர்ல உள்ள ஆணும் பெண்ணும் கூட்டம் கூட்டமாக வந்து பந்தலப் பாப்பாங்களாம். பத்து நாளைக்கு ஒரே கோலாகலந்தானாம். இதெல்லாம் எனக்குத் தெரியாது. வாப்பாதான் இதப் பத்திச் சொன்னார்.

இப்ப அந்த வழக்கமில்ல பள்ளிக்கூடப் பொடியன்கள் பேச்சுப் போட்டியில பேசுவாங்க. பள்ளிக் கூடத்தில பேச்சுப் போட்டிக்குப் பழகுவதுதான் எங்களுக்கு ஒரய வேல. நான் பழக்கின பையன்கள் ஒவ்வொரு ஆண்டுப் பேச்சுப் போட்டியில வெண்டுக்கிட்டிருக்கான்கள். ஆனா ஒடுக்கத்துப் புதன்தான் உண்மையான பெருநாள்.

ஒடுக்கத்துப் புதனில படுத்த பாயாகக் கிடந்த வியாதிக்காரங்க சுகமாகி அண்டைக்கு குளிச்சி முழுகி சுத்தமாகி வழக்கமா அடுப்பு மூட்டுகிற எடத்தை விட்டு வேற எடத்தில அடுப்பு மூட்டிச் சோறாக்கிக் கணுமாம் எண்டு நான் கேள்விப்பட்டிருக்கன். எண்டாலும் அந்தக் கதையைப் பத்தி எங்களுக்கக் கவலை இல்ல. ஒடுக்கத்துப் புதன் அண்டைக்கு வண்டிலைக் கட்டிக்கொண்டு இலக்கந்த குளத்துக்கோ, கெங்கை கூவாந்திரைக்கோ, கொக்கட்டிக்கோ தெத்திக்கோ சோறாக்கித் திண்ண வெள்ளாப்பில போயிடுவோம்.

இருபத்தஞ்சி வருஷத்துக்கு முன்னால மாட்டுவண்டி கட்டிக் கொண்டு ஒடுக்கத்துப் புதன் அண்டைக்குப் போனோம். அப்ப நான் திருமணஞ் செய்யல்ல. வாப்பா உம்மாவோட போனேன்.

வெள்ளாப்பில எழுந்து வண்டிலில மாட்டப் பூட்டிக்கிட்டு, கெங்கையில கண்டக்காட்டு தெத்திக்குப் போனோம்.

மாவலி கங்கை ஒரு டானா மடக்கில வளஞ்சி அப்படி வளையக்குள்ள முடக்குல மணலை அள்ளி வார்த்திருந்தது. அருகெல்லாம் மருத மரச் சோலை. மாவலியைத் தாலாட்டி ஒரசிக் கொண்டு வாற காத்து குளிர்ச்சியாக நம்மைத் தடவிக்கொண்டு

போகும். வாப்பா தெத்தியில வண்டியில அவிழ்த்து கெங்கையில மாட்டுக்குத் தண்ணி காட்டி, நெடுங்கயித்தில மருத மரத்தில கட்டிவிட்டார். உம்மா அடுப்ப மூட்டி தேத்தண்ணீ வெச்சா.

இந்திரராசா எங்களோட வந்திருந்தான். அவன் நல்ல வெடிக்காரன். தேத்தண்ணியைக் குடிச்சவுடனேயே அவன் என்னையும் கூட்டிக்கொண்டு காட்டுக்குள்ள போனான். அடித் தொறந்த கொங்காக்காடு. கணிசத்தப்பாத்து அசிப்பில்லாம அவன் முன்னால போனான். நான் அவனுக்குப் பின்னால நடக்கிறன். இருந்தாப்போல தோக்குக்கு வில்லேத்தினான். அவன்ட கண்ணில என்னதான் இருக்கோ காட்டுக் கோழியைக் கண்டுட்டான். தோக்கால வெடிப் பறிஞ்சிது. சன்னத் தோட்டாவால வெடி வெச்சிருக்கான் போல. ரெண்டு கோழியும் ஒரு சாவலும் விழுந்திச்சி நான் ஓடிப்போய் மூனையும் 'தக்பீர்' பண்ணினேன்.

அத எடுத்துக்கிட்டு வாற வழியில வாணை ஒன்று. மாவலியில வெள்ளம் வரக்குள்ள வெள்ளம் கரையைக் கடந்து பள்ளமான அந்த வாணையை நிரப்பும். வெள்ளம் வடிஞ்சாலும் வாணைக்குள்ள தண்ணி சிலுவு தண்ணியாக் கெடக்கும். வாணைக் கருகில வெல்லம் பத்தைகளும் நாணல்களும் அந்தப் பத்தைகளில் இருந்து வாணையில் உறுமீன் வருமளவும் கொக்குகளும் நாரைகளும் காத்திருக்கும்.

இந்திரராசா வெள்ளக் கொக்குகளைக் கண்டிட்டான். பதுங்கிப் பதுங்கிப் போய் ஒரு புத்துக்குப் பின்னால் மறைஞ்சிருந்து கொண்டு சுட்டான். ரெண்டு பென்னம்பெரிய வெள்ளக் கொக்குகள் விழுந்தது. அதுகளையும் தக்பீர் பண்ணி எடுத்துக் கட்டிக் கொண்டு விடுதி விட்டிருந்த இடத்துக்கு வாறோம். வந்த நாங்க கோழிகளையும், கொக்குகளையும் உரிச்சி சந்தாக்கி, உம்மாட்டக் கொடுக்கிறோம்.

வாப்பா வெள்ளமணலில விரிச்சபாயில சம்மானக்கட்டி கொண்டு கீரைகளைக் கந்தப் பாக்கிறார். ''இதென்ன வாப்பா. இலையும் குழையும். எறச்சிதான் கசனா இருக்குதே?''

''இல்லடா மகனே. கெங்கக் காட்டுக்கு வந்தா எறச்சி மட்டுந்தானா கறி? கெங்கக் கரையில இந்தா படந்து கெடக்கு தாழிக்கீரை கொஞ்சத் தூரத்தில காட்டுக்குள்ள கானாந்தியும், காரையும் பிச்சி வந்தேன். இதுகல ஒண்ணாச் சமைச்சா களிப்போல

நாக்கில ஒட்டும். விளாங்காய்ப் புளியும் சேர்த்துச் சமைச்சா கீரையோட அரக்கொத்து அரிசிச் சோறு தின்னலாம். இதிண்ட ருசி உங்களுக்கெல்லாம் எங்க தெரியப் போவுது."

வாப்பா கீரைகளைக் கந்தப் பாத்து சொழகுல போட்டு உம்மாட்டக் கொடுக்கிறார். கொடுத்த கையோட வண்டிக் கூட்டில இருந்த வீச்சு வலையை எடுக்கிறார் வாப்பா.

''நாங்களும் வரட்டா வாப்பா?"

''வேண்டாம் மகனே. வாணைக்கே ஒரே சேறாக இருக்கும். எனக்கு இந்தக் காடெல்லாம் தண்ணிபட்ட பாடு. நான் வாணைக்கே சென்று ஒரு வீச்சி வீசிட்டு வாறன்."

''நாங்களும் வாறோம் வாப்பா!" என்றுகொண்டே நானும் சின்னப் பயலும், இந்திரராசாவும் வாப்பாவுக்குப் பின்னால போறோம்.

வாணைக்குள்ள கெண்டைக்கால் அளவு தண்ணி கெடந்தது. கச்சான் காத்தில கண்டியில மழை பெஞ்சாத்தான் வாணை நிரம்பும். இப்ப கெண்டைக்கால் அளவு தண்ணிக்குள்ள வீசத்தான் வாப்பா வலையைத் தூக்கிக்கிட்டு வாறாரா என்று யோசிச்சோம். வாணைக்கே வாப்பா இறங்கி நடக்கிறார்.

அவர்ர கால் சேத்தில புதையிது. 'சதக் புதக்' எண்டு நடந்து வாப்பா நார் உரிக்க கம்பு வெட்டிட மொட்டயாகக் கெடந்த வெல்லம் பத்தையை நோக்கிப் போகிறார். பத்தை அடியில தண்ணி இல்ல. வாப்பா வெல்லம் புடரை அடியில புடிச்சித் தூக்கிறார். அதுக்குள்ள மீன் நெளிகிறது எங்களுக்குத் தெரிகிறது.

நாங்க மூணு பேரும் சேத்துக்கால ஓடி வெல்லம் புதரை முடுகிற்றம். வாப்பா தூக்கிய புதரின் அடியில சந்தனமாகக் குழைஞ்ச சேத்தில மீன்! ''விரால் மீன் வாப்பா?" ''விரால் மீன் இல்ல மகன். விரால் மீனப் போலதான். சுங்கானுக்குப்போல இதுக்கும் மீசை. ஆனா முள் இல்ல'. என்ற வாப்பா வெல்லம் புதரை எங்களைத் தூக்கச் சொல்லிட்டு சேத்துக்குள்ள கையை வெச்சிட்டு மீனப் புடிச்சி சிறுவாளோட சேத்து அரையில கட்டி இருக்கிற பறிக்குள்ள போடுகிறார். நாங்களும் ஆசைப் பாட்டில சேத்துக்க கையை வெச்சி மீனப் புடிச்சி

வாப்பாட பறிக்குள்ள போடுறம். பறிக்குள்ள கெடந்து மசறி மீன் துடிக்குது. பறி நெறஞ்சி போச்சு. சாண் நீளத்துக்கு மேலே நூறு மீன் தேறும். வாப்பாட வீச்சு வலைக்கு வேலை இல்ல.

நாங்கள் நாலு பேரும் சேத்துக்காலோட வாடிக்குப் போறம். வாடிக்கு வந்த கையோட வாப்பா மீன்களைப் பிளந்து கீறத் தொடங்கினார்.

''என்ன வாப்பா செய்யப் போறீங்க?''

''நெருப்புக் கருவாடு போட்டாத்தான் குளத்துக் கருவாடு ருசியாக இருக்கும். அதத்தான் செய்யிறன்.''

இந்திரராசா ஒரு சிகரெட் குடிச்சி முடியிறத்துக்குள்ள வாப்பா எல்லா மீன்களையும் பிளந்து கீறவிட்டார். கீறின கையோட வாப்பா மருத மரத்தில கம்பு தறிச்சி நாலு கம்பு நாட்டி முள உசரத்தில வரிச்சி பரப்பிப் பறன் போட்டு, கீழே நெருப்புப் பத்த வெச்சி கருவாடாக் கிக் கொண்டிருந்தார்.

நாங்க கெங்கையில குளிக்கப் போறம். கெங்கையில இடுப்பளவுக்குத் தான் தண்ணி இருக்கு. ஆனா தண்ணி வேகமாத்தான் ஓடுது. ஓடுற தண்ணி எங்ககாலடியில மண்ணை அரிச்சிப் பள்ளமாக்குது. நாங்க மூணுபேரும் கெங்கையில முங்கி, நீச்சலடிச்சி கும்மாளமிட்டுக் குளிக்கிறோம்.

இந்திரராசா சொன்னான் ''மச்சான் இந்த மாவலிதாண்டா நம்மட காவேரி.''

தம்பி சினிமாப் பாட்டுப் பாடினான். ''காவேரி தண்ணீர் பாட்டால் கன்னியர் மேனி தங்கம்''

''ஆம் மாவலி கங்கை நமக்கு காவேரிதான். காவேரி நதியை 'மகவாய் வளர்க்கும் தாயாகி' என்று இளங்கோவடிகள் பாடி இருப்பது இதற்குப் பொருந்தும். இந்தக் காவேரித்தாய் நம்மூர் வயல்களுக்கு செவிலித்தாய். இதன் கரையிலே எத்தனை மாட்டுப் பட்டி! எத்தனை எருமைத் தாவளங்கள்! இதன் கரையிலே மிளகாய்த் தோட்டங்களும், புகையிலைத் தோட்டங்களும் எத்தனை மனிச ஜென்மங்கள் இந்த

மாவலித்தாய் சுரப்பதால் பிழைக்கின்றனர்." என்றேன் நான்.

நாங்கள் குளியலை முடித்துக்கொண்டபோது மூன்று மணியாகிவிட்டது. என்மனதிலே அந்தக் காலத்து ஒடுக்கத்துப் புதன் நினைவுகள் நெளிந்து கொண்டிருக்கின்றன.

அந்த நினைவுகள் இப்போது இன்பமா? துன்பமா? மாவலிக் கரைக்கு மட்டுமல்ல. சூடைக்குடா, இலக்கந்தை, கொக்கட்டி, இலங் கைத்துறை மொகத்துவாரம் என்று ஊர் ஊராகச் சென்று ஒடுக்கத்துப் புதன்கள்.

ஆயினும் இப்ப இந்தக் ஹறவாப் போன சண்டையால கெங்கைக்குப் போக முடியல்ல. எங்கேயும் போக முடியல்ல. வண்டில கட்டிற்று எங்கேயும் போனா நாங்க புலிக்குச் சாப்பாடு கொண்டு கொடுக்கிறதாக சிலர் சொல்லுவாங்க.

இலங்கைத்துறை மொகத்துல திண்ட றாலும், கொடுவாச் சினையும் எவ்வளவு ருசி. அதுக்கெல்லாம் போக இப்ப ஏலுமா? நான் பெருமூச்சு விடுறன். நினைச்ச இடம் செல்ல முடியாததால் மனித உரிமை மீறல்கள் எல்லாந் தகர்ந்து இந்த நாடு எப்ப நல்லாய்ப் போவப் போவுது. ஒடுக்கத்துப் புதன்கள் மீண்டும் எப்போது கலகலப் பாகும்.

மீண்டும் நான் பெருமூச்சு விடுறன்.

"என்ன மாஸ்டர் பெருமூச்சு விடுறீங்க" அன்வர்தீன் மௌலவி கேட்கிறார்.

"அந்தக் காலத்து ஒடுக்கத்துப் புதன்களை நினைச்சேன்; அதப்போல எப்ப இனி கெங்கக் காட்டுக்கு சோறாக்கித் தின்னப் போகலாம் எண்டு எண்ணினேன். துக்கமாக இருக்குது."

அன்வர்தீன் மௌலவி சொன்னார்

"மாஸ்டர் உள்நாட்டுப்போர் காரணமாகக் கெங்கைக் கரைக் கும் மற்ற இடங்களுக்கும் போக முடியவில்லை என்பது வேற விஷயம். ஆனால் ஒடுக்கத்துப் புதனோடு சம்பந்தப்படுத்துவது பிழை"

"என்ன சொல்றீங்க மௌலவி. ஒடுக்கத்துப் புதனுக்குச் சோறாக்கித் தின்னப் போவது நம்ம ஊர்ல காலங் காலமாக நம்ம ஊர் வழக்கமாச்சே. ஊட்டுல அடுப்பு மூட்டாமல் ஒடுக்கத்துப் புதன் அன்று வேறு எங்கோ அடுப்பு மூட்ட வேணுமா?"

"அந்த வழக்கமே பிழையானது. குர் ஆனிலோ, கதீஸிலோ ஒடுக்கத்துப் புதன் பற்றி எதுவுமே சொல்லப்படவில்லை. ஆனா நாம ஓர் பிழையான வழக்கத்தைக் கையாண்டு வந்திருக்கம். இந்த வழக்கம் வேற ஊர்களில் இல்ல."

'நான் மௌனியானேன்.' அன்வர்தீன் சிறந்த மார்க்க அறிஞர். அன்வர்தீன் மௌலவி மேலும் சொன்னார்.


"இந்த உள்நாட்டு யுத்தம் நம்ம எல்லாருக்கும் எத்தனையோ கொடுமைகளையும் தீமைகளையும் செய்திருக்கிறது. ஆனா ஒருசில நன்மைகளையும் செய்திருக்கின்றது. அதில ஒண்ணுதான் ஒடுக்கத்துப் புதனன்று உல்லாசப் பயணத்தை நிறுத்தியது."

ஆனால் என் மனசு இதை ஒப்புக்கொள்ளவில்லை. ஒடுக்கத்துப் புதன் அன்று உல்லாசப் பயணம் போவது ஊர் வழமையாச்சே!....

(நேயம் ஆண்டு மலர் - 2001)

# ஜலசமாதி

மதியச் சாப்பாட்டின் பின்னர் வழக்கம்போல கண்ணயர்ந்தேன். தை மாத பின்பனிக்காலம் ஆரம்பித்து விட்டாலும் இன்னமும் வாடைக் காற்று ஓயவில்லை. வாடைக்கூதல் மத்தியான வேளையையும் இதமாக்கிக் கொண்டிருந்தது. சுக நித்திரையில் இருந்த என் காதுகளில் கனவிற் கேட்பதுபோல பல குரல்கள் கேட்கவே எழுந்து உட்கார்ந்தேன். 'லோஞ்ச்' கடலில் தாண்டு போச்சாம்' என்ற பல அவலக் குரல்கள். நான் படுக்கையை விட்டு எழுந்து வீதிக்கு ஓடினேன். இதுவரையிலும் என்சீவிய காலத்தில் லோஞ்சோ. வத்தையோ கடலில் அமிழ்ந்ததாக நான் கேள்விப்படவில்லை. நான் வீதிக்கு வந்தபோது ஊரே ஜெற்றியை நோக்கி அவலக்குரல் எழுப்பிக் கொண்டு ஓடிக் கொண்டிருந்தது.



எந்த லோஞ்ச் ஆழ்ந்தது? திருக்கோணமலையில் இருந்து மூதூருக்கு வந்த லோஞ்சா? அல்லது இங்கிருந்து திருக்கோணமலைக்குப் போனதுவா? எவருக்குமே இது தெரியவில்லை. எல்லாரும் அவசர அவசரமாக ஓலமிட்ட வண்ணம் ஜெற்றியை நோக்கி ஓடுகிறார்கள். நான் வீட்டுக்கு வந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு ஜெற்றியை நோக்கிப் பறக்கின்றேன்.

உள்நாட்டுக் கலவரங்களால் ஊரிலே முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் சுமுகமான உறவில்லை. ஜெற்றி முஸ்லிம் வட்டாரத்

தில் இருக்கின்றது. திருக்கோணமலைக்குச் செல்லும் தமிழ்ப் பிரயாணிகள் கூட்டமாகத்தான் ஜெற்றிக்குச் செல்வார்கள். ஆனால், இன்று எல்லோருமே ஜெற்றியை நோக்கி ஓடுகிறார்கள். தமிழர், சிங்களவர், முஸ்லிம் எல்லோருமே ஓடுகிறார்கள்.

நான் ஜெற்றியை அடைந்து விட்டேன். ஜெற்றி அமைந்திருக்கும் கடற்கரை முழுவதும் ஒரே சனக்கூட்டம். எல்லார் கண்களிலும் கண்ணீர். கடலையே பார்த்துக் கொண்டிருக்கிறது. திருக்கோணமலையிலிருந்து மூதூருக்கு மூன்றரை மணிக்குப் புறப்பட்ட லோஞ்தான் பாதாள மலையருகில் ஆழ்ந்து விட்டதாம் என்ற திட்டவட்டமான செய்தி எனக்குக் கிடைத்தது. லோஞ்சில் யார் யாரெல்லாம் வந்திருப்பார்கள்? திட்டவட்டமாக எவருக்குமே தெரியாது. காலையில் திருக்கோணமலைக்குச் சென்றவர்கள் தங்கள் வேலையை முடித்துக் கொண்டு இந்த லோஞ்சில் வந்திருக்கலாம். அவர்களின் உறவினர்கள் என்மகன் வந்தானோ? வாப்பா அதில் வந்தாரா? என்று எண்ணிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்கள்.

கொழும்பிலிருந்து திருக்கோணமலைக்கு பஸ்ஸில் வந்தவர்கள் புகையிரதத்தில் வந்த கொட்டியாரப்பற்று மக்களும் இந்த லோஞ்சில் வந்திருக்கலாம் என்று அங்கலாய்த்தார் ஒருவர்.

'என்ட மகன் இண்டைக்கு கொழும்பிலிருந்து வாரேன்' என்று எனக்கு கடிதம் எழுதியிருந்தான் என்று கண்ணீர் வடிக்கின்றார் ஒரு தந்தை. நான் செய்வதறியாமல் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். கடலிலே மூதூர் மீன்பிடி வள்ளங்கள் எல்லாமே பாதாள மலைக்கருகே அங்குமிங்குமாக ஓடிக்கொண்டிருக்கின்றன. பொழுதும் சாய்ந்து கொண்டிருந்தது. அயற் தமிழ்க் கிராமங்களிலிருந்து சாரிசாரியாக அங்கே தமிழ் மக்களும் கூடத் தொடங்கினார்கள். ஜெற்றியில் ஐந்தாறு தேனீர்க் கடைகள் இருந்தன. எல்லாமே முஸ்லிம் கடைகள். ஆனால் இழவுச் செய்தி கேட்டதும் எல்லாக் கடைகளும் மூடப்பட்டு விட்டன. கடைகளின் மேலே வெள்ளைக் கொடிகள் பறந்தன.

முஸ்லிம் இளைஞர் கோஷ்டியொன்று மூடப்பட்ட கடைகளைத் திறக்கும்படி கட்டாயப்படுத்துகின்றது. கடைகள் திறக்கப்படுகின்றன. தாகம் தீர்க்க கடைகள் திறந்திருக்க வேண்டுமே என்ற கவலை அவர்களுக்கு.

நான்குமணிக்கு மேலாகி விட்டது. வாடைக்காற்று வெடுவெடென்று அடிக்கின்றது. குளிரில் உடலெல்லாம் நடுங்குகின்றது. கூதலைப் பொருட்படுத்தாமல் சனக்கூட்டம் கடற்கரை வெண்மணற் பரப்பில் அமர்ந்து

கொண்டு கடலையே பார்த்துக் கொண்டிருக்கின்றது. கடலில் மீன்பிடி வள்ளங்களைத் தவிர வேறு லோஞ்சோ, படகுகளோ இல்லை.

"பாருங்கள் அயற் கிராமங்களிலிருந்து வந்த தமிழ் மக்களெல்லாம் பகல் முழுக்கப் பட்டினியாக் கெடக்காங்க. இங்க கடைகளிலும் சாப்பிடுவதற்கு ஏதுமே இல்ல. அதை மொதலிலே கவனியுங்க...." என்கிறார்கள் பொலிசாரிடம் இளைஞர்கள். இளைஞர் கூட்டம் கலைந்து அந்தப் பக்கமும், இந்தப் பக்கமும் சென்றது. அரை மணித்தியாலத்தினுள், பாண், பனிஸ், வடை, றோஸ்பாண், பிஸ்கட் போன்ற உணவுப் பொருட்களுடன் வந்தார்கள். கடற்கரை மணலிலே சோர்வாக அமர்ந்திருந்த தமிழ் மக்களுக்கு இலவசமாகவே அவற்றை விநியோகித்தார்கள். சோடாவும், தேனீரும் கூடக் கொடுத்தார்கள். குடம் குடமாகத் தண்ணீரும் கொண்டுவந்து கொடுத்தார்கள்.

அதைக்காண அத்தனை சோகத்திலும் எனக்கு ஆனந்தமாக இருந்தது. ஓரிரு வருடங்களாக இப்பிராந்தியத்திலே முஸ்லிம்களுக்கும், தமிழர்களுக்கும் சுமுகமான உறவில்லை. ஒருவரை ஒருவர் கொலை வெறியுடன்தான் நோக்கினார்கள். ஆனால் இன்று அந்த வன்மம் எங்கே போயிற்று. எத்தனை மனமாற்றம். ஆனால் இந்த நல்லுறவுக்காக நாம் கொடுத்த விலை!

நான் கடலையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருக்கின்றேன். வாக்கிடோக்கியைக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் பொலிஸ் அதிகாரியை நோக்கிக் கூட்டம் கூடுகிறது. என்னால் கூட்டத்தை நெருக்கியடித்துக்கொண்டு போகமுடியவில்லை. ஆனாலும் கடற்படைப் படகுகள் இருபது பிரயாணிகளைக் காப்பாற்றிக் கரைமீட்டன. "அந்த இருபது பிரயாணிகளும் கடற்படை ஆஸ்பத்திரியில் தற்போது இருக்கிறார்கள்." என்று பொலிஸ் அதிகாரி சொன்ன செய்தியைத் தெரிந்து கொண்டேன்.

அந்த இருபது பிரயாணிகளும் யார்? அதைத் தெரிந்து கொள்ள சனக்கூட்டம் ஆசைப்பட்டது.

"அது எனக்குத் தெரியாது. ஆனால் கடற்படையினர் அந்த இருபது பேரின் பெயரை இனித் தெரிவிக்கக்கூடும். தெரிந்ததும் அதை நான் கூறுகின்றேன்" என்ற பொலிஸ் அதிகாரி, "கிண்ணியா படகுக் காரர்கள் சிலரைக் காப்பாற்றியிருக்கிறார்கள். சிலரைப் பிணமாகவே

மீட்டிருக்கிறார்கள். மீட்கப்பட்டவர்களையும் மீட்ட சடலங்களையும் அவர்கள் இங்கே கொண்டு வருகின்றார்கள்'' என்றார்.

மாலையாகிவிட்டது கடற்கரையிலே காகங்கள் குளித்து கடலோரத்துப் புன்னை மரங்களில் ஒதுங்கிடம் தேடின. இருள் கவிந்து கொண்டு வந்தது. கடைகளில் மின் விளக்குகளைத் தவிர வேறு ஒளியே யில்லை. இளைஞர்கள் எங்கிருந்தோ 'பெற்றோமெக்ஸ்' விளக்குகளைத் தூக்கிக் கொண்டு வந்தார்கள்.

இருள் படியும் நேரத்தில் கிண்ணியா மீன்பிடிப் படகுகள் சில வந்தன. சனம் முண்டியடித்துக்கொண்டு அப்படகுகளை நோக்கி ஓடியது. பொலிசும் இளைஞர்களும் சனக்கூட்டத்தை ஓரளவு கட்டுப்படுத்தினார்கள். படகுகளில் கொண்டுவந்தவர்களை பொலிஸ் ஜீப் ஏற்றிக் கொண்டு மூதூர் வைத்தியசாலைக்கு விரைந்தபோது அவ்வாகனத்தைத் தொடர்ந்து சனக்கூட்டத்தில் ஒரு பகுதி வைத்தியசாலைக்கு விரைந்தது.

வைத்தியசாலையிலேயே மூவர் மரணமாகி விட்டார்கள். அவர்களிலொருத்தி பெண். மல்லிகைத்தீவைச் சேர்ந்தவள். மூதூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் வேலை பார்ப்பவள் என்ற செய்தி என் காதில் விழுந்தது.

'அடடா ராசமணியா? ' என்று என் மனம் வருந்தியது. நான் அவளுக்காக வேதனைப்பட்டேன்.

இரவு எட்டு மணிக்கு மேலாகிவிட்டது. சனக்கூட்டம் கடற்கரை யிலேயே தூங்கிவிட்டது. அயற் கிராமத்திலிருந்து வந்த தமிழ் மக்களால் இனிமேல் தங்களது ஊருக்குப் போகமுடியாது. அன்று பிரயாணம் செய்தவர்களாகத் தாங்கள் நினைத்துக் கொண்டிருக்கும் தங்கள் உறவினர்கள் இந்த லோஞ்சில்தான் பிரயாணம் செய்திருப்பார்கள் என்று எண்ணிய அவர்கள் முடிவை அறியும்வரை அசைவதில்லை எனத் தீர்மானித்துக் கொண்டவர்களாக கடற்கரை மணலில் தூங்கி விட்டார்கள்.

என்னால் வாடைக் கூதலைப் பொறுக்க முடியவில்லை. ஆனால் அல்லாடும் சனங்களை விட்டுப் போகவும் முடியவில்லை. நான் தயங்கிக் கொண்டு நிற்கையில் ''வாருங்க மாஸ்டர்'' என்று என் கையைப் பிடித்து அழைத்தான் றபீக். என் பால்ய காலச் சிநேகிதன். நான் அவனோடு சென்றேன். ஜெற்றிக்குப் பக்கத்தில்தான் அவனது வீடு. வீட்டுக்குச்

சென்றபோது அங்கிருந்த மன்சூர்நானா என்னைக் கட்டியணைத்துக்கொண்டு தேம்பி அழுதார்.

அவர் யாருக்காக அழுதார் என்பது எனக்குத் தெரியவில்லை.

அழுதவர் தம் விம்மல்களுக்கிடையே சொன்னார்.

"மகன் றெஸீன் காலையில் கல்விக் கந்தோரிலே விஞ்ஞான உபகரணங்கள் எடுக்கப் போனான். அவனும் மூனரை மணி லோஞ்சில்தான் வந்திருப்பான்" என்று சொல்லிக்கொண்டே அழுதார்.

அவர் அழுகை சற்றுக் குறைந்த போது

"றெஸீன் இந்த லோஞ்சில் வந்திருக்க மாட்டான். நானும் ஒரு வாத்தியார். கல்விக் கந்தோருக்குப் போனா ஓடனே இந்தாண்டு சயன்ஸ் சாமான்களைத் தூக்கிக் கொடுத்திருக்க மாட்டாங்க. அதுகளைக் கணக் கெடுத்து நாலஞ்சு புத்தகத்தில் பதிஞ்சு நம்ம கையில ஒப்படைக்கக்குள்ள அதிகமாகக் கந்தோர் பூட்டிடுவாங்க. அதனால் றெஸீன் இந்த லோஞ்சில் வந்திருக்க மாட்டான்" என்றேன் நான்.

"இல்ல மாஸ்டர். நான் சாமான்கள் எடுத்தா என்ன, எடுக்காட்டி யென்ன? மூனரை மணி லோஞ்சிக்கு வந்திடுவேன் எண்டு சொல்லிப் போனான்."

"எண்டாலும் இந்த லோஞ்சில் வந்திருப்பானெண்டு நான் நம்பல்ல. நீங்க ஏன் அவன் இதுலதான் வந்திருப்பானெண்டு நினைக்கிறீங்க?"

மன்சூர் நானா தனது கண்களைத் துடைத்துக்கொண்டு இருக்கையில் நான் அவர் கைகளைத் தொட்டு.

"மௌத்து ஒண்ணும் நம்ம கையில இல்ல. அது இறைவனுடைய சித்தம். றெஸீன் இந்த லோஞ்சில வந்தான் என்பதுக்கு எந்தச் சாக்கியும் இல்ல. இறைவனை நம்பிக்கொண்டு கலவரப்படாமல் கொஞ்சம் அமைதியா யிருங்க என்று மீண்டும் அவருக்கு ஆறுதல் சொன்னேன்.

மன்சூர்நானா சற்றே அமைதியானார். "வாருங்கள் ஊட்டுக்குப் போவோம். இந்த வாடைக் கூதல் உங்களுக்குப் பிடிக்காது."

"இல்ல மாஸ்டர் நீங்க ஊட்டுக்குப் போங்க. நான் இங்க இரவைக்குத் தூங்கப் போறன்" என்றார் மன்சூர் நானா.

நான் அவரை விட்டு என் சைக்கிளில் வீட்டுக்குக் கிளம்பினேன். பழைய நினைவுகள் என்மனதில் விரிகின்றன.

மன்சூர்நானாவின் சகோதரர் மஸ்ஹூர் மௌலவி எமது பாடசாலையில் மௌலவி ஆசிரியர். அதன் காரணமாக அவர் நானா மன்சூரையும் நான் நன்றாக அறிவேன். ஊரிலே சிறுசிறு 'ஈயோட்டு வியாபாரம்' செய்து கொண்டு வாழ்க்கையை ஓட்டினார்.

ஆனாலும் வறுமையிலும் தம் பிள்ளைகளைப் படிப்பிப்பதில் மிகக் கருத்தாக இருந்தார். மூதூரில் படித்த அவரது மூத்த மகன் றெஸீன் பின்னர் திருக்கோணமலையில் இந்துக் கல்லூரியில் ஏ.எல்.. படித்து விஞ்ஞானப் பட்டதாரியானார்.

ஒரு நாள் என்னைச் சந்தித்த மன்சூர் நானா, "மாஸ்டர் உங்கட்ட வர எண்டுதான் இருக்கன். நேரங்கிடைக்கல்ல. இண்டைக்கு மகரிப்புக்குப் பொறவு கட்டாயம் வருவேன்" என்றார்.

'நீங்க எப்ப வேணுமானாலும் வாங்க. நான் எப்பவும் ஊட்டுலதான் இருப்பன்' என்று சொல்லிப் பிரிந்தேன்.

அன்றிரவு அவர் சொன்னது போல வீட்டிற்கு என்னைத் தேடிக் கொண்டு வந்தார். தேனீர் உபசாரத்தின் பின்னர் நான் கேட்டேன்.

"என்னோடு என்னமோ கதைக்க வேணுமிண்டு சொன்னீங்களே?"

"எல்லாம் என் மகனப் பத்தித்தான்".

"றெஸீன் தானே! அவனுக்கென்ன. அருமையான புள்ள நம்ம ஊரிலை சைன்ஸ் பட்டதாரியான ரெண்டு மூணு பேரில அவனும் ஒருத்தன். இது நமக்கெல்லாம் பெருமை."

"பெருமைதான் மாஸ்டர். ஆனால் அவன் அந்தப் பெருமையெல்லாம் கெடுத்திடுவான் போலயிருக்கு"

"என்ன நீங்க சொல்றீங்க. நான் நேத்துக்கூட அவனைக் கண்டேன். என்னோட கதைத்திட்டுத்தான் போனான். அவனுக்கென்ன குறை."

"மாஸ்டர் நான் கஷ்டப்பட்டு சின்னச்சின்ன யாவாரம் செஞ்சி குடும்பத்தையும் காப்பாத்தி அவனையும் படிப்பிச்சேன்."

"உங்க கஷ்டம் எனக்கு தெரியுமே. கஷ்டப்பட்டதுக்குத் தக்க தாக சுகத்தையும் கண்டிருக்கீங்க. மகன் சைன்ஸ் பட்டதாரியா வந்திட்டான்."

"மாஸ்டர் அவன் பட்டதாரியா வந்து நம்ம ஊர் புள்ளைகளுக்குப் படிப்பிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஆனா அவன் அக்கரைப்பத் திலே கலியாணம் முடிக்கப் போறேன் என்கிறான்".

"அப்படியா?"

"ஓம் மாஸ்டர் அங்க கலியாணம் முடிச்சா அங்கேயே குடியிருந்திடு வான். அதனால நம்ம ஊருக்குப் பிரயோசனம் இல்லாமப் போயிரும். மாஸ்டர் நீங்க அரிவரியில இருந்து அவனுக்குப் படிப்பிச்சிருக்கீங்க. உங்களில அவன் மரியாத வச்சிருக்கான். அவன்கிட்ட நீங்க கதைச்சி என்ர ஆசையையும், விருப்பத்தையும் சொல்லிப்பாருங்க. அவன் நம்ம ஊரில வாழ்ந்து நம்ம ஊர் புள்ளைகளுக்குப் படிப்பிக்க வேணும்........ அதுதான் என்ர ஆசை".

"பொண்ணை எங்க சந்திச்சான்?"

"ரெண்டு பேரும் வந்தாறுமூலையில் ஒன்றாகச் சந்திச்சாங்களாம்".

"சரிதான் காதல் போல இருக்கு. எதுக்கும் நான் அவனிடம் கதைச்சிப் பார்க்கிறேன்".

"நீங்க சொன்னா அவன் கேட்பான். அவன் மனசைத் திருப்பனும்". என் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு அவர் கெஞ்சினார். அடுத்த நாளே நான் றெஸீனைச் சந்தித்து என் வீட்டுக்கு கூட்டி வந்து அவனிடம் கேட்டேன்.

"என்னப்பா றெஸீன். நீ அக்கறைப்பற்றிலே கலியாணம் முடிக்கப் போறியாமே?"

"ஆர் சேர், உங்களுக்குச் சொன்னது. வாப்பாவா?"

"இல்லையில்லை நான் கேள்விப்பட்டேன்."

"வாப்பாதான் சொல்லியிருப்பார்"

"இல்லை அவர் சொல்லல்ல. நான் வேற எடத்தால கேள்விப்பட்டேன். ஆனா விசயம் பொய்யல்ல எண்டு உன்ர பதட்டத்தைப் பார்த்தாலே விளங்குது. பொண்ணை எங்கே கண்டாய்?"

"வந்தாறுமூலையில் ஒன்னாத்தான் என்னோட படிச்சவ."

"ஓஹோ அப்ப காதல் எண்டு சொல்லு." நான் சிரித்தேன்... றெஸீனும் சிரித்தான். நான் சொன்னேன்.

"எனக்கு வாப்பாவை சின்ன வயசிலேந்து தெரியும். வாப்பா நிச்சயமாக ஒன் விருப்பத்திற்கு எதிராக இருக்க மாட்டார். ஆனா நீ இந்த ஊரை உட்டுட்டுப் போயிருவா எண்டுதான் அவர் கவலைப்படுரார். நீ இந்த ஊரில் நம்ம புள்ளைங்களுக்கு சைன்ஸ் படிப்பிச்சி நம்ம ஊரை முன்னேற்ற வேணும் எண்டுதான் அவர் கனவு கண்டார். அவர்ர கனவ, அவர்ர ஆசையை பாழாக்கிப் போடாதே."

"வாப்பாட அந்த ஆசையை நிச்சயமாக நிறைவேத்துவேன் சேர். அதுக்காக வேண்டியும் கூடத்தான் இந்தக் கலியாணத்தைப் பண்றேன்."

"நீ சொல்லுவது விளங்கலியே றெஸீன்."

"சேர் என்ர மனிசியும் என்னைப்போல ஒரு சைன்ஸ் பட்டதாரிதான். நான் கலியாணம் முடிச்ச கையோட அவவையும் இங்கே கூட்டி வந்திருவன். என்ர சேவையை மட்டுமல்ல எங்க ரெண்டு பேர்ர சேவையும்கூட இந்த ஊருக்குக் கெடைக்கும்."

"அதெப்பிடி? நம்ப முடியலியே றெஸீன், நம்ம கிழக்கு மாகாணத்தில் கலியாணம் பண்ணினவன் அவன் தமிழனோ, முஸ்லீமோ அவன் பெண் அவன் வீட்டுலதான் வாழ வேண்டும். இதுதான் நம்மட சம்பிரதாயம். அத மாத்த ஏலுமா?"

"நிச்சயமாக வருவாள் சேர். கெம்பஸ்சில விரும்பிய போது நான் என்ர வாப்பாட ஆசையை நல்லா அறிஞ்சிருந்தேன். அதனால கலியாணமானதும் என்ர ஊருக்கு வந்தால் தான் உன்னைக் கலியாணம் முடிப்பேன் என்று கண்டிப்பாகச் சொன்னேன். அவள் வருவதாக சத்தியம் பண்ணித் தந்திருக்கிறாள்."

"காதலிச்சவள் சத்தியம் பண்ணித் தந்திருக்கலாம். ஆனா அது நடைமுறையில் சாத்தியப்படுமா? என்பது எனக்குச் சந்தேகந்தான்."

"நிச்சயமாக சாத்தியப்படும் சேர். அந்த நம்பிக்கையில்தான் நான் கலியாணத்துக்கு சம்மதிச்சேன். கலியாணமான கையோட நான் மனுசியை மூதூருக்கு கூட்டி வந்திடுவன். இத நீங்க நம்புங்க.

"நான் நம்புறது இருக்கட்டும். ஆனா நீ வாப்பாட ஆசையை மட்டும் கெடுத்துப் போடாத."

"நிச்சயமாக அவர்ர ஆசை நிறைவேறும். ஊருக்கு என்ர சேவை மட்டுமல்ல என்ர மனிசியோட சேவையும் கிடைக்கும். வாப்பா ரெட்ட சந்தோஷப்படுவார். அடுத்த நாளே அவன் சொன்னவைகளை நான் மன்சூர் நானாவிடம் சொன்னேன். மன்சூர் நானா சொன்னார்.

"அவன் விரும்பிய பெண்ணை அவன் கலியாணம் முடிக்கட்டும். அதை நான் எதிர்க்கல்ல. ஆனா அவன் சொல்ற மாதிரி கலியாணம் முடித்த பொறவு நம்மட ஊருக்கு வந்து படிப்பிக்க வேணும் என்பதுதான் எனது ஆசை." "உங்க ஆசை நிறைவேறும்." என்று நான் அடித்துச் சொன்னேன். றெஸீன் சொன்னதுபோல அக்கரைப்பற்றில் கலியாணத்தை முடித்து தன் மனைவியையும் கூட்டிக்கொண்டு ஊருக்கு வந்தான். தற்போது அவனும், மனைவியும் மூதூர் மத்திய கல்லூரியில் விஞ்ஞான பட்டதாரியான ஆசிரியர்கள். மன்சூர்நானா மகன் பிறந்தபோது அடைந்த சந்தோசத்தைவிட பன்மடங்கு ஆனந்தத்தை அனுபவித்தார். அந்த றெஸீன் கடலிலே ஆழ்ந்து போனதுக்காக இன்றைக்கும் கலங்குகிறார்.

என்னால அன்றிரவு நித்திரை கொள்ள முடியவில்லை. ஆழ்ந்து போன அந்த லோஞ்சில் றெஸீன் வந்திருப்பானா அந்த இளைஞனின் சேவையை ஏன் அவனது மனைவியின் சேவையைக்கூட என் ஊர் இழந்து விடுமா? என் மனம் எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியது. என் மகன் லுத்பி வந்து என்னை எழுப்பினான்.

"வாப்பா சைக்கிள் ரிப்பேர் கடை நிசாரும் இந்த லோஞ்சில தான். அவன் தப்பி வந்திருக்கான். லோஞ்சி கடலில தாழக்கில மேல இருந்த அவன் கைக்கு பலகைத் துண்டு ஒண்டு அகப்பட்டதாம். அதப் புடிச்சிக்கிட்டு நீஞ்சிருக்கான். கடலில மிதந்து கொண்டிருந்த அவனைக் கிண்ணியா போர்ட்காரர்கள் காப்பாத்தி அவனை இங்கே கொண்டு வந்து விட்டிருக்காங்க." என்மகன் சொல்லியதை முழுவதும் கேட்காமலே நான் சைக்கிள் கடைக்காரன் வீட்டுக்கு ஓடினேன்.

அங்கே சனக்கூட்டம். கூட்டத்தோடு கூட்டமாக நானும் நின்றேன். "நீங்க உள்ளே போங்க மாஸ்டர்"

"நான் போறது இருக்கட்டும். கடலில ஆண்டவன் துணையால தப்பி வந்தவனை கொஞ்சம் ஆறுதலாக இருக்க விடுங்க" வீட்டு முற்றத்திலே படகுச் சாய் கதிரையில் நிசார் இருந்துகொண்டு பேசிக் கொண்டிருந்தான்.

"இங்க இருந்து ஒரு மணிக்கு புறப்பட்ட லோஞ்சி ரெண்டு சொச்சத்துக்கு திருக்கோணமலைக்கு வந்திச்சு. அதுக்குப் பொறவு அந்தக் கொக்சனுக்கு லீவு. அவன் ஊட்ட போற வழியில நல்லா குடிச்சிருக்கான். அண்டைக்கெண்டு ரெண்டரை மணிக்கு வாரத்துக்கிருந்த லோஞ்சி ரிப்பேராகப்போக இவனப்பிடிச்சி இழுத்து வந்து லோஞ்ச விடச் சொல்லி யிருக்காங்க. கொக்சன் மாட்டேன் எண்டிருக்கான். ஆனா நம்மாக்கள் எல்லோரும் தெண்டிச்சதால அவன் வந்திருக்கான். அவனுக்கு வெறி. சரியான சனம். நூத்தியிருபத்தஞ்சி பேர் மட்டில இருக்கும். அதில இருவத்தஞ்சி பேர் மட்டில ஆமிக்காரன். அவங்க எல்லாருமே மேல் தட்டுல நானும் மேல் தட்டுலதான் இருந்தேன்."

"நம்ம ஆட்கள் யாரெல்லாம் லோஞ்சில் இருந்தாங்க?" என்று யாரோ கேட்கிறார்கள்.

"லோஞ்சிக்குள்ள இருந்த எல்லாரையும் நான் காணல. ஆனா நம்ம றெஸீன் லோஞ்சில் ஏறி உள்ள போனதை நான் கண்டேன்."

எனக்கு இதயம் நின்றுவிட்டதுபோல தோன்றிற்று. ஸ்தம்பித்து நின்றேன். மேலே அவன் பேசிக் கொண்டிருந்தான்.

லோஞ் சரியான லோட்டாக வருகிறது. பாதாள மலைக்குக்கிட்ட

வந்திட்டு வெளில நிண்ட கொக்சன் சுக்கான் காம்பை காலால்தான் தள்றான். லோஞ்ச் தத்தளிச்சுப் போகுது. திடீரென மடார் என்று கடல் அடிக்கிறது. வானம் இருண்டுக்கிட்டு வந்து, காற்று சொழண்டு வீசிச்சி. லோஞ்ச் சின்னங்க மலைப்பக்கமாக சாயுது. சனமெல்லாம் எண்ட 'அல்லாஹ்' எண்டு கத்துது. சிலர் 'முருகா' எண்டு கத்துது. பாத்திருக் கக்குள்ள லோஞ்சுக்குள்ள தண்ணி ஏறிக்கொண்டது. 'காப்பாத்துங்க', 'காப்பாத்துங்க' எண்டு சனம் கத்தியது. நான் சாரணையும் சேட்டையும் கழட்டிட்டு கால் சட்டையோட மட்டு நிக்கேன். லோஞ்சி குத்தலுக்குள்ளே இருந்து 'காப்பாத்துங்க', 'காப்பாத்துங்க' எண்டு சத்தந்தான் கேக்குது. லோஞ்ச் தாண்டிட்டுப் போவுது. போவக்குள்ள நம்மட வீடமைப்பு அதிகாரி தோப்பூர் அபுல் குதா மேலே வந்து நீந்திறார். அவர் மனுசி உள்ளுக்க. அவளையும் வெளியே இழுக்கிறார். இந்த இழுபறியில் அவரையும் காணல. என் கைக்கு ரெஜிபோம் பெட்டி ஒண்ணு கெடைச்சிது. அதப் புடிச்சிக்கிட்டு நான் நீஞ்சிறன். கிண்ணியாக்கார மீன்பிடி போட் கடலில் கசனாத்தான் வருவுது. அதுல ஒரு போட் என்னைத் தூக்கி உள்ளே போட்டிச்சி. அதுக்குப் பொறவுதான் நேவி லோஞ்சும் வந்தது."

நிசார் கதை சொல்லிக்கொண்டே இருக்கிறான் அர்த்த சாமத்திற்கு மேலாகி விட்டது. என்னால் அவ்விடத்தில் நிற்க முடியவில்லை.... வீட்டிற்கு வந்து படுக்கையில் விழுகிறேன்.. ஆனால் அன்று எனக்கு சிவராத்திரி.

அடுத்த நாள் விடிந்ததும், விடியாததுமாக ஜெற்றிக்குப் போகிறேன். இன்னமும் சனங்கள் கடற்கரை மணலிலே படுத்துக் கிடக்கிறார்கள். சிலர் எழுந்து ஒப்பாரி சொல்லி அழுகிறார்கள். எல்லா முகங்களிலும் சோகம் எழுதி ஒட்டியது போல இருக்கிறது. இறந்து போனவர்களுள் றௌஸீனும் ஒருவன். அவனது உற்றார், உறவினர்கள் எல்லோரும் கடற்கரையிலேயே நிற்கிறார்கள். அன்று மட்டுமல்ல அதற்கு அடுத்த நாள், பத்து நாட்களுக்கு மேலே சனம் கடற்கரையில் நின்றது.

கடலிலே இறந்துபோன சடலங்கள் மிதந்து வாடைக் காற்றுக்கு கொட்டியாரக்குடா கடலின் கரைகளில் ஒதுங்கும் என்று அவர்கள் தேடிக்கொண்டே இருந்தார்கள்.

நூறு பேருக்கு மேல் லோஞ்ச் ஆழ்ந்ததால் இறந்திருக்கலாம் என்று மதிப்பீடு. ஆனால், எந்தச் சடலமும் கரையொதுங்கவில்லை. கடலில் மிதக்கவுமில்லை. ஆச்சரியந்தான்.

கடற்போரிலே ஈடுபடும் மாலுமிகள் இறந்து போனாலே, அல்லது கப்பலில் பிரயாணம் செய்யும் பயணிகள் இறந்து விட்டாலோ அவர்களின் சடலங்களைப் பெட்டியிலோ அல்லது பெட்டிபோன்ற ஏதாவதொன்றிலோ வைத்துகடலிலே சமாதியாக்குவார்களாம் எனக் கேள்விப்பட்டிருக்கின்றேன்.


ஆனால் பாதாள மலைக்கடல் மனித முயற்சி எதுவுமேயில்லாமல், தன்மடியில் மரித்தவர்களையெல்லாம் தன் உதரத்தின் ஆழத்தில் ஜலசமாதி ஆக்கிக் கொண்டது. இப்போதும் லோஞ் பிரயாணத்தின்போது பாதாளமலை அடியைத் தாண்டிக் கொண்டு செல்கையில் அங்கே ஜலசமாதியாகிவிட்ட றெஸீனை நினைத்துக்கொண்டு அவனது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றேன்.

**இலங்கை இலக்கியப் பேரவையின்**
**மூதறிஞர் இரகசிகமணி கனக செந்திநாதன்**
**கதா விருதுபெற்றது -2004**

# மரணத் தீவு

"என்னடா எல்லோரும் வெள்ளாம வெட்டப் போகிறான்கள். மழை பெய், பெய்யெண்டு பெஞ்சி ஊர் உலகமெல்லாம் இம்முறை வெளஞ்சிதான் இருக்கு. ஒரு ஏக்கருக்கு வெட்டுக்காசு நூறுரூபாதான் கிடைக்கும். எட்டுப்பேருக்குத் தலைக்கு பன்னிரண்டு ரூபா காசு கிடைக்கும்."

"கடல் குளம்போல வத்திக் கிடக்கு. நெய்மலைத் தீவுப் பார்ல பாரக்குட்டிமீன் கசணாத்தான் பிடிக்குது. வாறியாடா போவம்" என்றார் இப்றாகீம்.



"சரி தம்பி. சுபகு தொழுதவுடனேயே நான் வந்து உன்னைக் கூப்பிடுகிறேன். அனிபாவும் வாரெண்டு சொல்கிறான். நாம் எல்லோரும் போவமே"

அதிகாலையில் இப்றாகீம் நித்திரையை விட்டு எழுந்து விட்டார். ஏற்கனவே சொன்ன அனிபாவும், இப்றாகீமின் கடலோடித் தனத்திலும்

அனுபவத்திலும் நம்பிக்கை கொண்டவனாகச் சேர்ந்து கொண்டான். மலைச் சரிவிலே சரளைக் கற்கள் குத்தும் கடலோரமாக நடந்து வந்து ஜெகுபரை எழுப்பும்போது சாமக்கோழி கூவிற்று.

"நான் மட்டுமல்ல தம்பியும் என்னோடு வரப்போகிறானாம் சின்னப்பா" என்றான் ஜெகுபர்.

"ஒண்ட தம்பியா? அவன் பள்ளிக்கொடத்துக்குப் போய்க் கிட்டிருந்தானடா?"

"சின்னப்பா அவன் ஜீ. சி. ஈ எடுத்திட்டான். சோதின முடிவு வர இன்னும் ரெண்டு கிழமை செல்லுமாம். அதனால அவனும் வரப் போகிறானாம் சின்னப்பா"

"மீன்குஞ்சுக்கு நீச்சலா பழக்கணும். ஆ... அவனும் வரட்டும். எதற்கும் மூணு நாலு பேர் இருந்தாத் தோதாக இருக்கும். போவமா?" என்றார் இப்றாகீம்.

இப்றாகீமும், அனிபாவும், ஜெகுபரும், அவன்தம்பி இஸ்மாயிலும் அதிகாலை நேரத்தே சரளைக் கற்களின் ஊடே நடந்து இப்றாகிமீன் வள்ளம் இழுத்து வைக்கப்பட்டிருந்த கரையை அடைந்தபோது கிழக்கு வானம் வெளுத்து விட்டது.

புயலுக்கு விழுந்த தென்னங் குற்றிகளின்மேல் ஏற்றி வைக்கப் பட்டிருந்த வள்ளத்தை நால்வரும் இழுத்துக் கடலுக்குள் தள்ளியபோது, நன்றாகவே விடிந்துவிட்டதைப்போன்ற பிரமை ஏற்பட்டது எல்லோருக்கும்.

"பசயலெண்டு விடிச்சு போச்சுடா. கெதியாப் போவணும்" என்று அவசரப் படுத்தினார் இப்றாகீம்.

"ஏன் சின்னப்பா அவசரப்படுறீங்க. இன்னமும் நல்லா விடியல்ல. வெள்ளி மேலேதான் இருக்கு" என்றான் ஜெகுபர்.

"பெசறிக் காரனுடைய கண்ணில் படமுந்திப் போயிடவேணும்" என்றார் இப்றாகீம். வள்ளத்தின் முன்னணியத்தே ஒரு சிறிய பக்கீஸ்ப் பெட்டிக்குள் எதையோ வைத்துச் சாவதானமாக மூடினான் அனிபா.

"என்ன காக்கா அந்தப் பெட்டியை நடுவுக்குள்ளே வையுங்களேன். வலையோட இருக்கட்டும்" என்றான் ஜெகுபர்.

"அதென்னடா பெரிய பாரமா? ரெண்டு றாத்தல்கூட இருக்காது. நீ வள்ளத்தின் நடுவுக்குள்ள வலையை ஏத்து." என்றான் அனிபா.

கரையிலே மலைப்பாம்பாய்ச் சுருண்டுகிடந்த வலையைப் பாகம் பாகமாக வளைத்து, வளைத்து வள்ளத்தின் வயிற்றில் சுருணையாகக் குவித்தபோது நன்றாகவே விடிந்து விட்டது. கிழக்கே முணுக், முணுக்கென்று எரியும் தீபத் தம்பத்தின் ஒளி தேவையற்றதாக எரிந்து கொண்டிருந்தது. எதிரே வளைந்து கிடந்த மூதூர்க்கடல் சம்பூர்க்குடாவின் அடிக்குள் இருந்து எழுந்துவரும் உதயசூரியனின் செவ்வானத் தகப்பில் செம்பவளப் படிவமாகத் தகதகத்துக் கொண்டிருந்தது.

"அனிபா எல்லாம் சரிதானே?"

"ஓம் சின்னப்பா"

"மாசி மாதத்தையில கடல் குளம் போலத்தாண்டா இருக்கும். ஒரு பாக்கு வெட்டற நேரத்தில நெய்மலைத் தீவுக்குப் போயிடலாம் எண்டாலும், ஊர் உலகத்திட கண்ணில காணாப் போறதுதான் புத்தி" என்று கூறிக்கொண்டு தைலாப்பெட்டி ஒன்றைப் பின்னணியத்தில் வைத்துக் கொண்டார் இப்றாகீம்.

"அது என்ன சாமான்?" என்றான் இஸ்மாயில்.

"கடலுக்குப் போறோம். தேவையானதெல்லாம் கொண்டுதானடா போகணும்" என்று கூறிக்கொண்டே வள்ளத்தின் மெசினை முடுக்கினார் இப்றாகீம்.

சம்பூர்க்கரையின் அடிவானத்திலிருந்து எழுந்துகொண்டிருக்கும் செஞ்சூரியனின் குளு, குளு தகதகப்பில் தாமிரத்தை உருக்கி வார்த்தது போன்று மூதூர்க் குடாக் கடலின் பனி படர்ந்த மௌனத்தைக் கலைத்துக் கொண்டு 'பட், பட், பட, பட' என்ற ஓசையுடன் இப்றாகீமின் வள்ளம் நெய்மலைத் தீவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. இப்றாகீமுக்கு ஒரே ஒரு லட்சியம். ஆறரை மணிக்குத் திருகோணமலையிலிருந்து மூதூர் நோக்கி வருகின்ற இயந்திரப் படகில் விழிக்காமல் நாச்சிக்குடா

விலிருந்து குறுக்காக நெய்மலைத்தீவை அடைந்துவிட வேண்டும் என்பதுதான்.

அனிபா முன்னணியத்தில் நிற்கிறான்!

ஆமாம் நிக்கிறான். ஆறு பாகமென்ன அறுபது பாகத்தின் அடியில் நிற்கும் மீன்களைக் கூடக் கண்டுபிடித்து விடலாம் என்ற தீட்சண்ணியம் அவன் கண்களில் மிளிர்ந்தது.

இப்றாகீமுக்கு வேலையே இல்லை. தான் சுக்கானாகக் கற்பித்துக் கொண்ட அவுட் மெசின் கைப்பிடியை எந்தப் பக்கமும் ஆட்ட வேண்டிய அவசியமோ அவசரமோ நேரவில்லை. காலைச் செவ்வானத்தின் ஒளியில் தாமிரக் குளம்பாய் தகதகத்துக் கொண்டிருக்கும் மூதூர்க் கடலைக் குறுக்காக வெட்டிக் கொண்டு மெசின் வள்ளம் விரைந்து செல்லுகையில் கடற்பரப்புக்கு மேலே புகையாய்ப் படர்ந்திருக்கும் பனிப்புகாரின் இளியலில் நால்வரின் வதனங்களிலும் எதிர்த் தாக்குதல் நடாத்திய பனிப்புகார் அவர்களின் நாடிநுனிகளிலே நீராய்க் கோர்த்து வாரக்கணக்காய்த் தடிமல் பிடித்தது போன்ற ஒரு உணர்வை ஏற்படுத்த, அனிபாவின் நீண்ட மூக்கின் நுனியிலே முத்தாய் விளைந்த பனித்துளி வள்ளத்தின் அடியில் சொட்டிற்று.

கல்லில் அலையெறியும் காலைப்பொழுதுதான். கல்லில் முட்டும் அலைகளின் சலசலப்புக்கூட வெளியே கேட்காத மாசி மாதந்தான். இந்த மாசி மாதத்தில் திரண்டுவருங் கறுப்பிலே! "ரெண்டு அணைச்சதை விட்டாலே ஐநூறு இறாத்தல் தேறும்" என்று எண்ணிக் கொண்ட அனிபா- "சின்னப்பா வள்ளத்தை உடுங்க தைலாப்பெட்டிக்குள்ள இருக்கிறதை எடுங்க" என்று முடுக்கினான்.

சிகரெட்டைக் கொழுத்திக் கையில் வைத்துக்கொண்டிருந்த அனிபா வள்ளத்திற்குச் சமீபமாக இருளை அவதானித்துக் கொண்டிருந்தான்.

இடது கையில் சிகரெட்டைப் பிடித்தபடி வலது கையில் இப்றாகீம் தைலாப் பெட்டிக்குள் இருந்து எடுத்துக் கொடுத்ததையும் வாங்கிக் கொண்டு இருளை வைத்தகண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தான் அனிபா.

அனிபாவுக்குக் கையும், காலும் ஓடவில்லை. தன்னை ஒருபடியாக

நிதானப்படுத்திக்கொண்டு, இடது கையிலிருந்த சிகரெட் தணலில் வலது கையிலிருந்த இரண்டு அணைத்ததைச் சடுதியில் தூக்கித் திரியைக் கொழுத்தினான்.

அனிபாவின் புலனுறுப்பு அத்தனையும் இருளை நோக்கி ஒருமித்து நின்றன. கையிலிருந்த திரி எரிந்து முடிந்ததோ அவனுக்குத் தெரிய வில்லை. திடீரென ஒரு முழக்கம்! வானமே இடிந்து விழுந்து போய் விட்டதோ?

கடலின் நிலப்பரப்பில் செம்மை படர்ந்து குழம்ப.....

ஆண்டவனே! அனிபாவின் மணிக்கட்டுக்கப்பால்..... எங்கே?

அவன் வள்ளத்தினுள் சோர்ந்து கிடக்கிறான்!

வள்ளத்தினுள் இருந்த இப்றாகீம், ஜெகுபர், இஸ்மாயில் ஆகிய மூவரும் விறைத்துப் போய் மரமாய் நின்றிருந்தனர்.

நெய்மலைத்தீவின் பாறையில் வெடிச்சத்தம் எதிரொலித்தது.

வள்ளம் அலறி அதிர்ந்தது. இருள் அகன்றது!

அனிபாவின் உயிர் பிரிந்தது!

கடல் அனுபவசாலியான இப்றாகீம் தன்னை நிதானப்படுத்திக் கொண்டார். மறுகணம் மெசின் வள்ளம் நெய்மலைத்தீவை நோக்கி விரைந்தது. எதிர்பாராத சம்பவத்தினால் அதிர்ச்சியடைந்த ஜெகுபரையும் இஸ்மாயிலையும் தட்டியெழுப்பினார் இப்றாகீம். கரையை அடைந்த வள்ளத்தினுள் சிதறிக் கிடந்த உடல் உறுப்புக்களை ஒரு சாரத்தினுள் ஒன்றிணைத்து வெளியே தூக்கினார்கள்.

அனிபாவின் பரிதாப நிலையைக் கண்டு எல்லோரும் ஒருதரம் அழுது தீர்த்தார்கள். "கத்திக் குளறிப் பயனில்லை. ஆகவேண்டியதைக் கவனிப்போம் வாருங்கள். மனசை ரெண்டு பேரும் கல்லாக்கிக்கீங்க. அனிபாவுக்கு பிஷகல் மௌத்து. சூடு ஆறமுந்தி அடக்கனும்..." என்றார் இப்றாகீம்.

நாச்சிக்குடாவிலே பல ஜனாசாக்களை குளிப்பாட்டுவது தொடக்கம் கபூர்க்குழி (புதைகுழி) வெட்டித் தொழுவிப்பதுவரை அனுபவம் பெற்ற இப்றாகீமுக்கு, அனிபாவின் நல்லடக்கம் ஒரு பெரிய காரியமாகத் தெரியவில்லை. தனது கையாலேயே அனிபாவின் உடலை நோக்கி வாய் கண்களைக் கலிமாச் சொல்லி கசக்கி மூடினார். 'அஸ்ஸ ஹுதுக் கலிமாச்' சொல்லி அனிபாவைக் குளிப்பாட்டினார். இப்றாகீமுக்கு பக்க உதவிகளை அனுபவமற்ற ஜெகுபரும், இஸ்மாயிலும் செய்தார்கள்.

இப்றாகீம் வள்ளத்திலிருந்த பெட்டியைத் திறந்து அதனுள் இருந்த 'கபன்' புடவையை எடுத்து அளவுப்படி கிழித்து அனிபாவின் உடலைக் கபனிட்டார். இந்த கபன் புடவைகளைக் கூட முன்னேற்பாடாகக் கொண்டு வந்தார்கள் என்று எண்ணிய இஸ்மாயில் அதிர்ந்து விட்டான்!

மண்வெட்டி, அலவாங்கு கொண்டு தோண்டமுடியாத அந்தப் பாறை நிலத்திலே எப்படிச் சாதாரண வள்ளத்தினுள் தண்ணீர் ஊற்றும் தோண்டி யால் தோண்ட முடியுமா? மண்ணைக் குடைந்து சிறுசிறு கற்களாகப் பெயர்த்து, எப்படியோ நாலு அடி ஆழத்தில் குழி தோண்டி முடித்தபோது அவர்கள் உடலெல்லாம் வெயர்த்துக் கொட்டியது.


அனிபா இஸ்லாமாகவே பிறந்தான். அத்துவானத் தீவில் இஸ்லாமா கவே மரித்தான். கடலின் நடுவே மோனத்தில் ஆழ்ந்து கிடந்த அத்தீவின் கபூர்க்குழியில் முங்கர், நகிர் என்ற இரு மலக்குகளும் (தேவதூதர்கள்) அவனது விசாரணையை எல்லோருக்கும் போல நடத்திக் கொண்டிருந் தார்கள்.

அடக்கம் செய்யப்பட்ட அனிபாவின் தலைமாட்டில், இஸ்மாயில் யாரோ கடலோடிகள் பிழிந்தெறிந்த விதைகளில் இருந்து முளைத்த புளியங்கன்று ஒன்றை நட்டுக் கொண்டிருந்தான்.

(ஈழத்துச் சிறுகதை மஞ்சரி - 1986)

# வாயில்லாப் பூச்சிகள்

ஊருக்கு ஒதுக்குப் புறமாக அந்தத் தோட்டிகளின் வீடுகள் அமைந்திருந்தன.



சந்தனமும் வேலைக்குச் சேர்ந்து பத்து ஆண்டுகள் ஆகி விட்டன. அதற்குள் குடியும் குடித்தனமுமாகி மூன்று குழந்தைக ளுக்கும் தந்தையாகி விட்டான். ஆனாலும் அவனுக் கென்று இன்னமும் தனியாக ஒரு வீடு கொடுக்கப்படவில்லை. தன் தந்தைக்குக் கொடுக்கப் பட்ட வீட்டிலேயே அவனது குடித்தனமும் நடந்து கொண்டிருந்தது.

தோட்டித் தொழிலாளருக்காகக் கட்டுப்பட்டுக் கொண்டிருக்கும் வீடுகள் முடிவடைந்ததும் தனக்கும் ஒரு வீடு கிடைக்கும் என நம்பினான்.

ஆனால் அது வரையும் அவன் தன் தந்தையின் வீட்டிலேயே ஒட்டுக்குடித்தனமாக வாழ்ந்து கொண்டிருக்க முடியுமா?..... கிராமத்திலே ஒரு வீடு வாடகைக்கோ, அல்லது குத்தகைக்கு ஒரு கையகலம் நிலத்துண்டோ எடுப்பதை அவனாற் கனவுகூடக் காணமுடியாது. அவன் தோட்டித் தொழிலாளி! தீண்டத்தகாதவன்.

ஆகவே அவன் மிகவும் சிரமப்பட்டுத் தோட்டித் தொழிலா ளர்களுக்கென்று ஒதுக்கப்பட்ட அந்தச் சேரியில் அமைந்திருந்த வெற்று நிலத்தில் தனக்கென ஒரு குடிசையை அமைத்துக் கொண்டான்.

துருப்பிடித்த இரும்புக்குழாய்கள், மூங்கில்கள், தடித்த காட்போட் அட்டைகள், பழைய தார்த் தகரங்கள் என்று எறும்பு சேர்த்தது போலச் சேர்த்துத் தானும் தன் குடும்பமும் முடங்கிக் கொள்வதற்காக அவன் குடிசை ஒன்றைக் கட்டிக்கொண்டான்.

கிராமத்தின் குடிப்பெருக்கம் அதிகரித்தது. சுகாதாரத் தேவைகளும் அதிகரித்துக் கொண்டிருந்தன. ஆகவே புதிதாகப் பல தோட்டிகளை வேலைக்கெடுக்க கிராமசபை தீர்மானித்தது. அவர்களுக்காகப் பத்து புதிய வீடுகள் பழைய வீடுகளுக்கண்மையிற் கட்டப்பட்டுக் கொண்டிருந்தன.

ஒரே ஒரு அறை, முன்னால் ஒரு வராந்தாவையொட்டிச் சமைய லறைக்கூடம் கொண்டதாக அந்த வீடுகளுக்கு அத்திவாரமிடப்பட்டது.

சந்தனத்துக்கு ஒரு நம்பிக்கை. வீடற்ற தொழிலாளர்களில், தான் சேவை மூப்பிற்கூடியவன். கட்டப்படும் இந்த வீடுகளில் ஒன்று நிச்சயமாகத் தனக்கும் கிடைக்கும் என அவன் நம்பினான்.

அந்த நம்பிக்கையில் சந்தனம் வேலை ஒழிந்த நேரங்களில் எல்லாம் வீட்டுவேலை நடைபெறுமிடத்திற்குச் சென்று ''சிரமதானஞ்'' செய்வான். கட்டட வேலைகளை மேற்பார்வை செய்பவரும் கிராமசபை பொறுப்பதிகாரி ''உனக்கும் ஒரு வீடு கிடைக்குந்தானே'' என்று சொல்கையில் அவன் மகிழ்ந்து போவான்.

தானும் தன் மனைவியும் பிள்ளைகளும் புதிய வீட்டிற்குடிபோக இருப்பதை கற்பனையில் நினைத்துப்பூரிப்பான்.

நில மட்டத்திலிருந்து வீடுகள் கொஞ்சமாக எழுந்து கொண்டிருந்தன.

சந்தனத்துடைய நம்பிக்கையும் வளர்ந்துகொண்டிருந்தது.

* * * * * * *

சந்தனத்துடைய தம்பி சேகுவன் அந்தத் தோட்டிகளின் சேரியிலேயே எழுதவாசிக்கத் தெரிந்தவன். உலக விவகாரந் தெரிந்தவன். அடிக்கடி ஏதேதோ கூட்டங்களுக்கெல்லாம் போய் வந்து கொண்டிருந்தான். அந்தக் கூட்டத்தினர் சேகுவனை ஒரு தோட்டி என்று ஒதுக்கிவைக்கவில்லை.

ஒரு நாள் சந்தனம் சொன்னான்.

''அதெப்படி எனக்குக் கெடையாமப் போவும்?...பத்து வருஷமாச் சேவீஸ்ல இருக்கன். பெரியையா கூட ரொம்ப நாளாச் சொல்லிண் டிருக்கார்''

சேகுவனுக்கு நம்பிக்கை இல்லை. இப்படியான விஷயங்களில் நடக்கிற தில்லுமுல்லுகளையெல்லாம் அவன் அறிவான். ஆகவே தனக்கு ஒரு வீடு வேண்டியதன் அவசியத்தையும், அதற்கு அவனுக்குள்ள தேவையையும் விளக்கி சந்தனத்தின் பேரில் ஒரு விண்ணப்பம் எழுதினான். ஆனால் அந்த விண்ணப்பத்தில் தன் விரலடையாளத்தை வைக்கக்கூட சந்தனம் மறுத்தான். 'பெரியையா எனக்குக் கட்டாயம் வீடு தருவார். இதெல்லாம் எனக்கு தேவல்ல' என்று அடம்பிடித்தான்.

ஆனால் சேகுவன் விடவில்லை. தன்னாலான மட்டும் முயற்சி செய்து, விண்ணப்பத்தில் சந்தனத்தினுடைய வலதுகைப் பெருவிரலடை யாளத்தை வாங்கிக் கொண்டான்! விண்ணப்பத்தைக் கிராமசபை பொறுப்பதிகாரிகளுக்கும் அதன் பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கும் அனுப்பிவைத்தான்.

* * * * * * *

வீட்டிற்கான விண்ணப்பத்தைக் கண்ட கிராமசபை பொறுப்பதிகாரிக்கு கோபம் பற்றிக் கொண்டிருந்தது. 'வீடுகள் கட்டி முடிக்கப் பட்டதும் அதை யார் யாருக்குக் கொடுக்கவேண்டும் என்று தீர்மானிப்பது என் உரிமை. இந்த உரிமையிற் தலையிடுவதாகவே இவ் விண்ணப்பம் அமைந்துள்ளது. இதெல்லாம் இந்த சேகுவனுடைய வேலையாகத்தான் இருக்கும்'. என்று எண்ணி அவர் சினந்தார்.

ஏற்கனவே அவருக்கு சேகுவன் மீது ஆத்திரம். 'எளிய சாதியான சேகுவன் கிராமசபை பொது நூல்நிலையத்தில் புத்தகங்கள், பத்திரிகைகள் வாசிப்பதைக் காணும் போதெல்லாம் அவருக்குக் கோபம் கோபமாக வரும். ஆனால் அங்கு அவனை வராதே என்று விரட்டச் சட்டம் இடம் கொடுக்கவில்லை.

சேகுவன் சார்ந்திருக்கும் சங்கத்தைச் சேர்ந்த 'மேல்சாதி' இளைஞர்களும் இதற்கு ஒப்பமாட்டார்கள் என்பதினால் அவர் அடங்கிப் போயிருந்தார். இப்போது வீட்டுக்கான விண்ணப்பத்தைக் கண்டதும் 'இந்தப் பயலுக்கு ஒரு பாடம் படிப்பிக்கிறேன்' என்று மனதுட் கறுவிக் கொண்டார்!

* * * * * * *

ஆறு மாதங்கள் உருண்டோடி விட்டன. தோட்டிகளுக்காகக் கட்டப்பட்ட பத்து வீடுகளுக்கும் கூரை வேய்ந்தாகி விட்டது. இன்னம் பூச்சு வேலைதான் பாக்கி.

தைப்பொங்கலுக்கு முன்னர் புதிய வீட்டிற்குக் குடி போய் விடலாம் என்று சந்தனம் நம்பினான்.

அந்த ஆறுமாதம் கிராமசபை அலுவலகத்திலே தன் வலதுகைப் பெருவிரலடையாளத்தைப் பதித்துச் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டான் சந்தனம். தோளிற்கிடந்த துண்டை முன்னங்கையில் எடுத்துப் போட்டுக்கொண்டு, கூனிக் குறுகி வில்லாக வளைந்து கொண்டு, கிராமசபை பொறுப்பதிகாரியிடம் -

''வீடுங்க முடிஞ்சு கொண்டிருக்குங்க தொர. இந்த நாயையும் தொர கவனிக்க வேணும்'' என்று விண்ணப்பித்தான். ''இப்ப அந்தக் கதை வேணாம். நீதான் அப்ளிக்கேஷன் போட்டிருக்கியே! பார்த்துக் கொள்றேன். போ, போ'' என்று விரட்டினார் பொறுப்பதிகாரி.

*       *       *       *       *       *       *

தை பிறந்தது!

கிராமத்தின் சுகாதாரத் தேவைகளும் கூடிக்கொண்டிருந்தன. புதிய நிதியாண்டில் எங்கோ அயலூர்களிலிருந்தும் புதிதாகத் தோட்டிகள் சிலர் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்!

வீட்டு வேலைகளும் பூர்த்தியடைந்திருந்தன!. புதிதாக வேலையிற் சேர்ந்தவர்களுக்கும், இன்னும் சிலருக்கும் வீடுகள் கொடுக்கப்பட்டன. வீடு பெற்றவர்கள் 'சந்தோஷம்' கொடுத்தார்கள்! சந்தனத்துக்கு வீடு கொடுக்கப்படவில்லை!

ஏமாற்றமடைந்த சந்தனத்துக்கு என்ன செய்வதென்றே தெரிய வில்லை! தன் ஆத்திரத்தையெல்லாம் சேகுவன் மேல் திருப்பினான். விலைகுறைவான காய்ச்சுச் சாராயத்தை மூக்குமுட்டக் குடித்து விட்டு வந்து தன் தம்பியை வாய்க்கு வந்தபடி திட்டினான். அவனால்தான் தனக்கு வீடே கிடைக்கவில்லை என்று அழுதான்.

சேகுவனுக்கு ஆத்திரமாகத் தான் இருந்தது. ஆனாலும் மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பதை தன் ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு யோசித்தான். என்ன செய்வது என்று அவனுக்குப் புலப்படவில்லை. இந்த அநீதியைத்தன் 'உயர்சாதித்' தோழர்களிடம் முறையிட்டுக் குமுறினான்.

''இது பொறுப்பதிகாரியின் வேலையாகத்தான் இருக்கும். பயப்படாதே நாம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மனுப்பண்ணு வோம்.'' என்றனர் தோழர்கள்.

''அப்படியென்றால்....?''

''மனுப்பண்ணுவதிலும், மன்றாடுவதிலும் அர்த்தமில்லை.''

''வேறென்ன செய்யலாம்?....

''நேரடிப் போராட்டத்தில் இறங்கினால் ஒழிய நியாயம் கிடைக்காது.''

''அது உனக்குத் தெரிகிறது. உன் சகாக்களுக்குத் தெரிய வேண்டுமே?''

''தெரிய வைக்கவேண்டும் தம்மால் உணர்ந்துகொள்ள முடியாத தமது யானைப்பலத்தை அவர்களை உணர்ந்துகொள்ளச் செய்யவேண்டும். அவர்கள் எல்லோருமே வேலை நிறுத்தம் செய்து ஊரை நாற அடித்தால் எல்லாம் வழிக்கு வரும்'' என்று குமுறினான் சேகுவன்.

''சபாஷ்'' என்று சேகுவனின் தோளிற் தட்டி உற்சாகப் படுத்தினார் தோழர்.

'தோட்டித் தொழிலாளருடைய சக்தியை எல்லாம் ஒன்று திரட்டி, அவர்களை நேரடி நடவடிக்கையில் எப்படி இறங்க வைப்பது' என்று சிந்தனையோடு சேகுவன் சேரியை நோக்கி நடந்து கொண்டிருந்தான்.

* * * * * * *

*சேரியை அடைந்தபோது சேகுவனுக்கு அதிர்ச்சியாக* இருந்தது!

பொறுப்பதிகாரியினதும், கிராமசபை உத்தியோகத்தர்களதும் மேற்பார்வையிற் புதிதாக வந்த தோட்டிகள் சந்தனத்தின் குடிசையைப் பிய்த்து எறிந்து கொண்டிருந்தார்கள்.

''இப்புடிச் செய்யாதீங்க தொர. எங்களுக்கு ஒட்டிக்கொள்ள எடமில்ல தொர'' என்று சேகுவன் பொறுப்பதிகாரியின் காலடியில் விழுந்து அழுது கொண்டிருந்தான்.

''உங்களது குடிசை இந்தச் சேரிக்கே அலங்கோலமானது. இதை உடனடியாக ஒழித்துக்கட்ட வேண்டும் என்று மேலிடத்து உத்தரவு. என்னால ஒன்னும் செய்ய முடியாது.'' என்று சொல்லிக் கொண்டிருந்தார் பொறுப்பதிகாரி!

'இந்த , வாயில்லாப் பூச்சிகளை எப்படி ஒன்று சேர்க்கப் போகிறேன்?..... என்று சிந்தித்த படியே தலையைப் பிடித்துக் கொண்டு

மௌனமாக நின்றான் சேகுவன்.

அவனது சிந்தனை என்றைக்கோ ஒரு நாள் அந்த வாயில்லாப் பூச்சிகளை மனிதராக்கத்தான் போகிறது.

(யாவும் கற்பனை)

(தாரகை : மார்ச் 1984)

# எதிர்பார்ப்புகளும் ஏமாற்றங்களும்

வங்காள விரிகுடாக் கடல் மௌனத்தில் ஆழ்ந்து கிடந்தது. பெரிய திரைகள் இல்லை. ஒரு காயலைப்போல் காட்சியளித்தது. கடலும் வானமும் அந்தத்தில் கட்டித்தழுவி நிற்பதைப் பார்க்க அவனுக்கு நெஞ்சு கனத்தது.



கடலில் அமைதியும், காற்றின் குளிர்ச்சியும் அதில் கலந்து வந்த மீன் வாடையை நுகர்ந்த போதெல்லாம் மனதின் அடித்தளத்தில் எத்தனையோ 'எதிர்பார்ப்புகள்! ஏமாற்றங்கள்! அவலங்கள்!

கடலை நம்பி ஜீவனோபாயம் நடத்தி வந்த முக்தாருக்கு கடலில் மீன்பாடு குறைந்ததினால் அவனது வாழ்க்கையின் பற்றுக்கோடு அறுந்துவிட்டது இப்போது அவனுக்கு வாழ்வதா? சாவதா? என்ற போராட்டம்.

தமது பாரம்பரிய சொத்தாகக் கடலை நம்பி இருந்தவர்களுக்கு கடல் பாதுகாப்பு வலயமாக்கப்பட்ட பின்னர் அவர்களது வாழ்க்கை வறுமையின் கோரப்பிடிக்குள் சிக்குண்டது! ஒரு வேளைச் சோற்றுக்கே 'ததிங்கிணத்தொம்'

கடற்கரை ஓரத்தில் வாடைக் காற்றினால் எறியப்பட்ட சில்லுக் காய்கள், கூந்தாளங்காய்கள், சிப்பிகள், இராவணன் மீசைகள் என்பன கரை முழுவதுமாக விரவிக்கிடந்தன.

சூரியக் கதிர்கள் பட்டுத் தெறிக்காத இளங்காலை வேளையில் பாய்போல சுருண்டு சுருண்டு வரும் கடலலை அவனது புறங்காலைத் தழுவிக் கொண்டிருக்கையில் அதனை அலட்சியம் செய்தவனாக கடற்கரையில் முக்தார் நடந்து கொண்டிருந்தான்.

அவனது மனதில் சிந்தனைகள் வலைபின்னின. இந்த வாடக்காத்துக் காலத்தில் கிழக்கு- கரையில பார,சூரை, கொடுவாப் புடிக்கும். வெண்டையன் கல்லில-கருங்கன்னிப் பாரையும், சோமுந்திரி யப் பாரில - துள்வண்டும். ஆத்துவாப்பாரில-முள்ளுச்சுறாவும், பெரியங்க மலையில - அறுக்குளாவும், கெங்கை ஆத்துக்குள்ள - கொடுவாவும் புடிக்கும்.

இப்ப குடாவ உட்டு வெளியால போய் மீன் புடிக்கலாகாது. இந்தக் குடாவுக்குள்ள எத்தின நாளைக்குத்தான் மீன் புடிப்பது? குடாவுக்கு வெளியால மீன் புடிக்கப்போன ராத்தாவுடைய புருஷன் இன்னமும் ஊடு திரும்பல்ல...?

எத்தின நாளைக்குத்தான் இப்புடிக் கெடந்து சாகிறது...? வேடங்கந்து ஆத்திலேயும், கெங்கைக் கரையிலேயும் மீன் புடிச்சுக் கஷ்டப்பட்டது போதும். வெளியால போய் மீன் புடிக்காட்டி சீவியமே நடத்த முடியாது.

எங்கட வவுறு பத்தி எரியிது. மத்தவங்களுக்கு எங்க தெரியப் போவுது..? நாளைக்கு ஒரு கை பாக்கிறேன் சே!..... சே!..... என்ன வாழ்வு இது!

வெள்ளாப்பில எழும்பி இராணுவத்திடம் பாஸ் எடுத்துக்கிட்டு இரைக்கு ஊதி ஓடையில இறாலை வீசிக்கொண்டு எப்படியும் கடலுக்குச் சென்றே ஆகுவேன். எதுக்கும் விடியட்டும்!

ஒரு வருஷத்துக்கு முன்னால நான் ஒரு தோணியில நாலு பேருடன் வெளிக்கடலுக்கு மீன் புடிக்கப் போனேன். அது போல எனது மச்சானும் ரெண்டு பேருடன் சேர்த்துக்கிட்டு எங்களோட கடலுக்கு வந்தார்.

அப்போது கடலில திடீரென ராத்திரி நேரத்தில வெடிச்சத்தம் கேட்டது. நாங்க எங்கட நங்கூரத்தை இழுத்துக்கிட்டுக் கௌம்பினோம். ஆர்சுட்டதோ தெரியாது. ஆனா இன்னும் மச்சான் கரைதிரும்பல்ல...?

மச்சான் இல்லாதினால ராத்தாவுடைய குடும்பத்தக் காப்பாத்த வேண்டிய பொறுப்பு இப்போ என்னுடையதாகிட்டுது. என்னால என்ன செய்ய முடியும். நான் ஒருத்தன்..?

காலங்காலமாக கடலுக்குப்போய் ஒழைச்சி மீனை மொதலாளிக்கு கடனுக்கு கொடுத்திட்டு ஊட்டுக்கு வாறது தான் இப்ப எண்ட வேலை. சொந்தத்தில குடியிருக்கக்கூட ஒரு துண்டுப் பூமி இல்லை. கரைச்சையில் ஒரு துண்டு நிலங்கிடைக்காட்டி எண்ட கெதி அதோ கெதிதான்.

குடியிருக்க ஒழுங்கான ஒரு ஊடு இல்ல. புள்ளைகளும் வளர்ந்துக்கிட்டு வருவுதுகள். இந்தக் குஞ்சுகளுக்கு ஒலகம் தெரியாது. மாடாக உழைச்சி ஓடாத் தேஞ்சது தான் மிச்சம். நமக்கென்று ஒரு தோணியோ, வலையோ சொந்தமல்ல. எல்லாம் ஊரவண்ட.

மாயவலை கடலுக்கு வந்த பொறகு ஒரு மீன் குஞ்சுகூட புடிக்குதில்ல. கருவுலேயே எல்லாத்தையும் அழிச்சிடுறாங்க. நமக்கிட்டேயும் கொஞ்சம் வசதி வாய்ப்பிருந்தா போட், வலை வாங்கலாம். இப்ப ஒரு நேரச் சோத்துக்கே கஷ்டமாக இருக்குது.

வன்செயல் வந்ததுக்குப் பொறவு தூரந்தொலைக்குப் போய் ஒரு தொழிலும் செய்யலாது. சனியன் புடிச்ச இந்தக் கடல் தொழிலை உட்டுப் போட்டு சின்னதொரு கடையைப் போடுவோம் எண்டாலும் அதற்கும் வசதி இல்லை.

மீன் புடிக்கின்றவன்ட புள்ளை எல்லாம் மீன் புடிக்கிற நிலைக்கு ஆளாயிட்டாங்க. இந்தக் கிராமத்தில உருப்படியாகக் கல்வி நிலம கூட இல்ல. எல்லாம் நமக்கு எட்டாத பொருளாத்தான் இருக்குது.

எப்பதான் நமக்கு நல்ல காலம் பொறக்கப் போவுதோ தெரியாது? மத்தவங்களோட ஒத்துப் பாக்கக்குள்ள நாங்க இன்னும் முன்னேறல்ல. எங்கட வாழ்க்கை இன்னும் பொட்டலாத்தான் இருக்குது!

மழையில நனஞ்சி, வெயிலில காஞ்சி, பனியிலேயும் காத்திலேயும் கொடுவிப் போனது தான் எங்களுக்கு மிச்சம். ஆனால் வாழ்க்கையில ஒழுங்காக ஒண்டையும் சாதிச்சது கெடையாது.

ஆத்தில வல வீசி, கடலில தூண்டல் போட்டு மீன்புடிச்சுக் களைச்சுப் போச்சுது. வாப்பா செஞ்ச தொழிலில நாங்களும் பரம்பரை யாகச் செய்துக்கிட்டிருக்கிறோம். எங்கட புள்ள குட்டிக்கெண்டாலும் ஒரு விடிவு கெடைச்சாப் போதும்! என்று முக்தார் மனதுக்குள் கறுவிக் கொண்ட படி கரையோரமாக நடையாக நடந்து மூதூர் துறைமுகத்தை வந்தடைந்தபோது அங்கே கடல் வழிப்பயணத்திற்காக மக்கள் இயந்திரப் படகை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

அங்கே மாரிகாலத் தாவரங்கள் போல துறைமுகத்தில் முளைத்தெழுந்து நிற்கும் தேனீர்க் கடைகளுக்குள் மக்கள் போவதும் வருவதுமாக இருந்தனர்.

முக்தார் காது இடுக்கிலிருந்து குறைச்சுருட்டை எடுத்து தேநீர்க் கடை ஒன்றில் பற்றவைத்துக் கொண்டு திரும்பிய போது -

``என்ன முக்தார் நானா நல்லா அசந்து போயிட்டீங்க. சொகமில்லையா?'' என்று வாஞ்சையோடு கேட்டான் ஜமால்தீன்.

``மனசு நல்லா இருந்தாத்தானே மனிசன் உருப்படியாக இருப்பான்.''

``தொழில் நிலைமை எல்லாம் எப்படி....?

``புறங்கடலுக்குப் போவாம ஒழைக்கலாகாது''

''ஓமோம், இந்தக் குடாக் கடல நம்பி வாழேலாது. கொஞ்சம் தள்ளிப் போனாத்தான் நூறு இருநூறு ரூபா ஓழைக்கலாம்.''

''நாளைக்கு வாறியா நாம ரெண்டு பேரும் புறங்கடலுக்குப் போவோம்?''

''நானும் அதப்பத்தித்தான் ரெண்டு நாளா யோசிச்சிக்கிட் டிருக்கேன்''

''அப்படியா? நான் வெள்ளாப்புல வந்து உன்னக்கூப்புடுறேன். நீ ஆயத்தமாய் இரு. எண்ட தோணியில ரெண்டு பேரும் போவம்''

''அது சரி இப்ப கொஞ்ச நாளா உன்ன இந்தப் பக்கம் காணல்ல. எங்க போனாய்?''

''அது ஏங்க கேக்கிறீங்க வெள்ளாம வெட்டுவோம் எண்டு மட்டக்களப்புப் பக்கம் போனேன். நமக்குப் பழக்கமில்லாத தொழில் சரிப்பட்டு வரல்ல வந்துட்டேன். கடலை மட்டும் நாம நம்பி வாழேலாது. வேறு தொழிலையும் செஞ்சி பழகத்தான் வேணும்''

* * * * * * * *

முக்தார் துறைமுகத்தை விட்டு அகன்று வீட்டை அடைந்த போது அங்கே குடிசையின் வாசலிலே குடையாகக் கவிந்திருந்த தென்னை மர அடியில் குந்தியவாறு அவனது மனைவி கதீஜா நிலத்தைக் குச்சியால் கீறிக் கொண்டிருந்தாள். பிள்ளைகள் குடிசையின் பின் புறமாக ஓடிப்பிடித்து விளையாடிக் கொண்டிருந்தனர்.கணவனைக் கண்டதும் கதீஜா எழுந்து நின்று -

''என்னங்க இவ்வளவு நேரமும் எங்க போனீங்க....?

''எங்கயாவது போவாட்டி நாம எப்புடி வாழ்றது....?

''அதுக்கு இப்ப என்ன செய்யப் போறீங்க........?

''நாளைக்கு நான் ஜமால்தீனுடன் சேர்ந்துக்கிட்டு புறங்கடலுக் குப் போகப் போறன்''

``என்ன சொன்னீங்க? ''

``இஞ்ச பார்! குடாக் கடலுக்குள்ள தொழில் செய்யலாது''

``வேணாங்க புறங்கடலுக்குப் போய் மீன் புடிக்க வேணாம் எண்டு தடுத்திருக்காங்க. நீங்க ஏன் அதைமீறிப் போவப் போறீங்க..?

``போவாட்டி பட்டினியா கெடந்து சாகச் சொல்றாய்? நம்மோட சேந்து ராத்தாவுடைய குடும்பமும் கஷ்டப்படுது''

``அதுக்காக நீங்க பொறங்கடலுக்குப் போக வேணுமா...?

``ஆண்டவன் நமக்கொரு வழியைக் காட்டாமலா போவான்..?

``நீ சும்மா கெட, நிவாரணச் சாமான்கள் கூட நமக்கு ஒழுங்காக் கெடைக்குதில்ல. ஊட்டுக்குள்ள எத்தின நாளைக்குத்தான் குந்திக் கொண்டு இருப்பது...?'' என்று பெருமூச்சு விட்டான் முக்தார்.

காலைப்பொழுது புலர்ந்தது முதல் மப்பும் மந்தாரமுமாக இருந்தது அன்றைய நாள்! மேகம் மூடிய ஆகாயத்திற்குள் எங்கோ கதிரவன்! கதிரவனைக் கண்டு கொள்ளாமலே அன்றையப் பொழுது நகர்ந்து கொண்டிருந்தது.

``வெள்ளாப்புல நான் கடலுக்குப் போறேன்.'' என்ற எண்ணம் ஆட்கொள்ள முக்தாருக்கு மனதில் ஒரு பூரிப்பும், ஆறுதலும்........... சிலவேளை ஏதேனும் நடந்து விட்டால் என்ற தயக்கம்...?

மாலை வேளையில் மீண்டும் கடற்கரையை அடைந்த முக்தார் கடலை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். கடற்கரையை விட்டுப்போக அவனுக்கு மனம் இடங்கொடுக்கவில்லை. கடற்கரையில் இழுத்து வைக்கப்பட்டிருந்த தனது தோணியைக் குழந்தைபோல் தொட்டுத் தடவிக்கொஞ்சினான்.

குளம் போல் அசைவின்றி மோனித்துக் கிடந்த கடல் மெல்ல மூச்சுவிட ஆரம்பித்தது. பம்மிப் போய் இருந்த காற்று மெதுவாக அசையத் தொடங்கியது. கடல் தனது நீண்ட நாக்கால் கரையை சுழற்றி நக்கி எடுக்க ஆரம்பித்தது.

நிர்மலமாக இருந்த வான் வெளிப்பரப்பு வரவர கறுக்க ஆரம்பித்தது.முகிற்கூட்டம் காற்றில் பம்பரமாகச் சுழன்றது. கொட்டி யாபுரக் குடாக் கடலின் அசாதாரண அமைதி குலைந்துவிடும் போல் இருந்தது.

சூழ்நிலையை அவதானித்தபோது - தனக்கு எதிராக இவைகள் சூழ்ச்சி செய்வதாக முக்தார் நினைக்கையில் மேற்கு வானத்தின் கூன் விழுந்த முதுகு வழியாகச் சூரியன் அடிவானச் சுரிக்குள் சென்று மறைய இருள் கவியத்தொடங்கியது.

முக்தார் தனது குடிசையை நோக்கி சோர்வோடு நடந்தான். அங்கே அவனது மனைவி கதீஜா உக்கிப்போன குடிசையின் கூரையைச் சரி செய்துகொண்டிருந்தாள்.

இரவுச் சாப்பாட்டிற்கு ஆலாய்ப்பறந்த குழந்தைகள் அடங்க நித்திராதேவி அவர்களை அரவணைத்துக் கொண்டாள்.

மின்னல் கொடி அடிவானில் தோன்றி மறைந்தது. இடிஇடித்தது ''சோ'' வென மழைபெய்தது. கடற்கரை ஓரத்தே செழித்து வளர்ந்திருந்த மரங்கள் எல்லாம் காற்றில் பேயாட்டம் ஆடியது.

கடல் ஆக்ரோஷம் அடைந்து ஆர்ப்பரித்து அலைகள் மோகரித்து எழுந்தது. கடலும், மழையும், காற்றும் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டுத் தனது பலத்தைக் காட்டத் தொடங்கியது.

விழிப்பிற்கும் நித்திரைக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்த முக்தாரின் கனவெல்லாம் ஜமால்தீனுடன் வெளிக் கடலுக்குப் போவதும், மீன்பிடிப்பதுமாக இருந்தது. கனவிலிருந்து விடுபட்ட முக்தார் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்தான். வீட்டுக் கூரையால் ஒழுகும் மழை நீருக்கு பாத்திரங்களை வைத்து விட்டு குடிசையின் மூலையில் குந்திக் கொண்டிருந்தாள் கதீஜா.

(தினக்குரல் - 2003)

# மீண்டும் வந்தாள்

கரு நீலமாகப் பரந்து கிடக்கும் வங்காள விரிகுடாவைப் பார்த்தவாறு எங்கள் கிராமமான மூதூர் அமைந்துள்ளது. கச்சான் காற்றடிக்கும் காலத்தில் கடற்கரை ஓரத்தில் எம்மை நோக்கி ஓடிவரும் இராவணன் மீசைகளின் அழகைப் பார்த்து இரசிப்போம்.



கடற்கரை வெண் மணலில் மதாளித்துப் படர்ந்து கிடக்கும் அடம்பன் கொடிகளின் மேல் நாம் இருவரும் அமர்ந்து கொண்டு எதிரே திரு கோணமலைத் துறை முகத்திற்குள் நுழைய வரும் வெளி நாட்டுக் கப்பல்களையும், குடாக் கடலில் பாய்விரித் தோடு தோணிகளை யும், கடலுக்குள் குத்திட்டு நிற்கும் குன்றுகளின் மேல் கடலலை மோதி, மோதி நுரைக்கும் அழகையும் பார்த்து மகிழ்வோம்.

மீனவப் பெண்ணான அவள் நீரின் இடை மட்டத்தில் ஆடும் பாசிக் கொடியைப் போல எப்பவும் மென்மையாக இருப்பாள், கடற்கரை ஓரத்தில் கிடக்கும் கிளிஞ்சல்கள் போல அவள் கண்களும், செம் மீனைப் போல சிவந்து அழகாகவும் இருப்பாள்.

புத்தி அறியாத வயதில் நானும் அவளும் கைகளைப் பிடித்துக் கொண்டு கடற்கரை மணலில் கால்கள் புதையப் புதைய மாலை வேளைகளில் ஓடிவந்து மணல் விளையாட்டில் ஈடுபடுவோம்.

நாளைக்கு நான் பல்கலைக்கழகம் செல்ல வேண்டும்.

என்ன முகத்தோடு அங்கு செல்வது?.... அவளுடைய முகத்தில் எப்படி விழிக்கப் போகிறேன்?

அவள் அங்கு வருவாள். நான்..?

எனக்கு எதுக்கு இந்தப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தது? அல்லது அவளுக்குக் கிடைக்காமல் இருந்திருக்கக் கூடாதா?

பாடசாலையில் அஸ்தமித்து விட்ட உறவு பல்கலைக் கழகத்திலும் தொடர வேண்டுமா.?

அவள் கொஞ்சங் கூட இதைப் பற்றிச் சிந்தித்திருப்பாளா.?

பூசிய சேறு காயாத நிலையில் நான் அங்கு எப்படிச் செல்வேன்.?

அவள் மட்டும் என் வார்த்தைக்கு அன்று உடன்பட்டிருந்தால், நாளைப் பொழுது! எனக்கு எத்தனை மகிழ்ச்சியைத் தந்திருக்கும்.?

நினைவுகளையும், கனவுகளையும் சுமந்து கொண்டே நான் தூங்கிப் போனேன்.

விடிந்தது.

பல்கலைக்கழகம் சென்றேன். வளாக வாசலில் சிவப்பு மையினால் 'புன்னகையுடன் புது வருட மாணவர்கள் வரவேற்கப் படுகிறார்கள்' என்று எழுதப்பட்டிருந்த வார்த்தைகளைத் தாண்டி உள்ளே நுழைந்தேன்.

வளாகத்தையும், அதன் கட்டட அமைப்பையும், சிரேஷ்ட மாணவர்களையும் சூழலையும் கண்ட எனக்கு தேகம் வெட வெடத்தது.

முகம் சிவந்தது. இதழ்கள் துடித்தன. கைகள் நடுங்கின. வார்த்தைகள் தடுமாறின. கண்ணீர் திரையிட்டது.

என் உடலிலும் மனசிலும் விவரிக்க முடியாத உணர்ச்சிகள்!

ஒரு புதிய உலகத்துக்கு வந்த நிலை எனக்கு!

சிரேஷ்ட மாணவர்கள், புது வருட மாணவர்களின் வரவில் கண் வைத்த வண்ணம் அங்குமிங்குமாக நடமாடிக் கொண்டிருந்தார்கள்.

சிரேஷ்ட மாணவர்கள் உதவும் மனப்பான்மையோடு புதிதாக வந்த மாணவர்களை அழைத்துக் கொண்டு அவர்களுடைய பதிவைக் காரியாலயத்தில் பதிவு செய்வதில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள்.

'ராக்கிங்' செய்யும் மாணவர்களைப் பிடிப்பதற்காக 'காக்கிச் சட்டை' பாதுகாப்பு ஊழியர்கள் மாணவர்களோடு மாணவர்களாக நின்று கொண்டிருந்தார்கள். சிரேஷ்ட மாணவர்களில் ஒருவரான ரிஷாத் எனக்கு உதவ முன்வந்தார். அவரின் நீண்டு மெலிந்த உருவமும், கம்பீரமான பேச்சும், அகன்ற நெற்றியும், திருதிருவென்ற பார்வையும் என்னைப் பயமுறுத்திக் கொண்டிருந்தன!

அவ்விடத்திலிருந்த தென்னை மரத்தின் கீற்றுக்களும், அதனோடு நின்ற மூங்கில் மரங்களும், பூஞ்செடிகளும் நிழல் பரப்பிக் கொண்டிருந்தன. சீதளக் காற்று என்மேனியைத் தழுவிச் சென்றது.

எதிரே அணைக்கட்டு ஒன்றிலிருந்து வாய்க்கால் வழியாக நீர் ஓடிக் கொண்டிருந்தது. பிரதான வீதியால் செல்லும் வாகனங்களின் இரைச்சல் காதை அடைத்தது. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலேன்ற காட்சி மனதிற்கு ரம்மியமாக இருந்தது.

ரிஷாத் என்னோடு பேச ஆரம்பித்தார்.

"உனது பெயர் என்ன?"

"துப்ரி"

''எந்த ஊர்''

''மூதூர்''

''ஒரு பாட்டுப் பாடு பார்ப்போம்''

''எனக்குத் தெரியாது''

''சும்மா பாடு பொய்சொல்லாதே அதிகாலையில் ஐந்தரை மணி தொடக்கம் இரவு பதினொரு மணி வரையும் ரேடியோவில் எத்தனையோ பாட்டுப் போவுது ஒரு பாட்டு பாடத் தெரியாதா உனக்கு?''

''நினைவிலே மனைவி என்று அழைக்கிறேன். அவளை இன்று இரவெல்லாம் நிலவில் நின்று எழுதுவேன் கவிதை ஒன்று''
''போதும் நிறுத்து, கவிதையும் எழுதத் தெரியுமா?''

''ஆமாம்''

''எதைப் பற்றிக் கவிதை எழுதியிருக்கிறாய்''

''காதலைப் பற்றி''

''காதலும் தெரியும், கவிதையும் தெரியும் இப்போது மனைவி வேண்டும் இல்லையா?'' என்று கேட்டு என்னை ரிஷாத் கிண்டல் பண்ணினார்.

இங்கும், அங்குமாக ஆண்களும் பெண்களுமாக நின்று கேள்வி கேட்பதிலும், பாட்டுப்பாடச் சொல்வதிலும், அனுபங்களை கேட்பதிலும் சிரேஷ்ட மாணவர்கள் புதுவருட மாணவர்களுடன் நின்று கொண்டிந்தார்கள்.

ரிஷாத் மீண்டும் என்னோடு பேச ஆரம்பித்தார்.
எதிரே நின்ற பெண்களைக் காட்டி- ''பெண்களைப் பற்றி உனது அபிப்பிராயம் என்ன?''

''பெண்கள் என்றாலே புண்கள். அவர்களைக் கண்டாளே எனக்குப் பிடிக்காது.''

``ஏன் அப்படிச் சொல்கிறாய் பெண்கள் இல்லாவிட்டால் இந்த உலகமே இருந்திருக்காதே!''

``ஆண்கள் இல்லாவிட்டாலும் இந்த உலகம் இருந்திருக்காது தானே?''

``நீ விரக்தியோடு பேசுகிறாய்''

``இல்லை உண்மையைச் சொல்கிறேன்''

எனது பேச்சைக் கேட்ட ரிஷாத்துக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

``மடையா, உன்னைப் பெற்றதும் ஒரு பெண்தானே. உனது தாயையும் வெறுக்கிறாயா? உனக்கு பாசமே இல்லையா? சகோதரிகளுடன் கூடப் பிறக்கவில்லையா..?'' என்று திட்டினார்.

நான் மௌனித்திருந்தேன்.

``ஹிட்லர் யூதர்களை அழித்தது போன்று பெண்களை அழிக்க வேண்டும்.'' என்று மீண்டும் நான் ஆத்திர மிகுதியால் கூறினேன்.

``நீ சொல்வதைப் பார்த்தால் சீனியர்களையும் அழிக்க வேண்டும் என்று சொல்வாய் போலத் தெரிகிறதே''

``பெண்களை மட்டும் தான் சொல்கிறேன்.''

``நீ ஒரு பெண்ணினால் ஏமாற்றப்பட்டிருக்கிறாய். அது தான் இப்படிப் பேசுகிறாய்''

``அப்படி ஒன்றுமில்லை'' என்று சமாளித்தேன்.

``பொய் சொல்லாதே நானும் இங்கு வர முன் காதலில் தோல்வி கண்டவன் தான். இங்கு வந்த ஒரு பெண்ணோடு பழகிய பின்னர் கடந்த காலத்தை மறந்து நிம்மதியுடன் இருக்கிறேன்.''

''உங்களுக்கு நிம்மதியாக இருக்கலாம். எனக்கு அப்படியல்ல நான் நொந்து போனவன்''

''ஒரு பெண்ணோடு ஏற்பட்ட கோபத்துக்காக உலகத்தில் உள்ள பெண்கள் எல்லோரையும் பழி சொல்லாதே. தாயின் பாதத்தின் கீழேதான் சேயின் சுவர்க்கம்! தாய்க்கு பின் தாரம் தெரியுமா?''

''தெரியும்''

'பெண்களைக் பற்றி இப்படி கூறுவதை மற்ற மாணவர்கள் கேள்விப்பட்டால் உன்னை வளாகத்திலிருந்தே ஒதுக்கி விடுவார்கள்''

''சமூகம் ஏற்கனவே என்னை ஓதுக்கி விட்டது.''

எனது அர்த்தப் புஷ்டியான பேச்சைக் கேட்ட ரிஷாத்தினால் தொடர்ந்து என்னிடம் கேள்வி எழுப்ப முடியாமற் போய்விட்டது.

''சீனியருக்குப் பணிந்து நடக்க வேணும், அதைச் சரி வரச் செய்ய வேணும்'' என்று ரிஷாத் சொன்னார்.

''அனுபவத்திலும், படிப்பிலும் நீங்கள் மூத்தவர்கள் அதற்கு நான் எப்போதும் மரியாதை செய்வேன். ஒருபோதும் பல்கலைக்கழக மரபை மீற மாட்டேன்''

''உங்களை விட நாங்கள் ஒரு வருஷந்தான் படிப்பில் கூட, அதற்காக நீங்கள் எங்களுக்கு அடிமைகளல்ல. எங்களுக்கு ஒன்றும் கொம்பு முளைக்கல்ல உங்களைப் போல தான் நாங்களும்''

ரிஷாத்தின் பேச்சைக் கேட்டு அசந்தே போனேன்.

கொஞ்ச நேரத்துக்கு முன் கடு கடுவென்று பேசினார்.

''எவ்வளவு நல்லவர் மனிதாபிமானத்தோடு பேசுகிறார். இப்படி மற்றச் சீனியர்களும் இருப்பார்களா?'' என்று எனது மனம் ஏங்கியது.

நீதவான் முன்னிலையில் குற்றவாளிக் கூண்டில் நின்று மீண்ட நிலை எனக்கு இருந்தும் உள்ளூர ராக்கிங் பயம் என்னை ஆட்டிக்

கொண்டிருந்தது. ஒரு ஆளா இரண்டு பேரா? எத்தனை சீனியரைச் சந்திக்க வேண்டும்? அப்பப்பா!

பெண்களைப் பற்றிய தவறான எண்ணக்கரு என்னுடைய மனதில் எப்படி வந்தது?

இதற்கு என்ன காரணம்? யார் சூத்திரதாரி?

இந்தக் கேள்விகளுக்கு ரிஷாத் விடை தேடிக் கொண்டிருப் பதை அவருடைய முகபாவமும், பிதுங்கிய விழிகளும், நெற்றியில் விழும் சுருக்கமும் காட்டிக் கொண்டிருந்தன.

நீண்ட நேர மௌனத்திற்கு பின்னர் ரிஷாத் மீண்டும் பேச ஆரம்பித்தார்.

''துப்ரி இப்பவாவது உண்மையைச் சொல்லு'' என்றார் என்னிடம்

''நீங்கள் தான் என்னிடமிருந்து உண்மையைத் தெரிஞ்சிக் கிட்டீங்களே. பிறகு ஏன் வெந்த புண்ணில் வேலைப் பாச்சுறீங்க.''

''என்ன சொல்கிறாய் 'லவ்பிறேக்' காதலில் தோல்வி! அப்பாடா இதுக்குத் தானா இவ்வளவு நேரமும் வீராப்பு பேசினாய்''

சரி, சரி, என்பது போல் ரிஷாத் தலையை ஆட்டிப் புன்னகைத் தான்.

''அவளது பெயர் என்ன..?''

''மஸீனா''

''எப்படி உனக்கும் அவளுக்கும் லவ் ஏற்பட்டது.''
''அட்வான்ஸ் லெவல் கிளாசில் அதெல்லாம் பெரிய கதை''

''பெரிய கதை எனக்குப் பிடிக்காது. சின்னக் கதைதான் எனக்குப் பிடிக்கும். தலையைச் சுத்தி மூக்கைத் தொடாமல் நேராகவே மூக்கைத் தொட்டால் போதும்.''

''ரெண்டு பேரும் ஒரே பாடசாலையில் அட்வான்ஸ் லெவல் படித்தோம். நான் நியூமரலாஜி' பார்ப்பதில் அதிக ஆர்வம் கொண்டவன். அந்த வகுப்பில் இருந்தவர்களில் காதலுக்கு பொருத்தமான இலக்கத் தோடு ஒவ்வொருவரையும் சோடி சேர்த்துவைத்தேன்.''

''ஆனால் எனக்கு மட்டும் ஒரு காதலி வாய்க்கவில்லை.''

''இந்த நிலையில் தான் மஸீனாவின் பிறப்பெண்ணையும் கூட்டெண்ணையும் கணித்துப் பார்க்க சந்தர்ப்பம் கிடைத்தது.''

''அவளுடைய பிறப்பெண் 'ஏழும்' என்னுடைய பிறப்பெண் 'இரண்டும்' காதலுக்குப் பொருத்தமாக இருந்தன. இதன் பின்னர் எனது எண்ணத்தை அவளிடம் வெளிப்படுத்தினேன். அவள் மௌனமாகவே இருந்தாள்.''

''மௌனம் சம்மதத்திற்கு அறிகுறி என்று, எனது உள்ளம் காதல் மழையால் நனைந்தது.''

''அவளுக்காக அலைந்தேன். ஏங்கினேன் மீண்டும் எனது எண்ணத்தை மற்றவர்கள் மூலமாக வெளிப்படுத்தினேன். அப்பவும் அவள் மௌனமாகவே இருந்தாள். அவளுடைய மௌனம் என்னைப் பித்தனாக்கி விட்டது.''

''அது சரி அவள் இப்போது எங்கே இருக்கிறாள்?''
''அவளும் இங்கு தான் வந்திருக்கிறா.''

''அப்படியா? முதலில் நீ அவளை இதயத்திலிருந்து தூக்கி எறிந்து விடு. இந்த வளாகத்தில் எத்தனையோ பெண்கள் இருக்கிறார் கள். அவர்களில் ஒருத்தியைப் பிடித்துக் கொள்கிறதுதானே. இங்கு காதலுக்கா பஞ்சம்'? அவளை விட அழகான ஒருத்தியை பிடித்துக் கொள்ள எல்லாம் சரியாகிவிடும்.''

இப்படி ரிஷாத் கூறிய போது எனது கண்கள் கண்ணீரால் பனித்தன. இதைக் கண்ட ரிஷாத்,

''துப்ரி அழாதே! ஒரு பெண்ணுக்காக அழுவதா சீ..சீ கேவலம்! ஆண் வர்க்கத்துக்கே அவமானம். இதயத்தைப் புரிஞ்சிக்கத் தெரியாத

அவளோட பழகிப் பலனில்லை'' என்று ரிஷாத் எனக்குச் சமாதானம் கூறி கொண்டிருந்தார்

அந்த வேளையில் அதோ மஸீனா..!

அவளைப் பார்த்து நான் தலையைத் தாழ்த்தியதைக் கண்டு கொண்ட ரிஷாத் என்னிடம் கேட்டார்.

``இது தானா அந்த மஸீனா?....''
``ஆமாம்''

``நீ கொஞ்சம் தள்ளி நின்று கொள்!''

``சரி..''

நான் அவ்விடத்தை விட்டுச் சற்று அகன்று நின்றபோது ரிஷாத் மஸீனாவுடன் பேசலானார்.

``ஹலோ உங்களது பெயர் மஸீனா தானே?''

``ஆமாம்''

``என்னை யாரெண்டு உங்களுக்குத் தெரியுதா?''
``சீனியர்!''

``உங்களது இளமைக்கால விளையாட்டெல்லாம் எனக்குத் தெரியும். ஒரு ஆணின் உள்ளத்தைப் புரிஞ்சிக்கத் தெரியாம இங்கு 'டிக்றி' படிக்க வந்திட்டீங்க.. காதலின் புனிதத் தன்மை உங்களுக்குத் தெரியாதா?'' என்று அதட்டலோடு கேட்டார் ரிஷாத்.

``காதலில் எனக்கு நம்பிக்கை கிடையாது. ' இது வெறும் பொழுதுபோக்கு. காதல் என்ற போர்வையில் எண்ட உள்ளத்தையும், உடலையும் பகடையாட வைக்க நான் விரும்பலல.''

``புனிதத்துடன் பண்ணிய காதல் எத்தனை கரை சேர்ந்திருக் குது? நூறு பேர் இதில் இறங்கினால் பத்துப்பேர் தான் வெற்றி பெறுகிறாங்க'' என்றாள் மஸீனா.

அவளுடைய அர்த்தப்பாடான பேச்சு ரிஷாத்தை ஒரு கணம் தடுமாற வைத்தது.

''காதலால் உந்தப்படாதது எதுவுமே இந்த உலகில் கிடையாது. அது தெரியுமா?''

''காதல் பனியினால் தடுமல் பிடித்தவர்களையும் எனக்குத் தெரியும்''

மஸீனாவின் குத்தலான பேச்சைக் கேட்டு ரிஷாத் அவளை தலை நிமிர்ந்து பார்த்து விட்டு தலையைத் தாழ்த்திக் கொண்டார்.

''அப்ப என்ன தான் உண்ட முடிவு?''

''நான் 'லவ் மெரிஜ்ஜை விரும்பல்ல புறப்போஸல் மெரிஜ்ஜையே' விரும்புகிறேன். திருமணத்துக்குப் பிறகு தான் நான் கணவனைக் காதலிக்க விரும்புகிறேன்.''


அவள் தனது நடையைத் தொடர்கிறாள்.

(சிந்தாமணி 03.02.1985)

# இன்னுமொரு சுனாமி வந்தால்..?

அந்தக் கொடிய மார்கழி மாத இறுதிக் காலைப் பொழுது?

அழகான, அற்புதமான இந்த அலைகள் எவ்வளவு கொடூரமானவை? கடல் தாயின் மடியில் வாழ்ந்தவர்கள் இந்த அலைகளை உயிருக்குயிராக நம்பினார்கள்.




கரைக்கு முப்பதடிக்கு மேல் சீறிப்பாய்ந்து வந்த பேரலை அரைமணி நேரத்தில் கடலுக்குள் மீண்டும் மடிய ஆரம்பித்தது. கடல் பிரதேசம் முழுவதும் மயான பூமியாகக் காட்சியளித்தது. சமவெளி போலிருக்கும் வானவில் கிராமத்தில் கோரக்காட்சி மனதை உறைய வைத்தது. அணுக்குண்டினால் பாதிக்கப்பட்ட ஹிரோசிமா, நாகசாக்கி போல் ஆங்காங்கே மனித உடல்கள் சிதறிக்கிடந்தன.

கடலின் உருத்திர தாண்டவத்தினால் எத்தனையோ பேர் நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிருக்காகப் போராடிக் கொண்டிருந் தனர். சிலர் கட்டட இடிபாடுகளிலும் முட்கம்பி வேலிகளிலும், மரங்க ளிலும் சிக்கி மோதுண்டு இறந்தனர்.

சுனாமியின் அன்றைய அகோரக்காட்சி விரியும் போதெல்லாம் அபூபக்கருக்கு நெஞ்சை அடைத்துக் கொண்டு வரும். அவனது உரம் ஏறிப்போன கைகளும், கால்களும், ஒடுங்கிய உடலும் உழைப்பாளி என்பதனை பறைசாற்றிக் கொண்டிருந்தது.

கடற்கரை வெண்மணலில், மதாளித்துப் படர்ந்திருக்கும் அடம்பன் கொடிகளுக்கு மேலாக கால்கள் புதைய புதைய முதுகெழும் புகள் மூச்சுப் பிடிக்க கரத்தை வண்டிலைத் தள்ளிக் கொண்டு போய் தினசரி வானவில் கிராமத்தின் துறைமுகத்தில் நிறுத்தி வைத்துக் கொண்டு, அங்கு படகுகளிலும், லொறிகளிலும் வருகின்ற பொருட் களை கடைகளுக்கு ஏற்றிச் சென்று இறக்குவதுதான் அவனது தொழில்! மாடுகள் பூட்டாத வண்டிலை இழுத்து தள்ளி மாடாக உழைத்து ஓடாகத் தேய்ந்தான் அபூபக்கர்.

அவனது பிதுராஜிதமான கரத்தை ஆழிப்பேரலைக்கு பலியானதன் பின்பு துறைமுகத்திற்கு வருகின்ற படகுகளிலிருக்கின்ற பொருட்களை தோளில் சுமந்து சென்று அங்கே தரித்து நிற்கின்ற லொறிகளில் ஏற்றுவதையே ஜீவனோபாயமாக்கிக் கொண்டாலும் அவனுக்கு வருவாய் கம்மிதான்.

சுனாமிப் பேரலை தாக்கியபோது அநேக மக்கள் தமது வாழ்விடங்களை இழந்து அகதிமுகாமிற்கு ஓடிப்போனார்கள். அதில் ஒரு சில குடும்பங்கள் அந்த அகதிமுகாம் வாழ்க்கையை வெறுத்து 'வாறது வரட்டும்' என்ற திடசங்கற்பத்தோடு சேனைக் காட்டிலுள்ள அப்துல் சமது ஹாஜியாருடைய இரண்டரை ஏக்கர் தென்னந் தோப்புக்குள் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஏறக்குறைய இருபது தற்காலிக கூடாரங்களை அமைத்துக் கொண்டனர். அவற்றில் ஒன்றுதான் அபூபக்கருடையது.

கருநீலமாகப் பரந்து கிடக்கும் வங்காள விரிகுடாவை எதிரே பார்த்தவாறு வானவில் கிராமம் இருக்கின்றது. இக்கிராமத்து மக்கள் சுனாமியால் பாதிக்கப்பட்டதைக் கேள்வியுற்றதும் இனவிரிசலினால்

முரண்பட்டுக் கிடந்த அயற்கிராமத்து தமிழ் வாலிபர்கள் விரைந்து வந்து முஸ்லிம் இளைஞர்களோடு இணைந்து நிவாரணப் பொருட்க ளைப் பங்கிட்டும், காயப்பட்ட, இறந்து போன உடலங்களை ஆஸ்பத் திரிக்கு எடுத்துச் சென்று தமது நேசக்கரத்தை நீட்டினார்கள்.

இயற்கை அனர்த்தத்தினால் சேதமடைந்த அனைவருக்கும் நிவாரணம் வழங்குவதாக அரசாங்கம் அறிவித்தது. பாதிப்புக்குள்ளான மக்கள் எல்லோரும் கிராமசேவகர் யாசீனிடம் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்காக முண்டியடித்துக் கொண்டு ஓடினார்கள்.

தனது அலுவலகத்தை நோக்கி படையெடுத்து வந்த மக்களைக் கண்டதும் கிராம சேவகருக்கு உள்ளூற மகிழ்ச்சி தாங்க முடியவில்லை.

'இதோட அரையும் குறையுமா கெடக்கிற வீட்ட முடிச்சுப் போடலாம். பொடியனையும் சவூதிக்கு அனுப்பிடலாம்.' என்று எண்ணிக் கொண்டு மனதுக்குள் பட்ஜெட் போட்டார்.

அபூபக்கர், பள்ளிவாயல் நிருவாகத்தினால் வழங்கப்பட்ட சுனாமி சேத விபரப்படிவத்தினை நிரப்பி பள்ளிவாயல் தலைவர் அமீன் மாஸ்டரிடம் கையொப்பத்தையும் சாட்சியாகப் பெற்றுக் கொண்டு கிராம சேவகரிடம் விரைந்து சென்றார்.

''மீனவர்கள் மட்டும்தான் பதிவு செய்யப்படுவர்'' என்ற கிராம சேவகரின் அறிவிப்பைக் கேட்டு அபூபக்கர் விக்கித்துப் போனான். இவன் பிறப்பால் விவசாயி திருமணம் செய்து வாழ்ந்து வருவதெல்லாம் கடலும் மகாவலி கங்கையும் கலக்கின்ற சங்கமத்திட்டான வானவில் கிராமம். உள்நாட்டுக் கலவரத்தினால் விவசாயத்தினை ஒழுங்காகச் செய்யமுடியாது போனதினால்தான் கரத்தை வண்டிலை இழுத்து பிழைக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டான்.

''ஐயா என்னையும் பதிங்க'' என்று கூறி தனது விண்ணப்பத் தினை நீட்டினான். விண்ணப்பத்தினை மேலோட்டமாக பார்வையிட்ட கிராமசேவையாளர் யாசீன், ''மீன் பிடித்தொழில் செய்ற ஆக்களை மட்டும்தான் பதிய முடியும். நீ விவசாயி உன்னைப் பதிய முடியாது போ'' என்று கூறி அவனது விண்ணப்பத்தினை நிராகரித்தார்.

''நிவாரண முத்திரக்காக தொழிலைப் பிரிக்கிறாங்க இன்னங் கொஞ்ச நாள் சென்றா ஆக்களையும் பிரிப்பாங்க ம்ம்?'' என்று மனதுக்குள் அபூபக்கர் அங்கலாய்த்துக் கொண்டான்.

''ஐயா, நான் வெள்ளாமத்தொழில உட்டு பத்து வருசத்துக்கு மேலாகுது கடக்கரையிலதான் குடியிருக்கன். நான் பொழச்சித்திண்ட கரத்தைய சுனாமி கொண்டு போயிட்டுது. என்னயும் பதிங்க''

''உனக்குச் சொன்னா வெளங்குதில்லியா மீன் பிடித்தொழில் செஞ்சா மட்டுந்தான் நிவாரண முத்திர''

''நான் ஏழ. எண்ட கொழந்த குட்டியெல்லாம் கஷ்டப்படுவுது'' என்று கூறி மன்றாடினான்.

''இப்ப ஒன்னும் பண்ண முடியாது. மிச்ச முத்திர இருந்தாப் பாப்போம் நாளைக்கு வா'' என்று கிராம சேவகர் யாசீன் கூறிய வார்த்தை அவனுக்குத் தேனாக இனித்தது.

வெளியூர்களிலிருந்து மனிதாபிமான அடிப்படையில் வழங்கப் பட்ட நிவாரணங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஒழுங்காகப் பங்கிடப் படவில்லை என்று அகதி முகாமிலிருந்த மக்கள் போர்க்கொடி உயர்த்திக் கொண்டிருந்தனர்.

நாட்கள் நகர்ந்தன. அபூபக்கரின் முயற்சி நிறைவேறவில்லை. யார் யாருக்கெல்லாமோ சுனாமி நிவாரண முத்திரை கிடைத்தது. பல நாட்களாக கிராமசேவகருடைய காரியாலயத்தை தரிசித்தும் அவன் கண்ட பலன் ஒன்றுமில்லை.

குடிசை வாசலுக்கு முன்னால் குடையாகக் கவிந்திருந்த தென்னை மர முட்டியில் கால்களை முடக்கி கைகளால் கட்டிக் கொண்டு, குந்திக் கொண்டு எதையோ சிந்தித்த வண்ணம் குச்சியால் நிலத்தைக் கீறிக்கொண்டிருந்தான் அபூபக்கர்.

தென்னங்கீற்றுக்கள் காற்றுக்குச் சரசரத்தன. அருகில் அடர்ந்து போய்க் கிடக்கும் தேன்தூக்கி பற்றைகளிலிருந்து சீல் வண்டுகள் கர்ண கடூரமாக ரீங்காரமிட்டுக் கொண்டிருந்தன. இருள் சூழ்ந்து வெகு நேரமாகியும் அவன் குடிசையினுள் நுழையாமல் இருந்தான்.

``என்னங்க இருட்டாயிட்டு உள்ளுக்கு வாங்க'' என்றழைத்தாள் அவன் மனைவி சரீனா.

``வந்துதான் என்ன செய்றது?'' என்று அலுத்துக் கொண்டு முக்கி முனகி எழுந்து குடிசையினுள் நுழைந்த அபூபக்கரிடம்,

``விதானையாரக் கண்டிங்கலா?''

``அவனக் கண்டுதான் என்னசெய்ற புழுக்கப்பயல் அவனுக்கு செய்றன் வேல பார்''

``அரசாங்க உத்தியோகத்துல இருக்கிறவங்களுக்கு நாலுபேர் ஒதவியா இருப்பாங்க. நாம ஏழைகள் நமக்கெதிராக எதையும் செய்துட்டு தப்பிருவாங்க நாம கவனமா இரிக்கனும்''

``அப்ப என்னதான் செய்யச் சொல்றாய்? இந்த முத்திரக்காக நாசமாப்போவாண்ட காரியாலயத்துற்கு ஏறி எறங்கி எண்ட காலும் தேஞ்சி போச்சி''

``கொள்ளையில போவான்களுக்கு நாம படுற பாடு வெளங்குதில்லையே. நீங்க தொரையடிக்கு போகாட்டி லொறிக்காரங்க ஏசப் போறாங்க''

``லொறில வாற சாமாங்கள எறக்கி எறக்கி எண்ட முதுகெல்லாம் புண்ணாப் போச்சுது. இடுப்பெல்லாம் கடுக்குது சரினா அவங்களுக்கும் நம்மட நெலம வெளங்குதில்லியே. ஒரு அம்பது ரூபா கூட கேட்டா ஏசுறாங்க.''

``நம்மலோட கெடந்து இந்த மூனு சின்னஞ்சிறுசுகளும் கஸ்டப்படுறத நெனைக்ககொல்ல வயித்தப் பிச்சி எறியிது.''

``ஒழுங்காத் தொழில் செஞ்சா ஒரு நேரமில்லாட்டிலும் ஒரு நேரமாவது திங்கலாம்.''

``நேத்து ரெண்டுபேர் முத்திரை எடுத்திருக்காங்கலாமே நீங்களும் நாளைக்குப் போய் முத்திரயக் கேட்டுப்பாருங்க அதுக்காக வேண்டி சண்ட கிண்ட புடுச்சிக்காதீங்க''

''நான் என்ன சண்டக்காரனா ..? முத்திரையக் கேக்கத்தானே போறன். நமக்கெண்டு வந்ததத் தாறதானே. அப்படி எண்டால் நான் விதான கிட்டபோகல..''

''நான் போக வேணாம் எண்டு சொல்லல. எப்படியும் கதைச்சு முத்திரையக் கழட்டப்பாருங்க அந்தாள் பொல்லாதவன்.''

''அப்ப எனக்கு கதைக்கத் தெரியாதுண்டு சொல்றாய்?''

''உங்களுக்கு வரவர கோவம் கூடுது. வயசு போயும் முறுக்குக் குறையல''

''என்ன எத்தன தரம் அலக்கழிச்சுப் போட்டான். கைக்குள ஏதாச்சும் வெச்சாத்தானாம் விதானையார் முத்திரயக் கொடுப்பாராம் எண்டு பிச்சக்குட்டி சொன்னான்.''

''உண்மையாப் பாதிக்கப்பட்டவங்களுக்கு நிவாரண முத்திர கெடைக்கல யாருக்கிட்டபோய்ச் சொல்லுறது''

''ஆள் பாத்து கட்சி பாத்து நிவாரணங் குடுக்கிறாங்களாமே..? நம்மட்ட கரத்தை இருந்திருந்தா இவண்ட காலடிக்குப் போகத் தேவையில்ல. சனங்கள் படுற கஸ்டத்தப்பாத்துட்டு இந்த நேரத்துல கேக்குறானே இவன் என்ன மனுஸன்?''

''அரசாங்கம் சம்பளம் ஒழுங்காத்தானே குடுக்குது. வீடு, கடை, தோட்டமெண்டு வசதியான வாழ்க்கை வாழ்றாங்க அதுக்குள்ளயும்.?''

''திண்டவனுக்குத்தான் கெலி''

''தேன் தொட்டவன் நக்காம உடுவானா?''

''ஆர்டயாவது கடன் பட்டுக் குடுத்திட்டு முத்திரய எடுக்கப் பாருங்க''

''சும்மா கெட எனக்கு கடன்பட ஏலாது, கைக்குள மயில் தாள் வெய்க்கவும் ஏலாது. எல்லாம் இந்த நாசமாப் போன சுனாமியால வந்த வெனதானே'' என்று நொந்து கொண்டு ஒரு தீர்மானத்தோடு

நித்திரைக்குப் போனான் அபூபக்கர். படுக்கையில் புரண்டு, புரண்டு படுத்தும் தூக்கம் கலைந்து தவித்தான்.

அபூபக்கர் மனதில் ஒரே கலக்கம் எப்படியெல்லாம் வாழ்ந்த வர்கள். சுனாமியால் எல்லாவற்றையும் இழந்து நடைப்பிணமாக மாறி விட்டார்கள்.

ஊரெல்லாம் உறங்கிக் கிடக்கும் இரவுப் பொழுது வெகு தூரத்தில் வங்காள விரிகுடாக்கடலின் ஓசை கேட்டுக் கொண்டிருந்தது. குடிசையை விட்டு வெளியே வந்த அபூபக்கர் வானத்தை அன்னாந்து பார்த்தான்.கண் சிமிட்டும் நட்சத்திரங்களுக்கிடையே ஒளி மங்கிப் போயிருந்த நிலவை வெறித்துப் பார்த்து தூக்கத்தை தொலைத்து விட்டு இரவின் அமைதியோடு போனான்.

தூரத்தே தற்காலிகக் கொட்டில்களுக்குள் இருந்த அகல் விளக்குகள் இருளை குத்து குத்தென்று குத்தின. மீண்டும் படுக்கையில் சாய்ந்த அபூபக்கர் சற்று நேரத்தில் உறக்கத்தில் ஆழ்ந்தான்.

கிராமசேவகர் யாசீன் படலையைத் தட்டி அபூபக்கரைக் கூப்பிடுகிறார். அபூபக்கர் வாரிச்சுருட்டிக் கொண்டு எழுந்து வர பின்னால் சரீனாவும் அன்பும் ஆதரவும் பொங்க 'இந்தா ஒண்ட நிவாரண முத்திர' என்று கொடுக்க இரண்டு கைகளினாலும் வாங்கி மகிழ்ச்சியில் திணறி 'சரீனா இஞ்ச பாத்தியா நம்மட காலடிக்கு வந்து சரீனா அபூபக்கரை உசுப்பினாள் ''யார் வந்த.? என்ன தந்த? என்ன வாய் பிதட்டுறீங்களா?'' என்றாள்

''அடச் சே கண்டது கனவா?'' என்று கேட்டு அபூபக்கர் கனவின் பிரமையிலிருந்து விடுபட்டபோது சேனைக்காட்டுப் பள்ளிவாயலில் சுபஹு பாங்கோசை கேட்டது.

பனிக் கூதலில் குடிசைக்குள் சுருண்டு கிடந்த அபூபக்கர் போர்வையை விலக்கி துண்டை நீளமாக மடித்து தலையில் கட்டிக் கொண்டு உறக்கத்தில் கிடந்த சரீனாவை எழுப்பி காதோடு காதாக எதையோ பேசினான். மெல்ல நகர்ந்து குடிசையை விட்டு வெளியேறி செம்மண் ஒழுங்கையூடாக நடந்து இறால் ஓடைப் பாலத்தைக் கடந்து கடற்கரைக்குச் சென்ற அபூபக்கரின் மன இருளை யார் போக்கு வார்கள்?

தந்தையிடம் மனக் கசப்புற்றிருந்த புதுமைப்பித்தன் பாடினாராம்.

செல்லும் வழி இருட்டு
செல்லும் இடம் இருட்டு
சிந்தை தனிலும் தனியிருட்டு

சுனாமியால் அடிபட்டுக் கரையில் பிளந்து போய் கவிழ்ந்து கிடக்கும் தோணியின் முதுகின் மேல் ஏறி நின்று எதிரே இருந்த வங்காள விரிகுடாக் கடலை வெறித்துப் பார்த்தான். கலங்கரை விளக்கத்திலிருந்து வீசும் ஒளி பட்டு கடலுக்குள் குத்திட்டு நிற்கும் மலைக் குன்றுகள் பளிச் சென்றிருந்தன. காற்று பம்மிப் போய், கடல் எந்தவிதமான சலனமுமின்றிக் காட்சியளித்தது. கடலைப் பார்த்த அபூபக்கருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

''மக்களையெல்லாம் கொன்டுட்டு உறவுகளையெல்லாம் பிரிச்சிட்டு அவங்கட சொத்தையெல்லாம் அழிச்சுப் போட்டு ஒண்டும் தெரியாத அச்சாப் புள்ள போல இருக்கிறாய்'' என்று நினைவலைகளி லிருந்து மீட்டுப் பார்த்து விட்டு, அபூபக்கர் ஜாவா, சுமத்ரா போன்ற தீவிலிருந்து சுனாமியால் கொண்டு வரப்பட்டு கரையில் வீசப்பட்டுக் கிடந்த கம்பு கட்டை, தேங்காய், கிழிஞ்சல்களுக்கு மேலாக நடந்து சென்று துறைமுகத்தை அடைந்தான்.

துறைமுகத்தின் இருமருங்கிலும் லொறிகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. காசிம் நாநாவுடைய லொறியிலிருந்த பொருட் களை அவசர அவசரமாக இறக்கி விட்டு அதற்கான கூலியையும் பெற்றுக் கொண்டு ஒரு தீர்க்கமான முடிவோடு மீண்டும் கிராமசேவகர் காரியாலயத்தை நோக்கி நடந்தான் அபூபக்கர்.

அவனது நடையில் ஒரு உத்வேகமும் துடிப்பும் இருந்தது. மனைவி சரீனா கூறிய புத்திமதிகளை ஒரு தரம் அசை போட்டுப் பார்த்தான்.

''இண்டைக்கு எப்படியும் முத்திர எடுக்கவேணும். எல்லாரும் மாதா மாதம் நிவாரண முத்திரையால சொள சொளையாக ஐயாயிரம் ரூபா காசும், சமான்களும் எடுக்கிறாங்க. எனக்கு மட்டும் அது எட்டாக் கனியா?' யா அல்லா விதானைக்கி என் மேல எரக்கத்த குடு. எண்ட கரத்தையும் சுனாமிக்குப் போனதுதானே நானும் கஸ்டப்பட்டவன் தானே. எனக்கி இண்டைக்கி எப்படியும் முத்திர கெடைக்கனும் முத்திர கெடைச்சா பெரிய பள்ளிவயால் உண்டியலுக்குள்ள பத்து ரூபா

போடுவன்.'' என்று மனதுக்குள் பிரார்த்தனை செய்த வண்ணம் நடந்து சென்றான்.

கிராம சேவகருடைய அலுவலகத்திற்குப் முன்னால் நின்ற புளிய மர நிழலில் மக்கள் குழுமி நின்றனர். ஒவ்வொருவரும் கிராம சேவகர் யாசீனைக் கவனிக்கவேண்டிய விதத்தில் கவனித்து தமக்குரிய நிவாரண முத்திரையைப் பெற்றனர்.

அபூபக்கர் மெதுவாகத் தலையை நீட்டினான்.

'வந்துட்டானாக்கும்' என்று ஏதோ பிசியாக இருப்பதைப் போல பேனாவை எடுத்து ஏதேதோ எழுதினார் கிராமசேவகர். அவரின் மேசைக்கருகில் சென்றான். கையப்பார்த்துப் பழக்கப்பட்டுப்போன அவர் அபூபக்கரின் கையை ஆர்வத்துடன் பார்த்தார். அது வெறுங்கை! உதட்டைப் பிதுக்கிக் கொண்டு முன்னால் கிடந்த பெரிய புத்தகத்தை பக்கம் பக்கமாக புரட்டினார். அபூபக்கர் போவதாக இல்லை.

''எங்கே வந்தாய்.?''

''நீங்கதானே ஐயா வரச் சொன்னிங்க மிஞ்சின முத்திர இருந்தா வா பார்ப்பொமெண்டு அதுதான் வந்தன்''

''மிஞ்சின முத்திரயா ..?...ம்ம் பாப்போம்.?'' என்று கூறி மேசை லாச்சியினுள் கையை விட்டுத் துலாவினார்.

''அப்பாடா நமக்கு இண்டைக்கி முத்திர கெடைக்கப்போவுது. நான் நேத்து ராத்திரி கண்ட கனவ மெய்ப்படப் போவது?'' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டான். அபூபக்கர். மேசை லாச்சியின் அடியில் கிடந்த ''ஆ! இந்தா இருக்கு'' என்று தன்து மோட்டார் சைக்கிளின் திறப்பை கரப்பான் பூச்சியைத் தூக்குவது போலத் தூக்கி அவனின் முகத்துக்கு நேராக ஆட்டிக் காட்டினார்.

அபூபக்கர் பேயறைந்தவன் போலானான்.

கதிரையைப் பின்னால் தள்ளிவிட்டு, திடீரென எழுந்து அலுவலகத்திற்கு முன்னால் நின்ற தனது மோட்டார் சைக்கிளை நோக்கி நடந்தார், கிராமசேவகர் யாஷின். கதிரையைப் போலவே

தன்னையும் தனது வேண்டுகோளையும் உதறி விட்டுப் போகிறார் என்று அறிந்தும், நப்பாசையினால் கிராம சேவகருக்குப் பின்னால் ஓடினான் அபூபக்கர்!.

ஒரு கதாநாயகனின் தோரணையில் தனது கனத்த சரீரத்தை மோட்டார் சைக்கிளில் தூக்கிப் போட்டார். இந்த உதை அபூபக்கருக்கு தான் என்பது போல ஒரு உதை உதைத்து இரண்டு முறுக்கு முறுக்கி மோட்டார் சைக்கிளுக்கு உயிர் கொடுத்தார். அப்படியே திருப்பி அவனைப் பார்த்து ஒரு விசமப் புன்னகையை உதிர்த்தார்.

அபூபக்கரின் கண்கள் இரண்டும் சிவந்து பனித்தன.
''ஐயா, மூனு புள்ளையொலும்' பொஞ்சாதியும் ஐயா''
பெஸ்ட் கியரைப் போட்டார்.
''ஐயா ஐயா சரியான கஸ்டம் அல்லாவுக்காக''
''அபூபக்கர்''
''ஐயா''

''இன்னனொருதரம் சுனாமி வந்தா நிச்சியம் உனக்கு நிவாரண முத்திர தருவன் சரியா..'' என்று கூறி இறுக்கிய கிளட்ச்சை விட்டார் பறந்தார்.கிராமசேவகர்.

'இன்னொரு தரம் சுனாமி வந்தா நிச்சியமா அது எங்களத் தாக்காது' என்று மனதுக்குள் எண்ணிக் கொண்டு கிராமசேவகர் சென்ற திசையைப் பார்த்து பாதாதிகேசம் வரை விறைத்துப்போய் நின்றான் அபூபக்கர் !.

(யாவும் கற்பனை)

**கலாச்சார அலுவல்கள் தேசிய மரபுரிமைகள் அமைச்சு**
**அகில இலங்கை ரீதியாக அரச ஊழியர்களுக்கிடையில்**
**நடாத்திய சிறுகதைப் போட்டியில்**
**பாராட்டுப் பெற்ற கதை - 2006**

# நிழலைத் தேடி.....

வெப்பமும் வெதுவெதுப்பும் கலந்த பங்குனி மாதத்தில் காற்று இறுக்கமாகி அலையெற்றாது நிச்சலனமாகக் கிடந்த குடாக்கடலின் மேற்கு செவ்வானத்தில் ஒளி படர்ந்து கலந்து வர்ணஜால வித்தை செய்து கொண்டிருந்தது.



கன்னா மரங்களும், தில்லைச் செடிகளும் அடர்ந்து கிடந்த அந்தக் கரைச்சை வெளியில் மாலைச் செவ்வானத்தில் கிரகணங்கள் தகதகத்தன. ஆனாலும் அந்த தகதகப்பில் ஒரு சோகமே மிஞ்சி நின்றது. பகல் முழுவதும் காடுகளிலும், மேடுகளிலும் மேய்ந்து விட்டு

இருப்பிடங்களை நோக்கித் திரும்பிக் கொண்டிருந்த கால்நடைகளின் கண்களிலும் கூட அந்த வேதனை அப்பிக் கிடந்தது.

மேய்ச்சல் முடிந்து திரும்பும் கால்நடைகளைப் பட்டியில் அடைக்கவேண்டும், நுளம்புக் கடியிலிருந்து ஆடுகளைப் பாதுகாக்க புகை போட வேண்டும், நெருப்பு மூட்டவேண்டும் என்று எண்ணியவாறு கரைச்சைவெளி தொடங்கும் மலை மேட்டில் அமைந்திருந்த தன்குடிசையில் இருந்த தங்கராசா எழுந்து கால்நடைகளை அடைத்து வைத்திருக்கும் பட்டிப் பக்கமாகப் போனார்.

ஏழு வருடங்களுக்கு முன்பிருந்த தன் தாவளத்தை மனதுள் ஒரு தடவை நினைத்துக் கொண்டார். உப்புக் கரைச்சை வெளி முழு வதையும் அடங்க வைத்துக் கொண்டு திரண்டு, திரண்டு ஓடி வரும் நூற்றுக்கணக்கான உருப்படிகள்! அந்தச் செழுமை ஏற்பட இன்னும் எத்தனை காலம் ஏற்படுமோ...?

உதடுகளை மூடிக்கொள்ளாதபடி முன்னோக்கிய மேல் பல் வரிசை கன்னங்கரிய, அடர்ந்த இலேசாக ஒதுக்கி விடப்பட்ட மீசையும், நரைத்த தாடியும் சிலிர்த்து நிற்கும் தலை முடியும் கொண்டவரான தங்கராசா தன்பூர்வீகத்தை ஒரு முறை நினைத்துக் கொண்டார்!

ஆங்கிலேயர் கண்டியை பிடித்த பின்னர் மலை நாட்டிலே கோப்பித்தோட்டம் செய்ய முயன்றனர். அதிலே தோல்வியடைந்து தேயிலைத் தோட்டச் செய்கைக்குத் திரும்பினர். மலை நாட்டு அரச காணிகளில் தேயிலைச் செய்கை மேற்கொண்ட பிரிட்டிஷ்க்காரனான ஜேம்ஸ் சித்திரை மாதத்தில் உல்லாச பயணியாக உப்பாற்றுப் பக்கம் வந்தான்.

எரிக்கும் வெய்யிலை உள்வாங்கி பங்குனி மாதப் பகல் மினுமினுங்கியது. விரிந்து பரந்து அமைதியாக எதிரே குளம்போல் காட்சியளிக்கும் கொட்டியாரக் குடாக்கடலில் படகுப்பயணம் செய்யவும் மீன் பிடித்துக் களிப்பதற்கும் தோதானதெனக் கண்டு கொண்டான்.

அவனது ரசிக உணர்வு அப்பிரதேசத்தில் தனக்கொரு விடுமுறை விடுதியை அமைக்கவேண்டும் என எண்ணிக் கொண்டான். அவன் திட்டமிட்டு உப்பாற்றுத்துறைக்குத் தெற்காக மகாவலி கங்கைத்துறைக்கு இடையிலான கடலோரக்காணிகளையெல்லாம்

தனது அரசாங்கத்திடமிருந்து பெற்றுக் கொண்டான். அங்கே காட்டை வெட்டி தென்னந்தோட்டமொன்றை உண்டாக்கினான். தன்தோட்டத் திலே தனக்கென்றொரு உல்லாச விடுதியும் கட்டிக் கொண்டான்.

தென்னந்தோட்டத்தை உண்டாக்குவதற்காக உப்பாற்றுக் கிராம வாசிகளும், இறால்குழி, கண்டலடியூற்று, ஈச்சந்தீவு கிராமவாசி களும் வெள்ளையனால் வேலை கொள்ளப்பட்டனர். அவர்கள் காட்டை வெட்டி நிலத்தைப் பண்படுத்தவும் மூதூர் வத்தைகள் அக்கரைப் பற்றுக்குச் சென்று நெற்றுத் தேங்காய்களை ஏற்றி வந்தன. பல்வேறு தொழிலாளர் கள் சேர்ந்து ஐந்து ஆண்டுகளில் புதிதாக ஒரு தென்னந்தோட்டத் தையே உருவாக்கிவிட்டனர். தென்னை மரங்களிடையே நடப்பட்ட மரமுந்திரிகை மரங்களும் பூக்கத் தொடங்கின !.

இனிமேலும் தென்னம்பிள்ளைகளுக்குத் தண்ணீர் ஊற்ற அதிகமான வேலையாட்கள் தேவைப்படாததால் அவர்களில் பலரை வேலையிலிருந்து நீக்கி விட்டு கணிசமான தொகையை அவர்களுக்கு நட்டஈடாகவும் கொடுத்தான்.

அந்த நட்ட ஈட்டைப் பெற்றுக் கொண்டவர்களில் ஒருவர்தான் தங்கராசா. இன்னும் சிலருக்கு தத்தம் பூர்வீகக் கிராமங்களை முற்றாக மறந்தவர்களாய் துரைத்தோட்டத்தின் எல்லையோரமாக பாம்புபோன தடம்போல காட்சியளிக்கும் ஒற்றையடிப்பாதை வழியாக மேற்கு நோக்கிச் சென்று மணல்மேடுகளின் வழியாக அந்தக் கரைச்சையை அடைந்தனர்.

காரையும், சூரையும் முற்புதர்களாகக் கிடந்த பிராந்தியத்திற்கு 'காரைவெட்டுவான்' என்று பெயரிட்டுக் கொண்டு அங்கே வாழத் தொடங்கினர். அந்தக் கரைச்சை வெளியைத் தாண்டினால் மகாவலி கங்கையின் கிளை நதி ஒன்று ஐந்தடி அகலத்திற்கு சின்னஞ்சிறு வாய்க்காலைப் போல வளைந்து நெலிந்து ஓடிக் கொண்டிருந்தது.

அந்த ஆற்றங்கரையிலே காய்கறித் தோட்டம் செய்தனர், குரக்கன், சோளம் போன்ற தானியங்களையும் விதைத்தார்கள். அவர்கள் தோட்டம் போட்ட 'நானாபிள்ளைமடு' என்ற கங்கைக் கிளைக்கு அப்பால் ஒரே காடு. காட்டினூடாகச் சென்றால் 'கண்டல்காடு' மானாவாரி வயல்கள் அதற்கு அப்பாலும் மகாவலி கங்கை ஓடிக் கொண்டிருந்தது.

வேண்டியளவு நிலம் இருந்ததால் அங்கு குடியேறிய மக்களிடம் நிலத்திற்குப் போட்டியில்லை. தத்தம் காணிகளுக்கு எல்லை வகுக்கவேண்டிய தேவையும் ஏற்படவில்லை.

கால்மாக்ஸூம் அவனது தோழர்களும் 'தோழர்' என்ற வார்த்தை யைப் பிரயோகிக்கும் முன்னரே தம்பலகாமப் பற்றைச் சேர்ந்த கிராமவா சிகள் தோழர் என்ற சொல்லைப் பிரயோகித்தனர்.

அந்தத் தோழே என்ற வார்த்தைக்குள் எல்லா ஐக்கியமும் ஏற்பட்டு விட்டது! இனமத வெறி உணர்வுகள் அந்தத் தோழே என்ற கட்டுப்பாட்டையும் தாண்டிச் செல்ல முடியாதவையாக இருந்தன. தாம் வாழும் இந்த நாட்டில் என்னென்ன மாற்றங்கள் நடைபெறுகின்றன என்பதைப் பற்றிக் கூட அவர்கள் கிஞ்சித்தும் கவலைப்படவில்லை.

'உணவுக்காக நிலம் பயிரிடுகின்றேன் என்ற அரசபிரானின் அதிகாரம் என்னை ஏதும் செய்யமுடியாது' என்ற மத்திய கால சீனக் குடியானவனைப்போல அவர்கள் சுதந்திரமாக வாழ்ந்து கொண்டிருந் தார்கள்.

ஆனால் ஆயுதம் தாங்கிய விடுதலைப் போராளிகள் பலர் அந்தப் பிராந்தியத்தில் நடமாடினார்கள். காட்டு வழியே நடந்து. மகாவலி நதியைக் கடந்து தெற்காகவும் வடக்காகவும் போக்குவரத்துச் செய்தார்கள். அப்போராளிகளைப் பற்றி காரைவெட்டுவான் வாசிகள் அலட்டிக் கொள்ளவில்லை.

மூதூர்-கட்டைபறிச்சானில் 1985 ஆம் ஆண்டின் வைகாசி மாதத்தில் முதலாவது கண்ணிவெடி முழங்கியது. அதைத் தொடர்ந்து கொட்டியாபுரப்பற்று எல்லைக்கிராமங்களில் தேடுதல் வேட்டைகள், கொலைகள், கொள்ளைகள், தீ வைப்புகள், கைதுகள் என்பன இடம் பெற்றன. மக்கள் சொந்த மண்ணைவிட்டு அகதிகளாக புலம் பெயர்ந்த னர். நாடே திறந்த சிறைச்சாலையாகியது. மனிதனுடைய வாழ்வும், சிந்தனையும், நாகரிகமும் காலத்திற்குக் காலம் மாற்றம் அடைந்து வருவதன் காரணமாக பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன. இதன் மூலம் மனிதன் தேடிக்கொண்ட வாழ்வுதான் அகதி வாழ்வு.

எந்தவொரு உயிரினமும் ஏற்றுக் கொள்ளாத அநாகரீக வாழ்க்கை அகதி வாழ்க்கை. மனிதனுக்கு மனிதன் பயந்து உறைவிட மும் உணவும்' தேடி ஓடி ஒதுங்கி இறுதியில் மனிதனிடமே சரணடை

கின்ற அவல வாழ்க்கை. இந்த அவல வாழ்க்கையை அனுபவித்த வனுக்குத்தான் இதன் உண்மையான தாற்பரியம் தெரியும்.

இயற்கை அன்னையின் சீற்றத்தினால் ஏற்படுகின்ற அகதி வாழ்க்கைக்கு ஒருசில நாட்களில் தீர்வு கண்டு விடலாம். ஆனால் உள்நாட்டு யுத்தத்தினாலும், வன்செயல்களினாலும் ஏற்படுகின்ற நிகழ்வானது கொடூரமானது. அது வாயால் கூறி தணித்துக் கொள்ள முடியாததாகும்.

அமைதியாகக் கிடந்த உப்பாற்றுப் பிரதேசத்திலும் ஆலங்கேணி யிலும் அதன் தாக்கம் விரைவாகவே ஏற்பட்டது. கங்கைக் கரையில் இருப்பதாகச் சொல்லப்படும் போராளிகளின் தளங்கள் விமானக் குண்டு வீச்சால் அழிக்கப்பட்டன என்று இலங்கை வனொலிச் செய்தி கூறியது.

கொட்டியாரக்குடாவிலிருந்து கடற்படை யுத்தக்கப்பல்கள் உப்பாற்றின் உள் பிரதேசத்தை நோக்கி சரமாரியாக குண்டுகளைத் தீர்த்தன. அதைத் தொடர்ந்து ஆயிரக்கணக்கான துருப்புக்கள் தரை யிரங்கி இறால்குழி, உப்பாற்றுப் பிரதேசக் காடுகளிலெல்லாம் தேடுதல் நடத்தின. உப்பாறு காரைவெட்டுவானைச் சேர்ந்தவர்களும் அகதிக ளாகி தங்கள் கால்நடைகளோடு புலம் பெயர்ந்தனர்.

புலம் பெயர்ந்த உப்பாற்று மக்கள் பலவந்தமாக சீனக்குடா விமானப்படைத் தளத்திற்கு அருகில் அமைந்திருந்த கிளப்பன்பேக்கில் அகதிகளாகத் தஞ்சம் புகுந்தனர்.

பரந்த வெளியில் சுதந்திரமாக காலையும் கையையும் நீட்டி படுத்திருந்த நிலை மாறி அடைக்கப்பட்ட கூண்டினுள்ளே பத்து சதுரடிப் பரப்புக்குள் ஒரு குடும்பம் முடங்கிக் கிடக்கவேண்டிய அவலம் ! 'ஈஸ்வரா, மீண்டும் ஒரு முறை எங்களை அகதி முகாமுக்கு அனுப்பாதிருப்பாயா' என்று தங்கராசா வேண்டிக் கொண்டார்.

இளமையின் கனவுகளை சுட்டுப் பொசுக்கி நாற்பது வயதுக்குள்ளேயே கிழடு தட்டி, தலை பஞ்சாகி தொணதொணத்துவிட்ட குரலில் தங்கராசாவின் மனைவி பார்வதி, தன் கணவனின் பிரார்த்தனையின் முணுமுணுப்பை அறிந்து கொண்டதும்

``என்னங்க உங்கட கவலையை நினைக்ககொல்ல எனக்கு அதவிட பெரிய கவலையாக இருக்கு''

``நீ எதுக்கு இப்ப கவலப்படுரா ?''

``நாம மீளக் குடியேறுவதப் பத்தித்தான்''

``அதுதான் நான் கடவுளுக்கிட்ட வேண்டிக்கிட்டிருக்கேன்''

``என்னங்க நாம காரைவெட்டுவானுக்கு போகாம இங்கேயே பேசாம இருந்திடுவோம்''

``எனக்கும் அப்படித்தான் மனசுல தோணுது''

``இந்த அகதி முகாமுல நம்மட காலம் முடிஞ்சிடும் போல இருக்குது''

``அதாலதான் நம்ம கிராமத்துக்குப் போவோம். செத்தாலும் நாம பொறந்த மண்ணுல சாவோம்''

``அங்க நாம தொழில் செய்யிறத்துக்கு எந்த வசதியுமில்ல''

``இந்த அகதிச்சிறச்சாலைக்குள்ள கிடந்து எத்தன நாளைக்கு கஷ்டப்படுறது? போனாத்தான் ஒரு முடிவு வரும்''

``இஞ்சாருங்கோ இந்த அகதிமுகாம் வாழ்க்கையே எனக்குப் போதும் என்னால வரமுடியாது''

``வராட்டி இரு நான் போறன்''

``குடியேறி நிம்மதியா இருக்கப்போறமா? ஏதாவது ஒரு பிரச்சின வந்து நாம குடி எழும்பத்தான் போறோம்'' என்று பெருமூச்செறிந்து பார்வதி சொன்னபோது மௌனித்து நின்ற தங்கராசாவின் மனக் கண்ணில் யுத்தத்தின் கோரப்பிடியால் பத்து வருடங்களுக்கு முன்னர் இறந்துபோன தனது மகனை நினைத்தபோது அவரது கண்கள் பனித்தன.

''என்னங்க நான் இப்ப என்ன சொல்லிப் போட்டேன். ஏன் அழுறிங்க?''

உலகத்தின் எங்கோ ஒரு மூலையிலிருந்து அலை மோதி வரும் நாதவெள்ளம் முட்டிமோதுவது போன்ற உணர்வு மனதுக்குள்ளே நிறைந்து போய் அதற்கு மேலாக பென்னம்பெரிய பாரங்கல்லை வைத்து நெரித்து நசுக்குவது போன்ற வாழ்க்கைச் சுமை தங்கராசாவை அழுத்தியது.

''பார்வதி, நீ சொல்றதெல்லாம் எனக்கு நல்லா வெளங்குது. இருந்தும் நம்மட காணி பூமியெல்லாம் அழிஞ்சிட்டிருக்கிது. அங்க போனாத்தான் நீட்டி நிமிர்ந்து கெடக்கலாம்'' என்று தனது தீர்மானத் தினை தங்கராசா மனைவியிடம் கூறினார்.

ஐந்து ஆண்டு கால அகதி வாழ்க்கையின் பின் சென்ற ஆண்டு தான் தங்கராசா மீண்டும் காரைவெட்டுவானில் குடியேறினார். அவருக் குக் கொஞ்ச நாட்களாக மனசு எதையும் தாங்க மாட்டேன் என்கிறது. இவ்வளவும் அனுபவித்ததால் நெஞ்சுக்குத் திடமில்லை. பழைய நினைவுகள் எல்லாம் உள்ளத்தை உலுக்கி அவரை வெடவெடக்கச் செய்தன.

நம்பிக்கையோடு மீண்டும் தன் வாழ்க்கையை ஆரம்பித்தார். கால்நடைகள் பெருகின. இன்னும் அவை பெருகலாம்.

தங்கராசா தன் கால்நடைகளை பட்டியில் அடைத்துவிட்டு வெளியே வந்து தன் தம்பியை நினைத்து வெகுதூரத்திற்கு அப்பால் ஏக்கத்தோடு பார்த்துக் கொண்டு நின்றார்.

மூதூருக்குச் சென்ற அவர் தம்பி சுரேஷ்குமார் அப்போதுதான் வந்து கொண்டிருந்தான். அவன் நாலெழுத்துப் படித்தவன், உலக விவகாரங்கள் தெரிந்தவன்.

''ஏன்டாம்பி நல்லா பிந்திட்டா? ஊர் உலகம் கெட்டுக் கிடக்கக்கொல்ல நேரத்திற்கு வரப்படாதா?''

''ஓம் அண்ணே. ஆலமரத்தடிச்சந்தியில கொஞ்சம் சுணங்கிட் டேன்''

``வீட்டுச் சமான்கள் வாங்கினீயோ .......?''

``இல்ல. இல்ல எனக்குப் படிச்சித்தந்த பரீத் மாஸ்டரைக் கண்டு கதைக்கக்கொல்ல அவர் ஒரு புதுச் செய்தி சொன்னாரு''

``என்னடாம்பி செய்தி'..?''

``எல்லாம் நம்ம ஊரப்பத்திய கததான்''

``உப்பாத்தப் பத்தியா ? என்ன பேசுறாங்க.?''

``உப்பாத்திலுள்ள மக்களை ஊரை விட்டு எழுப்பப் போறாங்களாம்'' தம்பியின் செய்தி கேட்டு அதிர்ந்து போன தங்கராசா மீண்டும் ஆவேசத்துடன் கேட்டார்.

``என்ன சுரேஷ் சொல்லுறாய்''

``அண்ணே, நான் என்ட ஐ.சீ.ஆர்.சீ ஒப்பிஸில இருந்தன். அங்க வந்த ஜீயெஸ்ஸும் நம்மை ஊரை விட்டு வெளியேத்தப்போற செய்தியச் சொன்னார்''

``உண்மையாகவா, இன்னும் அந்த அகதி மனம் மாறல அதுக்குள்ளேயா'.?''

``நான் இந்த சங்கதியிலுள்ள உண்மைத் தன்மையை அறிய வேண்டும் என்பதற்காக ஜீயெஸ்ஸையும் கூட்டிக் கொண்டு மனித உரிமைகள் காப்பகம் போய் அவர்களைக் கண்டு கேட்டேன்.''

``அவர்கள் என்ன சொன்னாங்க?'' என்ற அவசரப்படுத்திக் கேட்டார் தங்கராசா.

``அப்படி ஒரு கதை போன கிழமை அடிபட்டதுதானாம், ஆனால் அதை இப்போது சட்டப்படி செய்ய முடியாதாம்''

``அப்படியா ? இப்ப எல்லாம் சட்டப்படியா நடக்குது?''

என்று பெருமூச்சு விட்டார் தங்கராசா. அவர் முன் துன்பத்திலே மறைந்து போன நாட்களின் மறந்து போன சம்பவங்கள் வந்து மனதில் வட்டமிட்டன.

கால்கள் இரண்டையும் மடக்கி முழங்காலின் மேலாக தலையை நீட்டிக் கொண்டு குடிசையின் சுவரில் சாய்ந்து கொண்டு நினைவின் ஆழத்திலே தொட்டோ உணர்ந்தோ கொள்ள முடியாது மூளையில் ஆழப்பதிந்து போனதை மீட்டிப் பார்த்தார் தங்கராசா.

அண்ணனுடைய கவலையைப் புரிந்து கொண்ட சுரேஷ்குமார்-

''என்ன இருந்தாலும் இப்ப உப்பாத்துல சண்டை நடக்கல. சண்டை நடக்ககொள்ள சனங்கள் புலம்பெயர்ரத யாராலும் தடுக்கலாது. ஆனால் சண்டை நடக்காத இடத்திலிருந்து அங்குள்ளவர்களைக் குடியெழுப்புவது சட்டத்திற்கு முரண். எழுப்புவதென்றால் முதலில் மாற்றுக்காணியும் குடியிருப்பாளர்களுக்கு குடியிருப்பு வசதிகளையும் செய்து தரவேண்டும். அதை செய்து கொடுத்த பிறகுதான் அவர்க ளைக் குடி எழுப்பலாம் என்பது சர்வதேசச் சட்டம் அந்த சட்டத்தின்படி இப்போது ஏதும் நடவாது என்கிறார்கள் மனித உரிமைகள் காப்பகத்தினர்.'' என்றான் சுரேஷ்குமார்.

''தம்பி நீ சொல்றதெல்லாம் சரிதான். ஆனால் இந்த உலகத்துல..?''

என்று கூறி அலுத்துக் கொண்ட தங்கராசா, மனத்திரையில் தான் அகதியாகி தலையில் மூட்டை முடிச்சுக்களோடு, தன் கால்நடை களை ஓட்டிக் கொண்டும் பார்வதி கூறிய அறிவுரைகளை மீட்டிப் பார்த்துக் கொண்டும் செல்வது நிழலாடியது.

சலியாத உழைப்பையும் விடா முயற்சியையும் பிறவிச் சொத்தாகக் கொண்ட தங்கராசா ஒரு கூலித் தொழிலாளி. சட்டம் படித்தவர் அல்ல. ஆனால் உலக நடைமுறை உண்மைகளின் கோரங் களை அனுபவித்தவர்.

(யாவும் கற்பனை)

(தினக்குரல் 06.04.2008)

இலங்கை இலக்கியப் பேரவையின்
மூதறிஞர் இரகசிகமணி கனக செந்திநாதன் கதா விருது
பெற்றது - 2008

## இந்நூலாசிரியர்.......



ஜனாப் ஏ.எஸ்.உபைத்துல்லா அவர்கள் மிகநேர்த்தியான. மனிதநேயமிக்க எழுத்தாளர். அவர் நல்லதொரு ஆசிரியர். அதிபராகக் கல்விப் பணியாற்றும் ஒரு பண்பாளன். அடித்தள மக்களைத் துடித்தெழ வைக்கும் எண்ணக்கருவைத் தன்னகத்தே கொண்டவர். நீண்ட காலமாக இவரை அறிவேன்.

இவர் எந்நேரமும் புத்தெழுச்சியுடன் மாணவர்களுக்குக் கற்பித்துக் கொண்டிருப்பதை அவதானித்துள்ளேன். பம்பரமாகச் சுழன்று மாணவர்களது கல்வி மேம்பாட்டில் ஈடுபாட்டுடன் உழைப்பதை இறைபணியாகக் கொண்டு சேவைசெய்து வருகிறார். "பிறர் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்" என்ற முதுமொழியில் நம்பிக்கை கொண்டுழைப்பவர். இவ்வாறான பண்புகளைத் தன்னகத்தே கொண்ட உபைத்துல்லா நல்லனவற்றையே சிந்திப்பவர். நல்லனவற்றையே எழுதுபவர். அவரது ஆக்கங்கள் அனைத்தும் அவற்றைப் பறைசாற்றி நிற்கின்றன. இவரது படைப்புக்களில் மனித நேயத்தைக் காணலாம். ஒடுக்கப்பட்ட மனிதர்களது வாழ்வியலைக் காணலாம். அந்த மனிதர்களது உள்ளங்களில் குடிகொண்டுள்ள அபிலாசைகளையும். அவலங்களையும் காணலாம். இன. மத. மொழி வேறுபாடுகளைக் கடந்து ஒற்றுமை. சாந்தி. சமாதானத்தை வற்புறுத்துவதை உணரலாம். உள்ளத்தில் உதயமாகும் நல்ல எண்ணங்கள் தான் ஒரு மனிதனின் மனிதப்பண்புகளை எடைபோடும் நிறைகோலாகும். உபைத்துல்லா புனித எண்ணங்களால் உயர்ந்து நிற்கிறார். அவற்றை எழுத்தில் வடித்து வைக்கின்றார்.

**- கேணிப்பித்தன் ச.அருளானந்தம்.**

ISBN 978-955-1098-13-1

வானவில்